Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ஆபா 12/00

දිනමුරසු වාරමලර් ஜூன் 18-24, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 361

# புலம் பெயர் தமிழரின் அரசியல் எதிர்காலம்



மலையாளத்தில் மாவீரன்

சங்கீதா சங்கடம்

# கொலைகாரியான தாய்

# முரசம்

## சுமைக்குமேல்சுமை

***அன்புள்ள உங்களுக்கு,***
***வணக்கம்.***

சில மாதங்களுக்கு முன்னர் தான்
உயர்த்தப்பட்ட
காஸ் விலை திடீரென
30 வீதத்தால்
மறுபடி அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசிக் கட்டணங்கள்
அண்மைக் காலத்துக்குள்
பலதடவை அதிகரித்து
மீண்டும் அதிகரிக்கவுள்ளது.
மின்சாரக் கட்டணமும்
உயரவுள்ளது.
எரிபொருள் விலையும்
உயர்ந்தது.
பஸ் கட்டணங்கள்
கூட்டப்பட்டன.
இன்னும் அதிகரிக்கும்படி
நிர்ப்பந்திக்கப்பட்டு
வருகிறது.

யுத்தத்தினால் விளைந்த
நிதிநெருக்கடியின் பேறாக
நாட்டு மக்களிடம்
ஒரு நாள் சம்பளப்பணத்தைக்
கோரவேண்டிய நிலை
அரசாங்கத்துக்கு
ஏற்பட்டுள்ளது.

இதே வேளை
யுத்தம் உக்கிரமாகத்
தொடர்ந்து கொண்டிருக்கும்
யாழ்ப்பாணக் குடாநாட்டுள்
உள்ள மக்கள்
இதற்கு மேலான பெரும்
துன்பத்தை அனுபவித்தபடி
நிதமும் அல்லல்படுகிறார்கள்.

போக்குவரத்துக்கான
விமானசேவை
இடை நிறுத்தப்பட்டுவிட்டதுடன்
கப்பல் சேவையும்
நிச்சயமற்றதாகியுள்ளது.

அதனால்,
பாவனைப் பொருட்களுக்கான
தட்டுப்பாடு பற்றிய
அச்சம் தலைதூக்கியுள்ளது.
அத்தோடு
பெருமளவு மக்கள்
தம் சொந்த வீடுவாசல்களையும்
பொருட்களையும் கைவிட்டு
அகதிகளாக
வெளியேறியபடி
இருக்கிறார்கள்.

அவர்களைப் பராமரிக்க
சில தமிழ்க் கட்சிகளும்
பொது ஸ்தாபனங்களும்
தம்மாலியன்ற வரை
முயலுகின்ற போதும்
பிரதானமான பங்கை
அரசாங்கமே
ஏற்கவேண்டிய
அவசியம் உள்ளது.

அத்தோடு
யுத்த நெருக்கடிகள்
அங்கு
பொருளாதார
நடவடிக்கைகளைப்
பெருமளவு
பாதிப்புக்குள்ளாக்கியுள்ளன.
வடபுலப் போர்
மக்களைப்
பாரிய பொருளாதார
நெருக்கடிக்குள்
ஒரு சுழிச் சுழல்போல்
இழுத்துச் செல்வதை நாம்
கண்ணெதிரே
காணும் நிலை
இப்போது தோன்றியுள்ளது.

இவ்வேளையில்
தென்னிலங்கையில் மீண்டும்.
தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள்
முடுக்கிவிடப்பட்டுள்ளதற்கான
அறிகுறிகள்
தோன்றியுள்ளன.

கடந்தவாரக் குண்டு வெடிப்பில்
அமைச்சர் சி.வி.குணவர்தனாவும்
தெகிவளை பிரதிமேயர் உட்பட
20 பேரும் கொல்லப்பட்டும்
60 பேர் காயப்பட்டும்
உள்ளார்கள்.

யுத்தமும், அழிவுகள்
மேலும் உக்கிரமடையப்போகும்
அபாயச் சமிக்ஞைகளையே
இவை வெளிக்காட்டுகின்றன.

இந்நிலையில்
இலங்கைப் பாராளுமன்றத்துக்கான
பொதுத்தேர்தலும்
நெருங்கிவருகிறது.

இன்னும்
அரசாங்கம் தான்
முன்வைக்கப் போவதாகக்
கூறுகின்ற
தீர்வுப் பொதி பற்றிய
அரசியல் கட்சிகளுடனான
கலந்துரையாடல்களை
நிறைவு செய்யவில்லை.

இன்னிலையில்
யுத்தத்தின் கதிபற்றிய
அச்சங்களோடும்
அரசியல் தீர்வு என்ன என்று
இறுதி வடிவம்
புரியாத நிலையிலும்.
பொதுத்தேர்தல்கள்
நடைபெறப்போவதாகத்
தகவல்கள் வெளியாகியுள்ளன.

அப்படியானால்,
அரசியல் தீர்வு எவ்வாறு
நிறைவேற்றப்படப்போகிறது
என்ற கேள்விக்குறியோடும்
பொருளாதாரச் சுமைகளை-
யுத்தத்தின் தண்டனையாகச்
சுமந்து கொண்டு,
காத்திருக்க வேண்டியது தான்
இந்நாட்டின் பொதுமக்களின்
தலைவிதியாகிவிட்டது.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்

## பக்தியால் நிரம்புமா?

வசதியான வீட்டின் குழந்தை அது. சாப்பிட பாடாய்ப்படுத்தும். அதனுடைய தாயோ, ஒரு தங்கக் கிண்ணத்தில் சாதத்தைப் பிசைந்து எடுத்துச் சென்று ஊட்டுகிறாள். ஓரிரு கவளம் உண்ட குழந்தை, தானே அந்த சாதத்தை சாப்பிடுவதாகவும், தனக்கு யாரும் ஊட்ட வேண்டாமென்றும் பிடிவாதம் பிடித்தது. அதன் பிடிவாதத்திற்கு ஈடுகொடுக்க முடியாத தாயாரும் தங்கக் கிண்ணத்தை அதனிடம் கொடுத்துவிட்டு, மனம் பதறியபடியே அதன் பின்னாலேயே ஓடுகிறாள். 'தங்கக் கிண்ணத்தைக் குழந்தை கீழே போட்டு விடுமோ, கிண்ணத்துள் இருக்கும் சாதம் சிதறி வீழ்ந்து வீணாகுமோ' என்று பரிதவிக்கிறாள். அந்தத் தாயைப் போன்றவன் தான் இறைவன். நம் பின்னே பதட்டத்துடன் ஓடோடி வருகிறான். கிண்ணத்தினைக் கீழே போட்டு பக்தியை சிதறவிட்டுவிடுவானோ என்று அவனுக்குப் பதட்டம். குயவன் செய்த பாண்டம், தவறி விழுந்து உடைந்தால் சிதறிய பாண்டத்தின் (பாத்திரம்) ஒரு பகுதியால் தண்ணீராவது முகந்து குடிக்கலாம். ஆனால், பிரம்மன் படைத்த பாத்திரம் உடைந்தால் எதற்கும் பயன்படாமல் போய்விடும். அதனால் தான் இறைவன் பரிதவிக்கிறான். மனிதப் பாத்திரம் பக்தியால் நிரம்ப வேண்டும். அது மனித ஆன்மாவை மேன்மைப் படுத்த வேண்டும் என்ற தவிப்போடு இறைவன் நம் பின்னாலேயே 'புரம் திரிந்த செல்வனாக' ஓடோடி வருகிறான். நாம் தான் புரிந்து கொள்ள மறுக்கிறோம்.

ரீ.குணவர்த்தன-கஹுவாஞ்சிக்குடி.



## விசுவாசமில்லாமல்....!

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்!" எபி 11:6.

விசுவாசம் என்றால் என்ன? தேவன் இருக்கிறார் என்றும் தேவனைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.

குழந்தை தன் பெற்றோரையே முழுமையாக நம்பி தனது தேவைகளை அவர்கள் தீர்த்து வைப்பார்கள் என்று நம்புகிறது. அதுபோல நாமும் தேவன் ஜீவிக்கிறார், அவர் நம்மை போஷித்து நடத்துவார் என்றும் நம்ப வேண்டும். இதுவே அடிப்படை விசுவாசம்.

இஸ்ரவேலர் தேவன் இருக்கிறார் என்று நம்பிததான் இஸ்ரவேலை விட்டுப் புறப்பட்டார்கள். ஆனால் தேவனை தேடுகிறவர்களுக்கு நிச்சயமாகப் பலனளிப்பார் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. தேவையேற்பட்ட நேரங்களில் தேவன் சந்திப்பார் என்ற விசுவாசம் இல்லாது முறுமுறுத்தார்கள். அவர்களில் இருவரைத் தவிர மற்ற ஒருவரும் கானானுக்குள் பிரவேசிக்கவில்லை.

"ஆதலால், அவிசுவாசத்தினால் அவர்கள் அதில் பிரவேசிக்கக் கூடாமற் போனார்களென்று பார்க்கிறோம்" எபி. 3:19.

எமக்கும் ஒரு எச்சரிக்கை.

தேவன் உண்டு என்று நம்புகிற பலரும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர் என்பதை அதிகமாக நம்புவதில்லை. நம்புவோம்! விசுவாசிப்போம்!

எம்.வேதமாணிக்கம்-கொழும்பு 05.

## அல்குர்ஆன் எச்சரிக்கும் அநியாய வட்டி

அநியாய வட்டிப் பழக்கம் பல்வேறு புனை பெயர்களில் எம்மிடையே இடம் பெற்று வருவதை இன்று நாம் அவதானிக்க முடிகிறது.

தொழில் செய்யப் பணமில்லாது கஷ்டப்படும் ஏழை மக்கள் செய்வதறியாது ஏதோ ஒரு வழியில் பணம் சேர்த்த தனவந்தர்களிடம் வட்டிக்குப் பணம் பெற்று தொழில் செய்கிறார்கள்.

ஓடியோடி உழைக்கின்றார்கள் இந்த ஈனமற்ற தனவந்தர்களின் உல்லாச வாழ்வுககாக அவர்கள் பெற்ற பணத்திற்கு வட்டிப் பணம் கட்டுகிறார்கள். இது இந்தத் தனவந்தர்களுக்கு அநீதியாகத் தெரியவில்லையா? இதோ அல்குர்ஆன் எச்சரிக்கும் அநியாய வட்டி.

"வட்டியைத் தின்பவர்கள் இறுதித் தீர்ப்பு நாளில் ஷைத்தானின் பிடியில் பட்டு பித்துக் கொண்டவர் போலன்றி வேறு முறையில் எழமாட்டார்கள். ஏனெனில் நிச்சயமாக வர்த்தகம் வட்டியைப் போலவே இருக்கின்றது என்று அவர்கள் கூறியதினாலேயே. ஆனால் அல்லாஹ் வர்த்தகத்தை ஆகுமான ஹலாலானதாக்கி வட்டியை விலக்கி ஹராமானதாக்கியிருக்கிறான்....

அல்குர்ஆன் (2:275-6)

எம்.சி.கலீல்-கல்முனை 05

## கவிதைப் போட்டி இல.361



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 24.06.2000

கவிதைப் போட்டி இல.361
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.358

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**



### பரிசுக்குரிய கவிதை

### திரும்பிப் பாருங்கள்

எங்கே போகிறீர்கள்...
அமைதியைத் தேடியா?
உங்களால் அதைக்
கண்டுபிடிக்க முடியாது!
அமைதி நம் நாட்டை
நெருங்கவே
பயப்படுகின்றது!
வாருங்கள் திரும்பி!

நிலா-கண்டி.

### என்றுமே துயர்

தொலைந்து போன
இருப்பிடம் தேடி
தொலைதூரம்
போகிறோம்
நாமும் அதை நாடி.

தெ.லோஜனா-கொழும்பு-15.

### சோகம்

சுதந்திரமற்ற வாழ்க்கையில்
மனமுடைந்த இவர்கள்
சுதந்திரத்துக்கு வழி தேடி
சோகமாகச் செல்கின்றனரோ...?

சி.சுபாசினி-திருகோணமலை.

### நம்பிக்கை

நாடுவிட்டு
நாடுபோக
நாதியுமில்லை!
ஊருவிட்டு
ஊருபோக
உறவுகளுமில்லை!
கால்போன
போக்கினிலே
காடுமலை
கடக்கிறோம்!
கதியற்ற அகதிகளாய்!

ஆர்.பாலகிருஷ்ணன்-மாத்தளை.

### எது நடக்கும்?

நடக்கும் வழியிலே
வாவென்று அழைக்குமா
சமாதானத்தேசம்-இல்லை
போகும் வழியெல்லாம்
போ வென்றொலிக்குமா
போரின் கோஷம்?

-பசறையூர் மல்லிகா பத்மநாதன்-

### எப்போது?

போர் அழிவுக்கு அஞ்சி
புறம் காட்டிச் செல்லும்
அகதிப்பயணம்
எப்போது முடியும்?

கமலதாஸ்-பாண்டிருப்பு-02.

### இதுவோ....!!??

அண்டை ஊர் சென்று வந்தோம்-
ஐயோ
அடையாளமே தெரியவில்லையே
இவ்விடமோ? அவ்விடமோ?-இல்லை
இது நம்ம ஊரில்லையோ...!!??

அ.ஜூட்ஸன்-கொழும்பு-13.

### நாமிருவர் எமக்கிருவர்

பிள்ளைச் செல்வங்கள்-என்றும்
அழியாக் கோலங்கள்!
நாம் இருவரும்-எமக்கு
இருவருமாக வாழ்வோம்!

சாந்திமதி சுப்ரமணியம்-ஸ்பிரிங்வெலி.

### யதார்த்த யுத்தம்?

விண்ணையும் மிஞ்சும் யுத்தத்தினால்
வெட்ட வெளியான வீதிகளை
விட்டுச் செல்ல நேரமும்
வந்திட்டதாலோ விரைகின்றீர்கள்?

ரம்லா ரவுஸ்தீன்-நாவலப்பிட்டி.

### இன்பக் குடும்பம்!

இடம் விட்டு இடம் செல்லும்
இடம்பெயர் குடும்பமல்ல இது!
இயற்கை அழகை நாடிச் செல்லும்
இன்பக் குடும்பமிது!

சிவஸ்கந்தா சசிதரன்
-கொழும்பு-13.

### அகல்வு

அளவான குடும்பம்
அவசரமாக புறப்படுகின்றார்கள்
போரில்லா புது உலகம்
நோக்கி...!

ம.ஞானராஜா-வாழைச்சேனை.

### பயணம்

வாழ வழி உண்டு;
சாக விதி உண்டு;
புறப்படுவோம்....
இருந்து பலனில்லை;
பயணம் பயமில்லை; - இன்றும்
நிலைமை சரியில்லை!

கே.அன்ரனி-திருகோணமலை.

# வாசக(ர்)சாலை



ஈழப்பிரச்சனை பற்றி தமிழ் நாட்டு கண்ணோட்டம் பற்றிய கானகன் தொகுப்பு வரவேற்கத்தக்கது 'செய்திச் சிதறல்' மற்றும் இர்விங் வாலஸின் 'சகலமும் நானே' இருவாரத் தொடர் படங்களில் வரும் திகில் காட்சிகள் போலவே இருந்தது.

ரெங்கநாதன் அசோக்குமார்-டிக்கோயா.

பெருமைக்குரிய முரசே,

அருமையான பல ஆக்கங்களை நீ வாரா வாரம் சுமந்து வந்து எங்களை மகிழ்வூட்டுகின்றாய், நன்றிகலந்த பாராட்டுக்கள்,

தலைப்பிட்டு செய்திகளைத் தரும் உனது பாணி தனிச்சிறப்பு. தமிழக முதல்வர் கருணாநிதி பற்றிய அரசியல் நாடகம் அம்பலமாக்கப்பட்டது இக்கட்டத்தில் பொருத்தமானது. வர வர 'சினி விசிட்' ஆபாசம் ததும்பும் படங்களுடன் வருவது அருவருப்பாகவுள்ளது.தினமுரசு ஒரு சிறந்த பத்திரிகை. சினிமாவை சற்றுக் குறைத்து வேறு பல பொது அறிவு ஆக்கங்களைப் போட்டால் நல்லது. வாரம் ஒரு நாடு மீண்டும் அறிமுகப்படுத்தவும்.

கவிக்குமிலன்-சேனையூர்-06

வாசகர் உள்ளங்களை மகிழ்வூட்டும் முரசே,

வற்றாத பாசமுள்ள உந்தன் வாசகர்கள் இருக்கும் வரை, உனது வளர்ச்சி நாளுக்கு நாள், வாரத்துக்கு வாரம், காலத்துக்குக்காலம் மேலும் மேலும் வளர்ச்சியே. இது வெறும் புகழ்ச்சியில்லை. உண்மையே, ஆசிரியர் வாசகர்களுடன் அன்புள்ள உங்களுக்கு என்று ஆரம்பிக்கும் 'முரசம்' கடிதப் பகுதி சரியான பாதையில் நின்று வழிகாட்டி வரும் உண்மைக்கருத்துக்களை உணர்த்தி வருவது வாரா வாரம் முரசுக்கு மகுடம் சூட்டினாற்போலுள்ளது. இதை எவரும் மறுக்கமுடியாது. 'இடி அமீன் தொடர்' திகில் நிறைந்த மர்மப்படம் ஒன்று ஓடிமுடிந்ததைப் போல் நெஞ்சத்தில் நிறைந்து மறைந்துள்ளது. அப்பப்பா பயங்கரப் போர்வழிதான் 'இடி அமீன்', 'சிகப்புவணக்கம்' சிறப்பானது.

அ.அரசரெத்தினம்-சேனையூர் 06.

தினமுரசுக்கு!

358ம் முரசில் வந்த 'அப்பா வீரப்பனுக்கு' என்ற உருக்கமான கடிதத்தை படித்த எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது. தகவல் பெட்டியில் வந்த சிறிய பைபிள், பிரிக்கப்பட்ட இரட்டையர்கள் மிகவும் அபாரம். நெற்றி ஜோதிடம் நன்றாக இருந்தது. செய்து பாருங்கள், ஒட்டகச் சிவிங்கி நன்றாக இருந்தது. இப்படி பல செய்து வீடு நிறைய வைத்திருக்கிறேன். முரசு இந்த உலகத்தில் உள்ள பத்திரிகைகளில் முதல் தர பத்திரிகை ஆகும்.

ரி.அரவிந்த்-தப்போவ.

அன்புடன் முரசிற்கு!

வியாழன் தோறும் நீ! பவனிவரும் போது தவறாது உனைக் கையில் ஏந்தி, தொடக்கம் முதல் இறுதி வரை அனைத்து அம்சங்களையும் வாசித்து முடிக்கும் வாசகர்களில் நானும் ஒரு வன். முரசே! நீ! தாங்கிவரும் அம்சங்கள் பிரமாதம். இருந்தும் தமிழ் மக்களிடையே! வியாழனை எதிர்பார்த்து விரல் எண்ணும் தன்மை ஏனோ குறைந்து கொண்டுதான் போகின்றது. உன் பாதையில் படுகுழி வெட்டப்பட்டிருந்தது உண்மை தான்! இருந்தும், 'றோசா மலரை விரும்பும் நாம் அதைப் பறிக்க எத்தனிப்பவர்களாக இருந்தால் அதன் அருகிலுள்ள முட்களால் ஏற்படும் வேதனைகளையும் தாங்கிக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.' காலத்தின் கோலத்தால் முன்பு போன்று பேனாக்களுக்கு சுதந்திரம் கொடுக்கமுடியாது என்பதால்தான் முன்னைய தன்மை சிறிது குறைந்துள்ளது என்பதை மக்கள் நன்கு அறிவர். 'தேன்கிண்ணம்', கதைப்பகுதி போன்ற, புதிய எழுத்தாளர்களுக்கு களம் அமைக்கும் புதிய புதிய பகுதிகளை உருவாக்கினால் என்ன? அதன் மூலமாவது முன்பைப் போன்று வாசகர் இதயங்களில் உனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்ளலாம்.

'உன் உயர்வுக்கு என்றும் உன்னுடன்'
ரி.குணவர்த்தன-கஹுவாஞ்சிக்குடி.

## சைவமா அசைவமா?

தினமுரசு 14.05.2000ல் வெளிவந்த கோழி முட்டை, பால், இரண்டும் சைவமா, அசைவமா என்ற செய்தியை வாசித்தேன். இந்திய முன்னாள் அமைச்சர் மேனகா காந்தி கூறியமாதிரி பால், அசைவம் தான். காரணம் பசுவின் இரத்தத்தில் இருந்து மூன்றில் ஒரு பங்கை எங்களுக்குப் பாலாகத்தருவது அதன் மாமிச உடம்பில் இருந்துதான். அசைவக்காரர் இறைச்சியை சாப்பிடுகின்றனர். சைவக்காரர் பால் குடிக்கின்றனர். இது உற்பத்தியாகும் இடம் சுத்தமாமிசம். முட்டையும் அப்படித்தான். அது உருவாகும் இடம் மாமிச உடம்பு.

அதுவும் அசைவம் தான். மற்றும் ஒரு விசயம், தாய்ப்பால் சைவமா? அசைவமா? அதுவும் உடம்பில் இருந்து சுறப்பதுதானே? மனிதர்களின் உடம்பும், மிருகங்களின் உடம்பும், பறவைகளின் உடம்பும் மாமிசமே! அப்போ அதில் இருந்துவரும் முட்டை, பால் இரண்டும் அசைவம் தான்.

இறப்பர் மரத்தில் இருந்து வரும் பால் தான் சுத்தமான சைவப்பால். ஆனால் அதை மனிதர்கள் குடிப்பதில்லை. பிராமணர்கள் அந்த காலம் பால் சைவம் என்று ஏற்றுக் கொண்டது அப்படி என்றால் பாலை குடிப்பதுவும் ஒன்றுதான். அதை உற்பத்தியாக்கும் பசுவின் இறைச்சியையும் சைவர்கள் சாப்பிடமுடியும்தானே? ஆனபடியால் முட்டையும் பாலும் அசைவம் தான் என்பது எனது வாதம்.

எஸ்.ஆனந்த ஜோதி எட்மண்டன், இலண்டன்.

**குறிப்பு :** இக்கருத்தையொட்டியோ வெட்டியோ வாசகர்களின் கருத்தை சுருக்கமாக எழுதி அனுப்பினால் பிரசுரிக்கலாம்.
-ஆசிரியர்-

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப்பிழையோ, அல்லது ஏதாவது பக்கதில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வெண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# ஏமாற்றம் தந்த இந்திய அமைச்சரின் வரவு!

# தற்காலிக போர் நிறுத்தத்துக்குக் கூட வழி வகுக்கவில்லை!

**இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் யஷ்வந்த் சிங் அவர்கள் இங்கு வரப் போகிறார் என்ற செய்தி வெளியானதும் இந்நாட்டு மக்கள் பலரும், இந்தியா தலையிட்டு இங்குள்ள பிரச்சனைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்போகிறது என்றே பெரிதும் எதிர்பார்த்தனர். ஆனால் அவருடைய வரவு தற்காலிகப் போர் நிறுத்தத்துக்குக் கூட வழிவகுக்க வில்லையே என்று இங்குள்ள மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். போரினால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் துன்பதுயரங்கள் இக்காலத்தில் நீங்கப் போவதில்லை என்றே விசனமடைந்துள்ளனர்.**

இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் யஷ்வந்த் சிங் அவர்கள் இலங்கைக்கு வந்தார். ஏறத்தாழ 24 மணிநேரம் வரை மட்டுமே இங்கு தங்கினார். ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், வெளியுறவுத்துறை அமைச்சர், தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடிவிட்டுச் சென்று விட்டார்.

யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கும் அரசப்படைகளுக்குமிடையில் பாரிய மோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இதில் இந்தியா தலையிட்டு ஒரு தீர்வினை ஏற்படுத்த வேண்டும் என்ற அழுத்தம் இலங்கையிலும் இந்தியாவிலும் ஏக காலத்தில் எழுந்தது.

அரசாங்கத்தின் சார்பில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிட வேண்டும் என்ற கோரிக்கை விடுவிக்கப்பட்டது. ஆனால் இராணுவ ரீதியில் எத்தகைய உதவியும் அளிக்கப் படமாட்டாது என்று திட்டவட்டமாக இந்தியா அறிவித்து விட்டது. இருப்பினும் திருவனந்தபுரத்தில் இந்திய விமானப்படை விமானங்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டன. தென்னிந்தியக் கடற்கரையோரங்களில் இந்திய கடற்படை கப்பல்களின் நடமாட்டம் அதிகரித்தது. தென் இந்திய இராணுவத்தளங்களிலும் படைகள் குவிக்கப்பட்டன.

இத்தகைய நடவடிக்கைகள் இலங்கை மீது இந்திய இராணுவத் தலையீடு ஏற்படுமோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தியது.

இந்தியாவின் நிலைப்பாடு குறித்து பல தரப்பட்ட அபிப்பிராயங்களை இந்திய அரசியல் தலைவர்கள் அவ்வப்போது வெளியிட்டு வந்தனர்.

சில நாட்களுக்கு முன்னர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இலங்கைக்கு வரப் போகிறார் என்றொரு திடீர் அறிவித்தல் விடுக்கப்பட்டது. இதனால் இலங்கை வாழ் மக்கள் அனைவரும், இந்தியா ஏதோ ஒரு வகையில் இலங்கைப் பிரச்சனையில் தலையிடப் போகிறதென்று அங்கலாய்ப்புடன் காத்திருந்தனர்.

தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்லாமல் இந்நாட்டில் வாழும் சகல இன-மதங்களைச் சேர்ந்த மக்கள் பெரிதும் எதிர்பார்த்தனர். எட்டத்திலிருந்த வண்ணமே கருத்துக்களைக் கூறி வந்த இந்தியா, கிட்டத்தில் வந்து, பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வழிவகை களை கூறப் போகிறது என்று காத்திருந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தளவில் எதனையும் வெளிப்படையாகக் கூறாமல் அமைச்சர் யஷ்வந்த் சிங் சென்றுவிட்டார். இதனால் இந்நாட்டு மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

யாழ் குடா நாட்டில் மோதிக் கொண்டிருக்கும் இரு தரப்பினரும் கண்மூடித்தனமான தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அங்கு பெரும் பிரளயமே நடைபெற்றுக் கொண்டு வருவதாக அறியப்படுகிறது. அங்கு வாழும் இலட்சக் கணக்கான பொதுமக்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பசியாலும் பிணியாலும் பாதிக்கப்பட்டு சீர் குலைந்து சின்னாப்பின்னப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்களுடைய இப்போதைய உடனடித்தேவை போர் நிறுத்தம் ஒன்றே.

அமைச்சர் யஷ்வந்த் சிங் இலங்கைக்கு 10 கோடி டொலர்களை இந்தியா கடனாக வழங்கவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் ஒரே முகமாக-மத்தியஸ்தத்துக்கு அழைத்தால் மட்டுமே இந்தியா தலையிடும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆளும் தரப்பினரையும் எதிர்க்கட்சியினரையும், இன நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கான அரசியல் தீர்வு ஒன்றினைத் துரிதமாக நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யுமாறு யஷ்வவந்த் சிங் அவர்கள் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்தியாவுக்கு அக்கறை இருப்பதாகவும் அமைச்சர் யஷ்வந்த் சிங் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளுடன் பேசும் போது குறிப்பிட்டார்.

இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் யஷ்வந்த் சிங் அவர்கள், மோதிக் கொண்டிருக்கும் இரு தரப்பினர் மீதும் தமது செல்வாக்கைப் பிரயோகித்து உடனடியாக தற்காலிகமாவது போரை நிறுத்துவதற்கு அறைகூவல் விடுப்பாரென்று அம் மக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் ஏற்கனவே எட்டத்தில் இருந்து எத்தகைய கருத்துக்களை இந்தியத் தலைவர்கள் கூறிவந்தனரோ அக்கருத்துக்களையே இங்கு வந்தும் கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்.

தற்காலிகமாகவாவது "போரை நிறுத்தி விட்டு அமைதிப் பேச்சைத் தொடருங்கள்" என்று இந்திய அமைச்சர் ஒரு வார்த்தை கூறியிருப்பாரானால் போரிடும் இரு தரப்பினரும் அவ்வார்த்தைக்கு நிச்சயம் மதிப்புக் கொடுத்திருப்பார்கள்.

அத்தகைய வார்த்தையொன்றை அமைச்சர் கூறாமையினால் இந்தப் போர் அண்மைக் காலத்தில் ஓயப் போவதுமில்லை, எங்களுடைய துன்பதுயரங்கள் இந்தக் காலத்தில் மறையப் போவதுமில்லை என்றே மக்கள் கூறிப் புலம்புகின்றனர்.

## தொடரும் கைதுகள்!

இரத்மலானையில் கடந்த 7ம் திகதி இடம் பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பாக பொலிசாரும் ஆயுதப்படையினரும் கொழும்பின் பல இடங்களிலும் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர் சுரேந்திரன் விமலநாதன், அண்மையில் அவரில்லத்தில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளார். அவருடனிருந்த அவரது சகோதரிகளான சுபாஜினி, மற்றும் கலைச்செல்வி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கலைச்செல்வி விமலநாதன் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் பயிற்சி ஆசிரியையாகக் கடமை பார்க்கிறார்.

## தாக்குதல் நடத்திய ஒன்பது பெண் புலிகள் பலி!

ஓமந்தை-விளக்கு வைத்த குளத்தில் அரசாங்கப் படையினருடன் இடம் பெற்ற மோதலில் ஒன்பது பெண்புலிப்போராளிகள் கொல்லப்பட்ட தகவலை புலிகள் தெரிவித்துள்ளனர்.

பலியான ஒன்பது பெண் புலிப்போராளிகளும் யாழ் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவருகிறது.

பே.புவனேஸ்வரி (மதி அல்லது வைகை), சி.ஜெனி(தயாளினி), ந.தாரணி(யாழ்மொழி), ந.கலாவதி(புவனா), யோ.நிர்மலா(கலைப் பிரியா) சு.விஜயகலா (சுகந்தி), வே.மகேஸ்வரி (இலக்கியா), த.கௌசலா (சுதனி), த.புஸ்பமலர் (குறிஞ்சி) ஆகியோரே கொல்லப்பட்ட பெண்புலிகளாவர்.

மட்டக்களப்பு-காத்தான்குடியில் கடந்த 05ஆம் திகதி இடம் பெற்ற சம்பவத்தின் போது கொல்லப்பட்ட நபரின் சடலத்தைப் புலிகள் உரிமைகோரிப் பொறுப்பேற்றுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கூடாகச் சடலம் புலிகளிடம் ஒப்படைக்கப் பட்டது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஓயாத அலைகள்-3, நடவடிக்கையின் போது தமது தரப்பில் இரண்டாம் லெப்டினன்ட் சு.சிவலோகநாதன் (அறிவரசன்- திருகோணமலை) கப்டன் இ.சாந்தரூபன்(நற்றவன்-யாழ்ப்பாணம்) ஆகியோர் கொல்லப்பட்ட விவகாரத்தையும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

## ஆசிரியர் பற்றாக்குறை

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில், கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்ப்பாடசாலைகளில் 1776 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக அறிவிக்கப்படுகின்றது.

நுவரெலியாவில் 400 ஆசிரியர்களுக்கும் அம்பகமுவ பிரதேசத்தில் 400 ஆசிரியர்களுக்கும் கம்பளைப் பிரதேசத்தில் 200 ஆசிரியர்களுக்கும் வெற்றிடங்கள் இருப்பதாகவும், ஆசிரியர் தட்டுப்பாடு காரணமாக பல கஷ்டப்பிரதேச பாடசாலைகள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சு கண்டறிந்துள்ளது.

இதே வேளையில் ஆசிரியர்கள் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களில் அங்கு கடமை புரிவோர் தமது கடமையை உணர்ந்து கூடுதலான லீவு பெறாமல் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவுமாறு மத்திய மாகாண தமிழ், இந்து கலாசார அமைச்சர் திரு.வே.இராதாகிருஷ்ணன் ஆசிரியர்களைக் கேட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க இதே மாகாணத்தில் இயங்கும் முஸ்லிம் பாடசாலைகளிலும் சுமார் 250 ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## பஸ் கம்பனியில் நிலவும் சீர்கேடுகள்!

நியூ ஈஸ்டேர்ன் பஸ் கம்பனியினால் போதுமான அளவு இலாபமீட்ட முடியாமலும் பொதுமக்களுக்கேற்ற ஒழுங்கான பஸ் சேவைகளை நடத்த முடியாமலும் இருப்பதாக பொதுமக்கள் முறையிடுகிறார்கள்.

நியூ ஈஸ்டேர்ன் பஸ் கம்பனி (NEBC) பணிப்பாளர் சபையின் திறமையற்ற நிர்வாகத்தினால் அந்தக் கம்பனி இலாபமிழந்து வருவதாகவும் பொதுமக்களுக்கு ஒழுங்கான சேவைகளையும் வழங்க முடியாது அது திண்டாடுவதாகவும் குறை கூறப்படுகிறது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கியதாக 13 டிப்போக்களைக் கொண்டு இயங்கும் நியூ ஈஸ்டேர்ன் பஸ் கம்பனியில் சுமார் 100 சாரதிகளுக்கு நீண்ட காலமாக வெற்றிடங்கள் இருந்து வருகின்ற போதிலும் இன்னமும் அவை நிரப்பப்படவில்லை. நிருவாகத்திற்குள் நடக்கும் இழுபறி நிலையே இதற்குக் காரணமென்று அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதே போன்று டயர் பொருத்துநர்கள், நடத்துநர்கள், மெக்கானிக்குகள் என்போருக்கும் பல வெற்றிடங்கள் இருந்து வருகின்றன.

சில டிப்போக்களில் ஒரு மெக்கானிக்கு கூட இல்லாத நிலை காணப்படுகிறது.

சாரதிகள் போதியளவு இல்லாததினால் பயணிகளுக்குச் சீரான பஸ் சேவையை வழங்கமுடியாது பஸ்களை நிறுத்தி வைக்க வேண்டிய சூழ்நிலையேற்பட்டுள்ளது.

இதே வேளை அளவுக்கதிகமான முகாரிகளையும் (Forman) காரியாலய உத்தியோகத்தர்களையும் சில டிப்போக்கள் நியமித்திருப்பதால் ஊழியர்களுக்கான சம்பளப் பணத்தைக் கூட வழங்க முடியாத நிலை தோன்றியிருப்பதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## மறைந்த அமைச்சருக்கு கண்டியில் அனுதாபம்

மொறட்டுவையில் அமைச்சர் திரு.சி.வி.குணரத்ன குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதையடுத்து இப்பிரதேச சகல இன மக்களும் பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தனர்.

அன்னாரின் மரணம் குறித்து அஸ்கிரிய பௌத்த பீடாதிபதியும் கண்டி மறைமாவட்ட ஆயர் உட்பட பலர் அனுதாபங்களை வெளியிட்டுள்ளனர்.

காலஞ்சென்ற அமைச்சர் கத்தோலிக்கராக இருந்தும் கூட அவர் ஆற்றிய அரிய பணிகள் குறித்தும் இனங்களுக்கிடையே அவர் கண்டியில் இடம்பெற்ற சமூக நல்லுறவு, புரிந்துணர்வு ஆகியன தொடர்பான கலந்துரையாடல்களில் கலந்து கொண்டு ஆற்றிய பங்களிப்பு குறித்தும், நன்றிப் பெருக்குடன் நினைவு கூரும் அதேவேளையில் அவரது பிரிவு பேரிழப்பாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மொரட்டுவை பல்கலை மாணவர்கள் கைதான சம்பவம்

போர் வீரர் தினத்தன்று இரத்மலானையில் நிகழ்ந்த குண்டு வெடிப்பையடுத்து மொரட்டுவைப் பல்கலைக்கழக மாணவர்கள் 67 பேர் கைது செய்யப்பட்டனர்.

அன்றிரவு பல்கலைக்கழக விடுதிக்குள் நுழைந்த பாதுகாப்புத் தரப்பார், அங்கிருந்த 58 மாணவர்களை விசாரணைக்கென அழைத்துச் சென்றதுடன், விடுதிக்கு வெளியே வீடுகளில் தங்கியிருந்த மாணவர்களையும் கூட்டிச் சென்றிருந்தனர்.

பெண்கள் விடுதிக்கும் பொலிஸார் நுழைய முயன்ற போதிலும் விடுதிப் பொறுப்பாளர் அனுமதிக்காததால் சில மாணவிகளை வெளியே அழைத்து விசாரித்து விட்டு ஒரு மாணவியை மட்டும் அழைத்துச் சென்றனர்.

விசாரணைகளின் போது பல்கலைக்கழக அடையாள அட்டைகள் புறக்கணிக்கப்பட்டு தேசிய அடையாள அட்டைகளே பரிசீலிக்கப்பட்டன.

பொலிஸாரின் நடத்தையைக் காட்டிலும் பொலிஸாருக்கு வழிகாட்டி வந்த சக சிங்கள மாணவர்களின் நடத்தையே தமக்குக் கவலை தருவதாகத் தமிழ் மாணவர்கள் தெரிவிக்கின்றனர். தாங்கள் இவ்வாறு நடத்தப்படுவதற்குப் பல்கலைக்கழக நிர்வாகமும் மறைமுகமாக உதவியிருக்கிறது என்ற கருத்தும் மாணவரிடையே காணப்படுகிறது.

8ம் திகதி இரவு 19 மாணவர்கள் விடுவிக்கப்பட்ட போதிலும் செய்தி எழுதப்படும் இன்றுவரை ஏனைய மாணவர்கள் விடுவிக்கப்படவில்லை. மாணவர்கள் கைது விடயத்தால் சில பரீட்சைகளும் ஒத்திப் போடப்பட்டிருக்கின்றன.

## பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு-மண்முனைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் ரெலோ இயக்க உறுப்பினருமான திரு.க.நவரெத்தினராஜா றொபேர்ட்(35) புலிகளின் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

மே ஏழாம் திகதி பகல் மட்டக்களப்பு மத்தியவீதி-ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

மண்முனைப் பற்றுப் பிரதேச செயலகத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் இவர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இந்தச் சந்தியில் வழி மறித்த புலிகள் உறுப்பினர் பாய்ந்து சுட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

கூடவே இருந்த மற்றொரு ரெலோ உறுப்பினரான எஸ்.சி. உலகசேகரம் (26) என்பவரும் துப்பாக்கிச் சூட்டில் காயம் பட்டார்.

காலஞ்சென்றவர் மண்முனைப் பற்றுப் பிரதேச சபையின் தலைவராக இருக்கும் போது அவரது முயற்சியில் பல பொதுநலச் சேவைகளை முன்னின்று செயல்படுத்தினார் என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

1995 ஆம் ஆண்டும் அவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தி லிருந்து உயிர் தப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுடப்பட்ட பின் மட்டக்களப்பு நகர் போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டுச் சோதனை நடத்தப் பட்டபோதிலும் துப்பாக்கிதாரி எவரும் அகப்படவில்லை.

வடக்கு கிழக்கில் போரில் ஈடுபடும் படையினருக்கு கௌரவமளிக்கும், மரணித்த யுத்த வீரர்கள் தேசிய தினத்தன்றே இச்சம்பவம் இடம்பெற்றது.

அன்றைய தினம் நாடெங்கிலும் காலை 9.30 இலிருந்து 2நிமிடத்திற்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது நினைவிருக்கலாம்.

## மதுபானக் கடைகளை அகற்ற ஆலோசனை

(கண்டி நிருபர்)

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை அமைந்துள்ள இடத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் எல்லைக்குள் இயங்கிவரும் சகல மதுபான சாலைகளையும் மூடிவிட உதவுமாறு அஸ்கிரிய பீடத்து மகாநாயக்கர் ஜனாதிபதி அவர்களைக் கேட்டுக் கொண்டதன் பேரில் மத்திய மாகாண சபை இந்த வேண்டுகோள் குறித்து ஆராய இருக்கிறது.

இது தொடர்பான பிரேரணை ஒன்றையும் சமர்ப்பித்து அது குறித்து விவாதிக்கவும் முதலமைச்சர் நந்தமித்திர ஏக்கநாயக்க இணங்கி இருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஒரு கிலோமீட்டர் எல்லைக்குள் சுமார் 16 மதுபானசாலைகள் இயங்கி வருகின்றன.

## கால் நடை வைத்தியர் அலுவலகம் திறப்பு

"திருகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவில் அண்மையில், வடக்கு கிழக்கு மாகாண கால்நடை உற்பத்திச் சுகாதார திணைக்களத்தினால் ஒரு கால்நடை வைத்தியர் காரியாலயமும், மருந்தகமும் தம்பலகாமம் கிராமத்தில் அமைந்துள்ள கமநல சேவை கேந்திர நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இக்காரியாலயத்தின் மூலம் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கிய சகல கிராமங்களிலுமுள்ள கால்நடைகளின் சுகாதாரம், இனவிருத்தி தொடர்பான சேவைகளும், மற்றும் கால்நடை அபிவிருத்தி, விரிவாக்கல், சேவைகளும் பண்ணையாளர் களுக்கு எதிர்காலத்திலும் தொடர்ந்து வழங்கப்படும் என்று பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.அருளையா அறிவித்துள்ளார்.

## இ.பொ.ச.பஸ் வண்டி–புலிகளால் கடத்தல்

மட்டக்களப்பு-களுவாஞ்சிக்குடி டிப்போவுக்குச் சொந்தமான பயணிகள் போக்குவரத்து பஸ் ஒன்று புலிகளால் கடத்திச் செல்லப்பட்டது.

வாழைச்சேனை-காகித ஆலையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி இந்த 60-4061 இலக்க பஸ் வந்து கொண்டிருக்கும்போது வந்தாறுமூலை அம்பலத்தடியில் வழிமறித்து பஸ்ஸில் ஏறிக் கொண்ட புலிகள் பஸ்ஸைக் கடத்திச் சென்றனர்.

பஸ்ஸிலிருந்த பயணிகள் யாவரும் இறக்கி விடப்பட்ட பின்னரே பஸ் கடத்தப் பட்டதாகத் தெரிகிறது. 12ம் திகதி காலை 9.15 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஏற்கெனவே இதே இடத்தில் பிரதேச செயலாளரின் பிக்-அப் வாகனமொன்றும் தனியாருக்குச் சொந்தமான பெரிய பயணிகள் பஸ் ஒன்றும் கடத்தப்பட்டது நினைவிருக்கலாம். கடந்த எட்டு வருடங்களுக்குப் பின் கிழக்கில் அரசுக்குச் சொந்தமான பஸ்வண்டியொன்று கடத்தப்பட்டிருப்பது இதுவே முதற் தடவையாகும்.

## செஞ்சிலுவைச் சங்க நோயாளர்களுக்கான கப்பல் சேவை

ஜூன் மாதம் 6ம் திகதி திருகோணமலையிலிருந்து யாழ்குடாநாடு நோக்கிப் புறப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரின் கப்பல் 8ம் திகதி 68 தபால்பைகளையும் ஏற்றிக்கொண்டு 13 நோயாளர்களுடன் திருகோணமலை சேர்ந்துள்ளது.

அடுத்து ஜூன் 12, 19, 22, 27 ஜூலை 4 ஆகிய தினங்களில் புறப்படவுள்ள கப்பல் ஜூன் 14, 21, 24, 29 ஜூலை 6 ஆகிய திகதிகளில் திரும்பி வரவுள்ளதாக சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு முரசிடம் தெரிவித்துள்ளது.

நோயாளர்களை வடபகுதியிலிருந்து ஏற்றிவரும் பணியில் ஈடுபட்டுள்ள போதிலும் சுகமடைந்த நோயாளர்களை வடபகுதிக்கு அழைத்துச் செல்லும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. வடபகுதி நிலமை கருதி இம் முடிவு எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது.

## கண்டி மாநகர வீதி ஓரங்களில் அங்காடிகள் அகன்றனர்

(கண்டி நிருபர்)

கண்டி மாநகரின் பிரதான வீதிகளில் நிலவிய அங்காடி வியாபாரிகளின் தொல்லை ஓரளவு குறைந்திருப்பதாக பாதசாரிகள் மகிழ்ச்சியும் திருப்தியும் தெரிவிக்கின்றனர்.

தலதா வீதி, கொழும்பு வீதி, மத்திய சந்தை ஆகியவற்றின் இரு பக்க நடைபாதைகளில் மரக்கறி மற்றும் ஜவுளி, பழவகைகளை விற்றுத் திரிந்து கொண்டு சகிக்க முடியாத இரைச்சலை உண்டு பண்ணியதுடன் மக்களுக்குத் தொல்லை கொடுத்தும் கொண்டிருந்த நிலைமாறியது குறித்து இந்த மகிழ்ச்சியை அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டி மாநகர சபை உறுப்பினர்கள், பொலீஸார் பொதுமக்கள் ஆகியோரின் புகார்கள் மாநகர சபை ஆணையாளருக்குத் கிட்டியதை அடுத்தே இந்நிலை சீர்ப் படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சன நடமாட்டத்தால் கண்டி மாநகரம் முன்னைவிடவும் இப்பொழுது நெரிசலாகக் காணப்படுகின்றது.

உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்

TRADE MARK

* காய்ச்சல் * தலைவலி
* தலைச்சுற்று * தலைப்பாரம்
* ஜலதோஷம்
* இருமல்
* மூக்கடைப்பு
* பல்வலி
* காதுவலி
* வயிற்றுவலி
* வாதத்தால் வரும் வலிகள்
* உணர்ச்சியற்ற பாகங்கள்
* சுளுக்கு
* தசை வலிகள்
* பூச்சிக் கடிகள்
* பிரயாணக் களைப்பு
* மதுவால் ஏற்படும் பிரச்சினை



கோடாலித்தைலம்

Rs. 20.00 Only (3ml)

**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி.**

ஏக விநியோகஸ்தர் :

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
Tel : 888214 Fax : 682984


## 2வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் கௌதம் / 14.06.2000

கொழும்பைச் சேர்ந்த சிவஜோதி-உமா தம்பதிகளின் செல்வப்புதல்வன் கௌதம் தனது 2வது பிறந்த தினத்தை ஜெர்மனியிலுள்ள தனது இல்லத்தில் (14/06/2000) அன்று வெகு விமர்சையாகக் கொண்டாடினார்.

இவரை வெள்ளவத்தை தாத்தா, மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் அலுத்மாவத்தை தாத்தா, ஆச்சி மாமாமார், மாமி, சித்தி, சவூதி பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் ஐயப்பன் அருள் பெற்று பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: N.SIVAJOTHY
BIRKEN STRASSE - 51
10559 BERLIN, GERMANY.

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் சஞ்சயன் (SANJAYAN) 18.06.2000

சூரிச், சுவிஸ் நாட்டை வதிவிடமாகக் கொண்ட லிங்கநேசன்-பவானி தம்பதியரின் செல்வப்புதல்வன் சஞ்சயன் 2வது பிறந்த நாளை 18.06.2000ல் தனது இல்லத்தில் அன்பு அப்பா, அம்மா, அருமை அண்ணா, அனோஜன், சுவிஸ் பாபு மாமா, சுவிசிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, அக்கா, அண்ணாமார், உதயா சித்தப்பா, சித்தி குடும்பத்தினர், நண்பர்களுடன் கொண்டாடுகிறார் இவரை கொழும்பு, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, பெரியமாமா, அத்தை குடும்பத்தினர் நோர்வே குஞ்சுமாமா, அத்தை குடும்பத்தினர், பிரான்ஸ் ரோகினி சித்தி சித்தப்பா குடும்பத்தினர், யேர்மனி மாலாசித்தி, சித்தப்பா குடும்பத்தினர், லண்டன் சுரேஸ் சித்தப்பா, ரமேஸ் சித்தப்பா, மற்றும் உற்றார், உறவினர்கள் நண்பர்கள் சஞ்சயனை விக்கினங்களையெல்லாம் வேரறுக்கும் வினாயகப் பெருமாள் அருள் பெற்று, பல்கலைகற்று, வளமுடன் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.


தகவல் : இ.பொன்னுத்துரை,
இல.15, 42வது ஒழுங்கை, வெள்ளவத்தை.


## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக, உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

**SHAKTHY SARAVANA,**
48/12, SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.
T.P.: 723646. நேரில்-காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை

வியாழன் விடுமுறை



## மஹாசக்தி வசிய மருத்துவம்

(எல்லாப்புகழும் இறைவனுக்கே)
**மட்டக்களப்பு மலையாள மாந்திரீக கடல் கடந்த விஷேட வெற்றிகள்.**
பலதலைமுறை பரம்பரை தெய்வீக இராஜ வைத்தியம்
குருசக்தி நிலையம் கல்லடி, மட்டக்களப்பு, இலங்கை.
GONT APPROVED CHARICABLE SERVICES CENTER Reg.No.HA14/BT/176

**மஹாசக்தி உபாசனா பூசகர்**
புரதன நவீன மருத்துவ மனோதத்துவ "(மந்திரயோகி)"
YOGI-DR.T.MYLVAGANAM (M.B.B.S.H. (இந்தியா)
R.H.M.P.DAe அக்குப்பஞ்சர் (இலங்கை)
MINISTRY OF HEALTH REGISTERED MEDICAL PRACTITIONER Ree.No.061

கர்மவினைகளினால் தீயசக்திகளினால் தீயவர்களினால், ஏற்பட்ட தீராத உடல்நோய், மனநோய், வேறு பிரச்சனைகளை தீர்த்து எத்துன்பங்களும் அணுகாமல் காவல்செய்து, காதல் திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத் தடைகளை நீக்கி சகல காரியங்களிலும் வெற்றிபெற்றுச் சந்தோஷமாக வாழ காதலர்கள் ஒன்று சேர கணவன்-மனைவி குடும்பப்பிரச்சனைகள் இன்றி பிரியாமல், இன்னபமாக இருக்க, பிரிந்தவர்கள் வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் வந்து உறவாக தகாத ஆண்-பெண் உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க வேறு நன்மையான காரியங்களுக்கு மஹா சக்தி மந்திர யந்திரவசியங்கள் செய்துகொள்ள-வரமுடியாத கடல் கடந்த, வெளி நாட்ட வர்கள் தபால் பாக்ஸ் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு இறைபரிகாரப்பொருட்களை விஷேட தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கிறார்கள்.

(SEX) செக்ஸ்- ஆண்பெண்களின் சகலவிதமான பாலியல் பால் உறுப்பு பிரச்சனைகள், மலடு ஆண் பெண்மை வீரியக் குறைவு, குழந்தைகள் இல்லாக் குறைபாடுகள். ASTHMA (ஆஸ்த்மா) ஈளை, மூச்சு, தொய்வு, இரைப்பு, இழுப்பு, இளைப்பு கடுமையான களைப்பு பலவீனம், சகலவிதமான கர்மநோய்கள் உட்பட இவைகளோடு சேர்ந்திருக்கும் வேறுநோய்களும், பைத்தியம் சகல விதமான மனநோய்கள், தீராத தலையிடி, கண்பார்வைக்குறைவு, தலைமுடி பழுத்தல், கொட்டுப்படல், வளர்ச்சியின்மை, ஞாபகசக்தி குறைவு உடல்மெலிவு இவைகளுக்கு விஷேட அனுபோக மருத்துவ மனோத்துவ யோகாசன தியான ஆன்மீக அறிவுரைகளையும் பெற்றுக் கொள்ளலாம். விரும்பிய குருதட்சணையை அளித்து நேரில் வந்து மாந்திரீக சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

**நாடவேண்டிய விலாசம்**
GRUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
KALLADY-BATTICALOA (P.O.) (SRILANKA)
தொ.பே. 065/24872 பாக்ஸ்:- 065-23796
**கொழும்பில் சந்திக்க முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.**

## அஸ்மா நோய்க்கு வைத்தியம்



* தொய்வு * இழுப்பு
* இளைப்பு * மாய்ச்சல்
* மூச்சுத்தட்டல் * மண்டைச்சளி
* நெஞ்சுச்சளி * தடிமன்
* இருமல் * சுணகடி
* மூக்கடைப்பு * பீனிசம்
* தலைவலி * தும்மல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.



பாராட்டுக் கடிதங்கள் சில

ஊசிகள் போட்டும், காஸ் (புகை) பிடித்தும், சுகம் கிடையாமலும், பாடசாலைக்கு ஒழுங்காகப் போக முடியாமலும், ஏன் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த வேளையில் எத்தனை முறை நோயின் கொடுமையினால் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட நான் இப்பொழுது ஒன்றரை வருடங்களாக நிம்மதியாக மூச்சு விடுகிறேன் என்கிறார் **வெள்ளவத்தை** மூர் வீதியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் றொஜர் இமானுவல் என்பவர்.

ஒரு நாள் மருந்துடனேயே இரண்டரை வருடங்களாக இருந்த மாய்ச்சல் அறவே போய்விட்டது என்கிறார் **காத்தான்குடியைச்** சேர்ந்த முகமட் லத்தீப் என்பவர்.

1992-ம் ஆண்டு தொடக்கம் என்னை வாட்டி, துன்பப்படுத்தி, தற்கொலை செய்ய இருந்த என்னை ஒரு மாதத்திற்குள் முழு சுகம் அடைய வைத்த Dr. சுறாஜ் சோமசுந்தரம் அவர்களின் வைத்திய சேவையைப் பாராட்டுகிறேன், என்கிறார் **அக்கரைப்பற்று** பனங்காட்டைச் சேர்ந்த க. தங்கவேலு மாஸ்ரர்.

ஆறு வருடங்களாக இந்நோயால் பட்ட தொல்லைகள் நீங்கி நிம்மதியாக இருக்கிறேன், என்கிறார் **மன்னார்** எழுத்தூரைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி இராஜேந்திரம் என்பவர்.

பல வருடத் தும்மல், மூக்கால் நீர் வடிதல் பறந்து போனது என்கிறார் **மட்டக்களப்பு** பெரிய போர்தீவு அண்ணாத்துரை.



ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

டொக்டர்
சுறாஜ் சோமசுந்தரம்
**அஸ்மா சிகிச்சை நிபுணர்**
Ph.D.H(Ind); M.B.B.Sch (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை
மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்-காலிவீதி)

**தொலைபேசி இல: 074-201582**

இவ்விடத்தில் பழைய நோயாளர்களும் முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4மணி முதல் 7மணி வரையும் செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலை 9மணி முதல் 12மணி வரையும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. புதிதாக வரும் நோயாளர்கள் மேற் கூறிய நாட்களிலும், நேரங்களிலும் தொலைபேசி மூலம்(074-201582) தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன்அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.



மணப்பெண் அலங்காரம் கேக் வகைகள்.
தரமானமுறையில் நியாயவிலையில் செய்து கொடுக்கப்படும். வகுப்புக்களும் நடைபெறும்.

**T.LUXMI** 1ST FLOOR #207, ORCHARD BUILDING COLOMBO-06. T.P.: 505325

## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளி நாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன் - மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி, மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"


தங்களின் வாழ்க்கையின் கஸ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாண தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன் மனைவி கருத்துவேறுபாடு, ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும் பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

சந்திக்கும் நேரம் காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை

விலாசம் :
MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.
தொலைபேசி - 0142552036


## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 16 * 10 * 1948



விண்ணில் 17 * 06 * 1998

### அமரர் கந்தையா இராசகோபால் (கற்கண்டு)


Rc and Dc உத்தியோகத்தர்- கணுக்கோணி, முள்ளியவளை.

எம் அன்பு அப்பா-எம்மைவிட்டு பிரிந்து இரண்டு ஆண்டுகள் மறைந்ததப்பா
தத்துவங்கள் பகிர்ந்தளித்து பாசத்தை சொரிந்தே எம்மைவளர்த்தீரப்பா
இன்று சொல்லாமலே ஓடி இறைவடி சேர்ந்து விட்ட அப்பாவே!
அப்பா, அப்பா என்ற சொல்லு எம் இதயத்தை வாட்டுதப்பா
உங்கள் துயரத்தில் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன், மாமி, மைத்துனர் குடும்பம்.

தகவல்: மருமகன் குமணன்.இ - மைத்துனர் ராஜா.பா கனடா.

## நன்றி நவிலலும் 45ம் நாள் நினைவஞ்சலியும்

மலர்வு: 27.09.1975
உதிர்வு: 13.05.2000



அமரர் செல்விபராசக்தி தில்லை நடேசன்

கடந்த 13.05.2000ம் திகதி சனிக்கிழமை அகால மரண மடைந்த சட்டத்தரணி அமரர் திரு.தர்மலிங்கம் அமரர் திருமதி பாக்கியம் தம்பதிகளின் பேத்தியும், சட்டத்தரணி அமரர் திரு.தில்லைநடேசன் திருமதி இராஜேஸ்வரி தம்பதிகளின் ஏகப் புதல்வியுமான செல்வி பராசக்தியின் பிரிவுத் துயரத்தில் பங்கேற்ற உற்றார் உறவினர்களுக்கும் அன்பர்களுக்கும், மற்றும் இறுதிக் கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்ட இனிய நெஞ்சங்களுக்கும் எங்களது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, எதிர்வரும் 25.06.2000ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முகத்துவாரத்தில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், 26.06.2000ம் திகதி திங்கட்கிழமை 15/5, பெரேரா பிளேஸ், குடப்பாடு, நீர்கொழும்பில் நடைபெறும் நினைவஞ்சலியிலும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*இவ்வண்ணம்: இராஜேஸ்வரி தில்லைநடேசன் (தாய்)*
*தர்மசீலன் தில்லைநடேசன் (சகோதரன்), லண்டன்.*

தகவல்: கா.நடராசா, நீர்கொழும்பு.

# புலம் பெயர் தமிழரின் அரசியல் எதிர்காலம்

'புலம் பெயர்வு' என்ற விடயம் இலங்கைத் தமிழரின் வாழ்வில் தோன்றிவிட்ட ஒரு புதிய அம்சம். அதுவே அவர்களின் அவலத்தின் எடைக் கல்லாகவும் பார்க்கப்படலாம். அது ஒரு சமூக நடவடிக்கையாக உருவெடுத்தது 1983 ஜூலைக் கலவரத்தினையடுத்தே. அந்தக் கொடூர அனுபவம், இந் நாட்டில் வாழ முடியாது என்ற எண்ணத்தைத் தோற்றுவித்ததால் 'புலம் பெயர்வுக்கான செயற்பாடு ஒரு சமூக நடவடிக்கையாகவே மாறலாயிற்று.

இதற்கு முன்னரும் இலங்கைத் தமிழர்கள் வெளிநாடுகளுக்குக் குடி பெயர்ந்துள்ளார்கள் ஆனால் அக் குடிபெயர்வு உதிரியாக, தனிப்பட்டவர்களின் முடிவாக, கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றுக்காக நிகழ்ந்தது. அவர்கள் பெரும்பாலும் செல்வந்தர்களாக இருந்தனர்.

ஆனால் 83' கலவரத்தின் பின்னர் புலம் பெயர்ந்தவர்கள் வாழ்கைக்காக, வாழ்வின் பாதுகாப்புக்காகப் புலம்பெயர்ந்தவர்கள் ஆவார்கள். எல்லா மட்டங்களையும் சார்ந்த சாதாரண மக்களாக இருந்தனர். அத்தோடு இப் புலம் பெயர்வு ஒரு சமூகப் பெயர்வாகப் பெருமளவில் சாரிசாரியாக நிகழ்ந்தேறியது. இப் புலம்பெயர்வுகளினால் வெளி நாடுகளில் தனித்தனிச் சமூகங்களாகவே இம் மக்கள் உருவாகியிருந்தனர்.

இந்தப் புலம் பெயர்வினால் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் பாரிய குடிசனத்தொகை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கிருந்த குடிசனப் பரம்பலும் மாற்றமடைந்துள்ளது. பல வீடுகள், காணிகள் உரிமையாளரற்றதாக இருக்கின்றன. யாழ் குடாநாட்டில் நிகழ்ந்த பாரிய இராணுவ நடவடிக்கைகளையடுத்து புலிகளின் அறிவுறுத்தலுக்கமைய வன்னிக்கு இடம் பெயர்ந்த மக்களில் ஒருபகுதியினர் அங்கேயே தங்கியும் விட்டனர். இதனால் அங்கு முன்னிருந்த குடிசனப் பரம்பல் மேலும் குழம்பிப் போயுள்ளதுடன், பொருளாதார நடவடிக்கைகள் முடங்கி, அரசியல் குணாம்சமும் நலிவடைந்து போன நிலை தோன்றியுள்ளது.

இதேவேளை வெளி நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் ஒரு பலமான அரசியல் சக்தியாக உருவாகி வரலாயினர். அவர்கள் வெறுமனே புலம் பெயர்ந்து தத்தம் சொந்த வாழ்வில் மட்டும் ஈடுபாடு செலுத்தியபடி அங்குள்ள சமுதாயத்துக்குள் அமிழ்ந்து மறைந்துவிடவில்லை. மாறாக, தாமும் ஒரு சமுதாயம் என்பதை நிலை நிறுத்தக்கூடிய வகையில், இனத்துவ, அரசியல் அடையாளங்களை நிலைநிறுத்திய படி வெளிப்பட்டார்கள். அத்தோடு அங்குள்ள சூழ்நிலைக்குத் தகவமைத்துக் கொண்டவாறு எமது பண்பாட்டுக் கூறுகளைப் பேணவும் முற்பட்டார்கள்.

அதனால் அங்கு, திருமணங்கள், சடங்குகள், வைபவங்கள் யாவற்றையும் பார்க்கும் போது இதில் அவர்கள் காட்டிவரும் முனைப்பு புலப்படும். இச் சடங்குகளுக்காகவே மணவறை போன்ற பொருட்கள் தளபாடங்களை மட்டுமல்லாது பூசாரிகளையும் தருவித்து தொழில் ரீதியாக ஈடுபடுத்தக் கூடிய அளவு, இத்தகைய சமூக நடவடிக்கைகள் அங்கு விளைந்துள்ளன. கும்பங்களுக்கு முடியுடைய தேங்காய் அங்கு பெற முடியாதென்பதனால் பிளாஸ்ரிக் முடி செய்து தேங்காயில் பொருத்திக் கும்பம் வைத்துச் சடங்கு செய்கின்ற ஒரு பிடிமானத்தை அவர்கள் தங்கள் சடங்குகளில் காட்டினார்கள்.

ஒரு சில கட்டங்களில் இவை மிகைப்பட்ட, போலித்தனங்களாகக் கூடத் தோன்றினாலும், அவற்றின் அடி நாதமாக ஒரு சமூக உணர்வு இழையோடுவதைக் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது.

மறுமொரு பிரதான அம்சமாக வெளிப்பட்ட விடயம் என்னவென்றால், புலம் பெயர்ந்தோரின் கலை இலக்கிய வெளிப்பாடுகள். பல சஞ்சிகைகளும், கவிதைத்தொகுதிகளும், பத்திரிகைகளும், வானொலி, தொலைக்காட்சிச் சேவைகளும் தோன்றின. சில வர்த்தக ரீதியாகவும் வெற்றிபெற்றவையாக நிலைபேறடைந்தன. இதில் காணப்பட்ட புதியதோர் குணாம்சம் யாதென்றால், பல்வேறு வெளிநாட்டு மொழிகளைக் கற்று, அந்தந்த மொழிகளிலுள்ள கலையிலக்கியக் கூறுகளை நேரடியாகவே தமிழில் கொண்டு வரவும், அங்கு தோன்றிய புதிய இலக்கியப் போக்குகளைத் தமிழிலும் வெளிப்படுத்தவும் எம்மவர்களால் சாத்தியமாயிற்று. முன்னரெல்லாம் இப் பிறமொழி இலக்கியங்களை ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டு பின்னர்தான் அதிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்படுவதாக இருந்தது. ஆனால் இப்போது நேரடியாகவே இது சாத்தியமாகுவதால் பல புதிய குணாம்சங்களை எமது இலக்கியம் தரிசிக்க வழிதிறக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப் புலம் பெயர்ந்த தமிழர்கள் இலங்கைத் தமிழர்களுடன் நெருங்கிய தொப்புள்கொடி உறவைப் பேணி வருபவர்களாக உள்ளனர். ஒரு வகையில் அவர்கள் இலங்கையிலுள்ள தமிழர்களுக்கான பொருளாதாரப் பாதுகாவலர்களாகவும் விளங்குகின்றனர்.

அத்தோடு, அவர்கள் ஒரு பலமான தாக்கமுள்ள அரசியல் சக்தியாகவும் உருவாகியுள்ளார்கள். அங்கும்கூட தமது இருப்பும், வாழ்வும் சாதாரண பொருளாதார நடவடிக்கைகளில் மட்டுமன்றி அரசியல் ரீதியிலும் தங்கியிருப்பதாக அவர்கள் உணர்கிறார்கள். தாம் அங்கு புலம் பெயர்ந்து வாழ்வதற்குரிய நிலையாதிக்கத்தை வெளிப்படுத்த இவ் அரசியல் நடவடிக்கைகள் அவர்களுக்கு அவசியமாகியுள்ளது.

இதனால் இலங்கை அரசியலோடு தம்மைப் பின்னிப் பிணைத்தவர்களாக உள்ளார்கள். புலம் பெயர்ந்தவர்களின் இன சனங்கள், சொந்த பந்தங்கள் இலங்கையில் ஒரு தொடர்ச்சியான உறவில் உள்ளதால் இப் பிணைப்பு மிக நெருக்கமானதாக உள்ளது.

இலங்கையில் நிகழும், அரசியல், இராணுவச் செயற்பாடுகளின் பிரதிபலிப்புகள் அங்கு உடனுக்குடன் வெளிப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் இலங்கையை விட அங்குதான் சில அரசியல் முன்னெடுப்புகள் தீவிரமாகச் செயற்படுவதை உணரலாம். இலங்கையில் நிகழும் ஒவ்வொரு சம்பவம் பற்றியும் அங்கு பாரிய அக்கறை காட்டப்படுகின்றது. அதற்கான உன்னிப்பான அவதானம் அங்கிருந்து மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பொருட்டு செய்திகளைப் பெற்றுப் பரிவர்த்தனை செய்வதற்கான மிக வினைத்திறன் கொண்ட செய்திப் பரிவர்த்தனைக்கான வலைப்பின்னலும் இவர்களால் தாபிக்கப்பட்டுள்ளது. பல சமயங்களில் செய்திகளின் உண்மைத் தன்மையை அங்கிருந்தே சரிபார்த்துக் கொள்ளவும் கூடியதாகவுள்ளது.

இத்தகைய அரசியற்செயற்பாடுகள், மனிதஉரிமை மீறல்களை வெளிப்படுத்துவதாயும், அவற்றுக் கெதிராகக் குரலெழுப்புவதாயும், யுத்த அநர்த்தங்களுக்குள்ளானவர்க்கான மனிதாபிமான உதவிகளைக் கோருவதாகவும் தோன்றி படிப்படியாக இலங்கையில் நிகழும் ஆயுதப் போராட்டத்துக்கு ஆதாரவான பலமான பக்கபலமாக வளர்ச்சி கண்டுள்ளது. தற்போது அதுவே இப் போராட்டத்துக்கான பின்புலமாகவும் மாறி வருகிறது.

இதனால் இலங்கை அரசாங்கத்துக்குப் புதிய தலைவலி உருவெடுத்துள்ளது. ஆரம்பத்தில் இப்படியான புலம் பெயர்வுகளை கண்டும் காணாமல் விடுகின்ற, அல்லது ஊக்குவிக்கின்ற மனோபாவமே இலங்கையில் காணப்பட்டது. அதனால் தமிழர்களின் சனத்தொகை குறைந்து நாளடைவில் போராட்டம் நலிவுறும் என்ற கருத்தில் இதைக் கட்டுப்படுத்த விளையவில்லை. புலம் பெயர்ந்தவர்கள் அந் நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியபோதும் அவர்களை மீளத் தருவிக்கும் வகையில் இலங்கை எந்த முனைப்பையும் காட்டவில்லை. வெறுமனே அரசியல் ரீதியில் தம்மை நியாயப்படுத்துவதற்காக, இலங்கையில் மனிதஉரிமை மீறல்கள் இல்லை என்றும், புலம்பெயர்ந்தவர்களை அந்நாடுகள் திருப்பி அனுப்பலாமென்றும் கூறிவந்தது.

ஆனால் இப்போது அவ்வாறு புலம் பெயர்ந்தவர்களே அதற்கொரு பாரிய சவாலாக உருவாகியுள்ளார்கள்.

அவர்களின் பிரசாரம் வெவ்வேறு நாடுகளின் பல்வேறு அரசியற் கட்சிகள், பொது ஸ்தாபனங்கள் போன்றவற்றின் பல்வேறு மட்டங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. கனடாவில் ஆளும் கட்சியின் இரு அமைச்சர்களும் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் அண்மையில் புலிகளின், வருடப்பிறப்பையிட்டு நிகழ்ந்த வைபவமொன்றில் கலந்து கொண்டமை இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இது குறித்து இலங்கை அரசாங்கம் ஆட்சேபணை தெரிவித்தபோது அவ் அமைச்சர்கள் அளித்த விளக்கத்தில் தமிழர்கள் கனடாவில் ஒரு சக்திமிக்க சமுதாயமாக விளங்குவதால் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமெனத் தெரிவித்திருந்தனர். இதனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் வெளிநாடுகளில் ஒரு சமுதாய அந்தஸ்தைப் பெற்று வருவதையே உணரக்கூடியதாக உள்ளது.

இருந்தபோதிலும் புலம் பெயர்ந்த தமிழர்களின் நிலைமை குறித்து சில கேள்விகளும் தலைதூக்கத்தான் செய்கின்றன.

புலம் பெயர்ந்த தமிழர்களுக்கான புகலிடம் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாக இல்லை. சில நாடுகளில் மென்மையானதும் சில நாடுகளில் கடினமானதுமான நடைமுறைகள் உள்ளன. பல நாடுகளில் பெருமளவு புலம் பெயர்ந்த தமிழர்கள் அகதிகள் ஸ்தானத்திலேயே பேணப்படுகின்றனர்.




இன்னும் பலர் அகதி அந்தஸ்துக்கூட மறுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதேவேளை அகதிகளாக அங்கீகரிப்பதற்கான அல்லது அரசியல் புகலிடம் வழங்குவதற்கான தகைமைகளும், விதிமுறைகளும் கடுமையாக்கப்பட்டு வருகின்றன. அந் நாடுகளுக்கு ஏற்கெனவே சென்றுவிட்டவர்கள் தமது உறவினர்களைத் தருவித்துக் கொள்வதும் கடுமையாக்கப்பட்டு வருகிறது. அத்தோடு இலங்கை தமிழருக்கு வெளிநாட்டு விசாக்கள் பெறுவதும் மிகச் சிரமமானதாகி வருகிறது. இதே வேளை வெளி நாடுகளுக்கு அனுப்பும் ஏஜென்சிகளின் சட்ட விரோத மார்க்கங்களும் தடைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இரண்டாயிரமாம் ஆண்டுக்குப் பின் பல நாடுகளில் குடியேற்றங்களைத் தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதுமட்டுமன்றி ஏற்கெனவே சென்றுள்ளவர்களில் அரசியல் புகலிடம் வழங்கப்படாத வர்களைத் திருப்பி அனுப்பும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அண்மையில் பிருத்தானியாவில் மேற்கொள்ளப்பட்ட குடிவரவு தொடர்பான சட்டமூலத்தையிட்டு கருத்து தெரிவித்த பிருத்தானிய ஆளும்கட்சி அமைச்சர் ஒருவர், "இனி, சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களின் கதவுகள் தட்டப்படும். அவர்கள நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படாமலே வெளியேற்றப்படுவர்" என்று கூறியிருந்தார்.

இவ்வாறு கடுமையாகிவரும் நிலவரங்களுக்கு மத்தியிலுள்ள புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர் பல்வேறு நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்படும் நிலமை தற்போதைக்கு இல்லை. இருந்தாலும், அவ்வாறு திருப்பி அனுப்பும் சாத்தியங்கள் உள்ளதாவென பல்வேறு நாடுகளும் ஆராயத் தலைப்பட்டிருந்தன. அதற்காக அவர்களின் ஒரு குழுக்கள் இலங்கை வந்து பல்வேறு அரசியல் கட்சிகளையும் சந்தித்து குறிப்பாகத் தமிழ்க் கட்சிகளிடம் அபிப்பிராயம் கேட்டுச் சென்றுள்ளனர். இருந்தபோதிலும் ஜேர்மனியிலிருந்து அண்மையில் ஒரு சிறு தொகுதி தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட்டுமிருந்தார்கள். இது குறித்து ஏற்பட்ட எதிர்ப்புகளின் பின் இந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக அமெரிக்கா எடுத்துள்ள ஈடுபாடு புலம் பெயர்ந்த தமிழர்கள்மீது தாக்கம் செலுத்துமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அமெரிக்கா ஏற்கெனவே புலிகளைத் தனது நாட்டில் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனம் செய்து தடைசெய்து வைத்துள்ள ஒருநாடு. அத்தோடு அண்மையில் இலங்கைக்கு அவசர விஜயம் செய்த அமெரிக்க ராஜாங்க அமைச்சர், புலிகளின் இலக்கான பிரிவினையானது ஒருபோதும் சாத்தியமில்லையென்று கூறியிருப்பதுமல்லாமல் ஐரோப்பிய நாடுகளும் பிரிவினையை ஆதரிக்கப் போவதில்லையெனக் கருத்துக்கூறியிருந்தனர். இதன் மூலம் ஐரோப்பிய நாடுகள்மீது தனது செல்வாக்கு உள்ள தென்பதையே குறிப்பாலுணர்த்தியுள்ளது.

புலிகளைக் கட்டுப்படுத்த, அல்லது வழிக்குக் கொண்டுவர தனது செல்வாக்கை அது பிரயோகிக்க விளையுமானால், அது புலம் பெயர்ந்த தமிழர்களை நெருக்கடிக்கு உள்ளாக்குமா என்பதே இங்குள்ள கேள்வியாகும்.

நோர்வேயின் பெயரில் முன்னெடுக்கும் சமாதானப் பேச்சுவார்த்தை மத்தியஸ்தத்தில் அமெரிக்கா பின்னணி வகிக்கும் என்பது சர்வதேச அரசியல் செயற்பாடுகளை அவதானித்துவருபவர்களால் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்று. அவ்வாறான பேச்சுவார்த்தைகளில் புலிகளை அமெரிக்கா விரும்பும் நிபந்தனைகளுக்கு இணங்க வைக்கும் மறைமுகமான ஒரு பொறிமுறையாக புலம் பெயர்ந்த தமிழர்கள் தொடர்பான கெடுபிடிகளை அதிகரிக்கும்படி தூண்டக்கூடும், என்ற சந்தேகங்கள் தலைப்படுகின்றன. அவ்வாறான புலம்பெயர்ந்தவர்கள் மீதான நிர்ப்பந்தங்கள் புலிகளைக் கட்டுப்படுத்துமா என்பது வேறு கேள்வி. ஆயினும் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் புலம்பெயர்ந்த சமூகத்தை அவர்களிடமிருந்து விலக்கி வைக்க இது உதவுமென அமெரிக்கா முனையலாம்.

ஆனால் இவ்வாறான பல அரசியல் தந்திரங்கள் பலதடவை தோல்வியையே சந்தித்துள்ளன. மறுதலையாக அதன் நோக்கத்துக்கு எதிர்மறையான விளைவுகளையே தோற்றுவித்துள்ளன. வியட்நாம் முதற் கொண்டு இன்றைய மத்தியகிழக்கு நாடுகள் வரையிலான அதன் அணுகுமுறைகளின் விளைவுகள் இவ்வுண்மையைப் புடம்போட்டுக் காட்டுகின்றன.

வியட்நாம் பிரச்சனையில் இறுதியில் அமெரிக்காவுக்குள்ளேயே எதிர்ப்புக்கள் கிளர்ந்தெழும் நிலை தோன்றியதை அது மறக்கமுடியாது. மத்திய கிழக்குப் பிரச்சனையில் அமெரிக்க அணுகுமுறை அரபுராச்சியங்களை வளைத்துக் கொண்டாலும் முழு அரபு சமூகமுமே அமெரிக்காவுக்கெதிரான தாகத் திரும்பவே வழிசெய்துள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சனையிலும் அமெரிக்காவின் அழுத்தம் அதன் கையைச் சுட்டுக்கொள்ளவே வழிசெய்யுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். எவ்வாறாயினும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மீது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடி குறித்த விழிப்புணர்ச்சி அவசியம்!

-நரன்-

## செய்திச் சிதறல்

★ இராணுவ வீரர்கள் தினமான ஜூன் 7ம் திகதி நாடு தழுவிய ரீதியில் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. காலை 9.30 மணியிலிருந்து 2 நிமிடங்கள் மோதல்களில் மரணமான இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. இராணுவ வீரர்களுக்கென ஒரு நாளை ஒதுக்கி அஞ்சலி செலுத்துவது இலங்கையில் இதுவே முதற் தடவையாகும். இரு உலகப் போர்களிலும் உயிர் நீத்த உலகளாவிய ரீதியிலான போர் வீரர்களுக்கு- அஞ்சலி செலுத்துவது ஒவ்வொரு வருடமும் நவம்பர் 11ம் திகதியன்று அனைத்து நாடுகளிலும் இடம் பெறுவது தெரிந்ததே.

★ இராணுவ வீரர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த அதே நாளான ஜூன் 7ம் திகதியன்று கைத்தொழிற்துறை அமைச்சர் சி.வி.குணரத்னவும் அவர் தம் பாரியாரும் தற்கொலைக் குண்டுதாரியினால் கொல்லப்பட்டனர். இரத்மலானையில் நடைபெற்ற இக் குண்டுத்தாக்குதலில் மேலும் இருபதுக்கு மேற்பட்டோர் மரணமடைந்தனர், 60 பேர் வரை காயமடைந்தனர்.

★ இரத்மலானை குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து, இரத்மலானைக் கட்டுப்பெத்தை, தெகிவளை, மொரட்டுவை ஆகிய பகுதிகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு படையினரால் தேடுதல் வேட்டைகள் நடத்தப்பட்டன. பலர் கைது செய்யப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் பெரும்பாலானோர் விடுதலை செய்யப்பட்டனர். மொரட்டுவை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இறுதியாண்டு பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவர்கள் பலர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் பலர் விடுதலை செய்யப்பட்டனர். இருப்பினும் நாலு மாணவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

★ யாழ் குடா நாட்டில் விடுதலைப் புலிகளுக்கும் அரசப் படைகளுக்கும் இடையில் அங்காங்கே தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. ஆட்டிலெறி மற்றும் எறிகணை வீச்சுக்கள் இரு தரப்பினாலும் ஏவப்பட்டு வருவதால் பொது மக்கள் தொடர்ந்தும் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்து வருகின்றனர். மோதல்கள் இடம் பெறும் இடங்களில் பள்ளிக்கூடங்கள் நடைபெற முடியாமையினால், பாதுகாப்பான பிரதேசங்களிலுள்ள பள்ளிகளுடன் இணைந்து இடம் பெயர்ந்த மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடாத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

★ வவுனியாவிலிருந்து யாழ் குடாநாட்டிற்குச் செல்லும் A-9 பிரதான விநியோகப் பாதை நீண்ட காலமாக பயன்படுத்தப்படமுடியாத நிலையிலுள்ளது. இந்தப் பாதையை மீண்டும் திறப்பதற்காக 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை அரசப் படைகள் எடுத்தன. ஒரு வருடத்துக்கு மேல் போராடியும் இப்பாதையை மீட்டெடுக்க முடியவில்லை. அதனால் கப்பல் மூலமாக காங்கேசன்துறைக்கும், விமான மூலமாக பலாலிக்கும் பண்டங்களும், பொதுமக்களும் அனுப்பக் கூடியதாக இருந்தது. கடந்த இரண்டொரு தினங்களாக காங்கேசன்துறை துறைமுக இறங்கு துறைக்குக் கப்பல்கள் போக முடியாத வாறும் பலாலிக்கு விமானங்கள் சென்று இறங்கமுடியாதவாறும் புலிகளின் தாக்குதல் தொடர்வதாக அரசத் தகவல்கள் கூறுகின்றன.

★ வவுனியாவிலிருந்து வெளிநாடொன்றில் வேலை வாய்ப்புப் பெற்ற சந்திரகேஸ்வரி என்ற பத்தொன்பது வயதுப் பெண் கொழும்புக்கு வந்தபோது, பொரளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இதே வேளை வவுனியா நகரிலும் சுற்று வட்டாரப் பிரதேசங்களிலும் பல இளைஞர்கள் காணாமல் போயுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

★ வட புலத்தில் போர் தீவிரமடைந்து வருவதனால் பொதுமக்கள் பலவகையிலும் பாதிப்புக்குள்ளாகின்றனர். உயிராபத்துக்கு அஞ்சி மட்டுமல்லாமல் உணவுக்கே நெருக்கடி ஏற்பட்டு வருவதனால் தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இதனால் தமிழ் நாட்டில் உள்ள மேல்பிரிவிதான மண்டபம் முகாமே நிரம்பி விட்டதாகத் தெரிகிறது. இதன் காரணமாக அங்கிருந்து 10ம் திகதி சனிக்கிழமை 115 குடும்பங்கள் வேலூர் முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று மாநில அரச அறிவித்துள்ளது.

# அண்டை மண்டலத்தில்....

## நெருங்கி வரும் தமிழக சட்டசபைத் தேர்தல்!

## ரஜினி அதிர்ச்சி முடிவு எப்படி இருக்கும்?

ரஜினிகாந்த், இந்த முறை சட்ட சபை தேர்தலில் யாரை ஆதரிக்கப் போகிறார்....?

★ தனிக்கட்சி துவக்க வேண்டுமா?

★ அரவணைத்தவர்கள், ஆதரித்தவர்கள் உடன் இல்லாத ரஜினி, எடுக்கப் போகிறாரா அதிர்ச்சி முடிவு?

இந்த ரீதியில் தமிழகம் எங்கும் இரசிகர்களிடம் மதிப்பீடு எடுக்கப்பட்டது. இதன் முடிவுகள் இரகசியமாக வைக்கப் பட்டுள்ளன.

அரசியலுக்கு அவர் வருவாரா, வரமாட்டாரா என தமிழக அரசியல் வட்டாரங்களும், பொது மக்களும், இரசிகர்களும் ஒட்டுமொத்தமாக ஆர்வமுடன் எதிர்பார்க்கும் ஒருவர் நடிகர் ரஜினிகாந்த், 'நான் எப்ப வருவேன்.... எப்படி வருவேன்னு எனக்கே தெரியாது, ஆனா வரவேண்டிய நேரத்தில் கட்டாயம் வருவேன்' என்று ஒரு படத்தில் சொன்ன ரஜினிகாந்த், விரைவில் அரசியலுக்கு வருவாரா என்று பரபரப்பான எதிர்பார்ப்பு இரசிகர்களிடையே இன்னும் கூட ஒய்ந்து விடவில்லை.

இதற்கான முதற்கட்டப் பணிகளில் அவரது இரசிகர் மன்றத்தினர் இறங்கியுள்ளனர். அதற்கு அடிப்படையாக அவரது இரசிகர்களிடம் இரகசிய சர்வே எடுக்கப்பட்டு வருகிறது. அந்த மதிப்பீட்டின்படி, 'தற்போதுள்ள சூழ்நிலையில் நீங்கள் யாரை ஆதரிக்க விரும்புகிறீர்கள், தலைவர் (ரஜினிகாந்த்) யாரை ஆதரிக்க வேண்டும் என நினைக்கிறீர்கள், அதே போல தலைவர் தனியாக கட்சி ஆரம்பிக்க வேண்டும் என நினைக்கிறீர்களா?' என்ற வகையில் இரசிகர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு மதிப்பீடு எடுக்கப்பட்டு வருகிறது.


### நலப் பணிகள்

அதே போல ரஜினிகாந்த் இரசிகர் மன்றத்தின் மூலம் நலத்திட்ட பணிகள் கடந்த சில ஆண்டுகளாகச் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு பள்ளியைத் தேர்ந்தெடுத்து அந்தப் பள்ளிகளுக்கு ஒரு லட்ச ரூபாய் செலவில் பல்வேறு நலப்பணிகளும், ஏழை மாணவர்களுக்கு உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதனைச் சாக்காக வைத்துக் கொண்டு இந்த ஆண்டு ரஜினி இரசிகர் மன்றத் தலைவர் சத்தியநாராயணா, மதுரை, பரமக்குடி, இராமநாதபுரம் போன்ற பகுதிகளுக்கும், தமிழகத்தில் உள்ள முக்கிய நகரங்களுக்கும் சென்று அங்குள்ள இரசிகர்களின் 'பல்ஸை' பார்த்துச் சென்றுள்ளார்.

### தெற்கேயிருந்து ஒரு பேட்டி?

அதே போல ஆங்காங்கே குடிநீர்த் தொட்டி, நிழற்குடை போன்ற மக்களைச் சென்றடையும். திட்டங்களையும் அவரது இரசிகர்களைச் செய்யக் கூறி முடுக்கி விட்டுச் சென்றுள்ளார். மேலும் தென்மாவட்ட பிரபலமான ஒரு நடிகர் தற்போது ஆரம்பித்து செய்து வரும் 'பந்தா' ரஜினிகாந்தையும், அவரது இரசிகர்களையும் வெகுவாகவே பாதித்துள்ளதாகக் கூறப்படுகிறது. அந்த நடிகர் ஏற்கனவே சின்னத்தையும், கொடியையும் அறிமுகப்படுத்தி விட்டார். மேலும் நடிகர் சங்கத் தேர்தலில் போட்டியிடும் அவர் வெற்றி பெற்றால் அவரது அடுத்த இலக்கு அரசியலாகத்தான் இருக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்த நடிகரின் பந்தா பிடிக்காத பல சக நடிகர்கள் ரஜினிகாந்தை விரைவில் அரசியலில் இறங்கக் கூறி வற்புறுத்தி வருவதாகக் கூறப்படுகிறது. அந்த நடிகரின் செயல்களையும் மவுனமாக நோட்டமிட்டு வரும் ரஜினிகாந்திற்கும் அந்த நடிகருக்கு முன்னதாக அரசியல் கட்சி ஆரம்பித்துவிட வேண்டும் என எண்ணத்தை அவருடன் இருப்பவர்கள் தொடர்ந்து வலியுறுத்தியபடியே இருக்கின்றனர். ஆனால் ரஜினி வாயைத் திறக்க வேண்டுமே.... நோ.... நோ.... முக அசைவைக்கூட காட்டுவதில்லை. அவரது மவுனம் இன்னும் கூட பலரிடையே புரியாத புதிராகத்தான் இருக்கிறது.



### கட்சி துவங்கத் தீவிரம்

ஏற்கனவே முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை எதிர்ப்பதற்காகவே மூப்பனாரை ஆதரிக்கக் கோரி ரஜினிகாந்த், அவரது இரசிகர்களுக்கும், தமிழக மக்களுக்கும் கோரிக்கை வைத்தார். ஆனால் மூப்பனாரோ தற்போது ஜெ.,யின் முகாமிற்கு முகம் மாறி இருப்பதால் ஏகவருத்தத்தில் இருக்கும் ரஜினிகாந்திற்குதான் இந்தத் தேர்தலில் யாரையும் ஆதரிக்க வேண்டாம் என்ற எண்ணமும், தனித்து கட்சி துவங்கி விட வேண்டும் என்ற எண்ணமும், அதிகரித்து இருக்கிறது.

இத்தனைக்கும் மேலாக தற்போது ஒரு மன்னரின் பெயரைக்கொண்ட நகைச்சுவை கதாநாயக நடிகர் தனது இரசிகர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அந்தச் சுற்றறிக்கை விரைவில் ரஜினிகாந்த் முகாமிலிருந்து ஒரு கொடியும், சின்னமும் அறிமுகப் படுத்தப்படத் தூண்டக்கூடும். அவ்வாறு அறிமுகப் படுத்தும் போது நமது இரசிகர்களும் இந்த இரசிகர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதோடு, அவர்களோடு நல்லுறவு வைத்துக் கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றறிக்கையும் ரஜினிகாந்த் விரைவில் அரசியலில் இறங்குவார் என்று உறுதிப்படுத்தினாலும் இன்னமும் சரியான சமிஞ்ஞை எதுவும் கிடைக்கவில்லை.

தமிழ் நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில் ரஜினி இரசிகர்கள் உள்ளனர். இவர்கள் ஆதங்கம் ஒன்றே ஒன்றுதான். ரஜினி என்ற மாபெரும் சக்தி நிச்சயமாக தமிழ்நாட்டில் பிரகாசிக்க முடியும் என்று தீராத நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனால் இந்த மாபெரும் சக்தியான ரஜினிக்குத்தான் தன் பலத்தைப் பிரயோகித்துப் பரிசோதனை செய்வதில் இன்னமும் மனது வரவில்லை. காரணம் கடந்த தேர்தலுக்கு முந்தைய தேர்தலின்போது அவர் கொடுத்த ஒரு பேட்டியே தலைகீழான திருப்பத்தை ஏற்படுத்தியது. ஆனால் கடந்த லோக்சபா தேர்தலில் எந்தவித பரபரப்பான திருப்பத்தையும் அவரால் தரமுடியவில்லையோ என்ற குழப்பமான நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது. வரும் சட்டசபைத்தேர்தலில் அவரது ஆதரவு நிச்சயம் பிரபல கட்சிகளுக்குத் தேவை.

### மூன்று கேள்விகள்

இந்த வகையில் இரசிகர்களிடம் மூன்று கேள்விகள்தான் பொதுவாக கேட்கப்பட்டதாகத் தெரிகிறது.

★ ரஜினி தனிக்கட்சி துவக்க வேண்டுமா? துவக்கினால் முழுமையான வெற்றியைப் பெற முடியுமா?

★ எந்தக் கட்சிக்கு ஆதரவு தரவேண்டும்? தி.மு.க.,வுக்கா? பா.ஜ.,வுக்கா? அல்லது மூன்றாவது அணி துவக்கினால் த.மா.கா.,வுக்கா?

★ இரண்டும் இல்லாமல் இந்த முறையும் 'மனச்சாட்சி ஓட்டு'ப் போட இரசிகர்களுக்கு அன்புக் கட்டளையிடலாமா?

இந்தக் கேள்விகள் இரசிகர்களை எந்தக் குழப்பத்திலும் ஆழ்த்தவில்லை. அரசியலுக்கு வரவேண்டும், தனிக்கட்சி துவக்குவது என்பது அடுத்த பட்சம்தான். ஆனால், நிச்சயமாக அதிரடி அறிவிப்பை வெளியிடவேண்டும் என்ற எண்ணம்தான் இரசிகர்களிடையே பிரதிபலித்தது. இரசிகர்களிடம் எடுக்கப்பட்ட இந்தக் கணக்கெடுப்பு முடிவுகள் தற்போது இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் நெருங்கும்பொழுது இந்த முடிவுகள் ரஜினியின் அதிரடி அறிவிப்பாக மாறலாம்; அல்லது ஆதரவு யாருக்கு என்பதை யாவது அவர் வெளியிடலாம். நிச்சயமாக ஒன்று மட்டும் உறுதி. அவர் மவுனம் சாதிக்கமாட்டார். அவரது அறிவிப்பு முக்கிய கட்சிகளைக் கூட கதிகலங்கச் செய்யும் என்று ரஜினி மன்ற நிர்வாகி ஒருவர் கூறினார்.

தமிழ் நாட்டில் பொதுத் தேர்தல் என்ற பேச்சு அடிபட்டால் உடனடியாக ரஜினிகாந்த் பற்றிய வதந்திகளும் தலையெடுத்து விடும்.

அடுத்த பொதுத் தேர்தலில் ரஜினிகாந்த் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதை நாடிபிடித்தறியும் முயற்சியில் ரஜினிகாந்த் இரசிகர் மன்றங்கள் இப்போதே இறங்கி விட்டன.

சென்னையிலிருந்து வெளிவரும் 'தினமலர்' தின ஏட்டில் பிரசுரித்துள்ள தகவல் இது.

### மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு

## திருப்பி அனுப்பப்படுவோர் இங்குபடும் துயரம்

ஜெர்மன் நாட்டில் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருந்த 20 இலங்கையர்கள் அண்மையில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப் பட்டனர். கட்டுநாயக்க விமான நிலையத்தில் இவர்கள் வந்திறங்கியதும் இவர்கள் குற்றப் புலனாய்வுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

பிறநாடுகளில் தஞ்சம் கோரி, அதுமறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுபவர்கள் இங்கு படும் துன்பங்களைப் பற்றி ஆதார பூர்வமான தகவல்களை ஓர் அறிக்கையாக மனித கௌரவத்திற்கான மன்றஅமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள் வெளியிட்டுள்ளார். இவ்வறிக்கையில் காணப்படும் முக்கியமான அம்சங்களைத் தொடராகத்தருகிறோம்.

இலங்கையிலிருந்து பிற நாடுகளுக்கு- முக்கியமாக ஐரோப்பிய நாடுகளுக்கு தஞ்சம் கோரி சென்றுள்ள தமிழர்கள், தஞ்சம் மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப் படும் போது இங்கு எதிர்நோக்கும் சிக்கல்களை வெளிப்படுத்தும் நோக்குடன் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எம்மால் சேகரிக்கப்பட்ட உண்மையான தகவல்களைக் கொண்டே இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலை நாடுகளில் தஞ்சம் கோரி இலங்கைத் தமிழர்கள் தொகையாக இடம் பெயர்வதற்கு முக்கிய காரணமாக விளங்குவது, இந்நாட்டில் தமிழர்கள் மனித உரிமைகளுக்கு மாறாக நடத்துவதே என்பதாகும்.

ஜெர்மன் நாட்டிலிருந்து இரண்டாயிரமாம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் திகதியன்று இருபது இலங்கையர்கள் திருப்பியனுப்பப் பட்டனர். இவர்களுள் 19 பேர் தமிழர்கள். இவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்ததும், குற்றப் புலனாய்வுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, ஆரம்ப விசாரணை முடிவடைந்ததும் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டனர்.

அங்கு வைத்திலிங்கம் சுதாகரன் மற்றும் சுப்பிரமணியம் தெய்வேந்திரன் ஆகிய இருவரைத் தவிர ஏனைய 18 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். பின்னர் இவர்களும் விடுதலையானார்கள். இந்நடவடிக்கை ஜெர்மனிக்குச் சென்று அங்கு தஞ்சம் கோரியுள்ள ஏனைய இலங்கைத் தமிழர்களுக்கு பதற்றமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு தஞ்சம்கோரி அந்நாடு சென்றுள்ள தமிழர்களை நாடு கடத்துவதற்கு அந்நாடு நடவடிக்கை எடுப்பதற்கு, இலங்கையில் அமைதியும் சுமுகமான வாழ்வும் நிலவுவதாக, அந் நாட்டிலுள்ள தனது தூதரகங்கள் மூலம் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் பிரசாரமே ஆகும்.

இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கடந்த 16 ஆண்டுகளுக்கும் மேலாக யுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றது. இந்த யுத்தம் இதுவரை காலமும் 60 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களைப் பலிகொண்டுள்ளது. பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஏராளமான அப்பாவிப் பொதுமக்களும் இத் தொகையில் அடங்குவர். மிக அதிகமான சொத்துக்களும் கூட சீரழிக்கப்பட்டுவிட்டன. பெருவாரியான தமிழர்கள் தங்கள் இல்லங்களை விட்டு வெளியேறி, கொழும்பு, வவுனியா, மன்னர், திருகோணமலை ஆகிய இடங்களில் வசித்து வருகின்றனர். வட-கிழக்கு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த பெருவாரியான தமிழர்கள் கொழும்பில் தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களின் இருப்பிடங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களைத் தவிர தனியார் நடத்தும் விடுதிகளிலும் வாழ்கின்றனர்.

மோதல்கள் இடம் பெறும் பிரதேசங்களில் இருந்து வெளியேறிய தமிழர்கள் சிங்களப் பிரதேசங்களிலும் வாழ்கின்றனர். இவ்வாறு இடம் பெயர்ந்த மக்கள் சாதாரண குடிமக்களைப் போலல்லாமல் சுதந்திரமாக நடமாட முடியாதவர்களாகவும் தம்மை அகதிகளாக கருதிக்கொண்டு வசித்து வருகின்றனர். இவ்வாறு வாழும் தமிழர்கள் எப்போதும் பயந்தவர்களாகவும் பாதுகாப்பற்றவர்களாகவும் வாழ்கின்றனர். இவர்களுடைய சூழல், நட்பு ரீதியற்றதும் குரோத மனப்பான்மையுள்ளதாகவுமே விளங்குகின்றது.

தங்களுடைய சொந்தப் பிரதேசங்களை விட்டு இடம் பெயரும் தமிழர்களுக்கு பிரிட்டன், பிரான்ஸ் ஜேர்மன், இத்தாலி, சுவீடன், சுவிற்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா, நோர்வே, ஒல்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று குடியேறுவதைத் தவிர வேறு மார்க்கம் எதுவுமில்லை. சில வேளைகளில் இந்தியாவுக்கும் செல்கிறார்கள். பிறநாடுக்கு இடம் பெயர முற்படுவோருக்கு அவர்களின் உறவினர்கள் சில சந்தர்ப்பங்களில் பொருளுதவி வழங்குகின்றனர். மேற்கு நாடுகளுக்கு பத்திரமாகச் சென்று குடியேற விரும்பும் பல தமிழர்கள் தம்மை அனுப்பி வைக்கும் முகவர்களுக்கு பணம் செலுத்துவதற்காக தமது உடைமைகளை விற்கின்றனர். சிலர் தங்க நகைகளையும் ஏனைய பெறுமதியான பொருட்களையும் அடவு வைத்து பணம் பெறுகின்றனர்.

வெளிநாடுகளுக்கு ஏதோ ஒரு வகையில் போய்ச் சேர்ந்ததும் இவர்கள் அங்கு அரசியல் தஞ்சம் கோருகின்றனர். வெளிநாடுகளுக்குப் போய் குடியேற முயற்சிக்கும் பெருவாரியான தமிழர்கள் சிறிலங்கா அரசாங்கம் அவர்களைக் கைது செய்து துன்புறுத்துவதிலிருந்து தப்பிப் பிழைப்பதற்காகத்தான் என்பது உண்மைக்கு மாறானதொன்றல்ல. இலங்கையில் அமைதி திரும்புமானால் இத்தகைய பிற நாடுகளுக்குச் சென்று குடியேற தமிழர்கள் முயற்சிக்க மாட்டார்கள். தங்கள் சொந்த நாட்டை விட்டு வெளியேறிய பலரும் கூட மீண்டும் நாடு திரும்பி விடுவார்கள்.

பொலிஸாருக்கும் ஏனைய பாதுகாப்பு ஆயுதப் படைப் பிரிவினருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகால சட்ட விதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தமிழர்களைக் கைது செய்யவும் தடுத்து வைக்கவும் அரசாங்கம் மிகக் கடுமையான அதிகாரங்களை வழங்கியிருக்கிறது. எங்களுக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி ஆயிரக்கணக்கான தமிழர்கள் பல்வேறு சிறைச் சாலைகளிலும், பொலிஸ் நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்படுத் தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து மாறுபாடான வாக்கு மூலங்கள் பெறப்படுகின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அடிப்படையில் துரதிஷ்டவசமாக இந்த வாக்கு மூலங்களே பயன்படுத்தப் படுகின்றன.

பாதுகாப்புப் படையினர் பெருந் தொகையில் ஆண்களும் பெண்களுமாக இளைஞர்களைக் கைது செய்து தடுத்து வைக்கின்றனர். கொழும்பு,வவுனியா, யாழ் குடாநாடு மற்றும் கிழக்கு மாகாணம் ஆகியவற்றில்தான் பெருந் தொகையில் இவ்வாறு கைதுகள் தொடர்கின்றன. இவ்வாறு கைது செய்யப்படுவது தங்களுக்கெதிரான ஒரு வகையான துன்பம் இழைக்கும் செயலாகவே தமிழர்கள் கருதுகின்றனர்.

இவர்கள் இலங்கையில் தொடர்ந்து வசிப்பது பாதுகாப்பற்றது என்று கருதுகின்றனர்.

இது தவிர இடம் பெயர்ந்த தமிழர்கள் அரசாங்கத் திணைக்களங்களிலோ தனியார் துறைகளிலோ தொழில் வாய்ப்புப் பெற முடியாதவர்களாகவும் துயருருகின்றனர்.

வடக்கு-கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்த தமிழர்கள் சோதனைச் சாவடிகளிலோ அல்லது அவர்கள் வசிக்கும் இடங்களிலோ வைத்துக் கைது செய்யப் பட்டால் அவர்கள் நகரத்தில் தங்குவதற்கான சரியான காரணத்தை நிரூபித்தாக வேண்டும். அவர் தொழில் புரியும் நிறுவனத்தின் முகவரிடமிருந்து ஓர் அடையாள அட்டையையோ அல்லது மாணவனாக இருந்தால் அதற்கான அடையாள அட்டையையோ இந்நபர் சமர்ப்பித்தாக வேண்டும். இது தவிர அவரிடம் தேசிய அடையாள அட்டையும் பொலிஸில் பதிவு செய்ததற்கான பத்திரமும் இருந்தாக வேண்டும்.

(மேலும் வரும்)

## அலசுவது - இராஜதந்திரி

# இலங்கையில் யஷ்வந்த் சிங்!

இலங்கையில் கடந்த இருபது வருடகாலத்தில் இராணுவம் ஆட்பலம், ஆயுதப்பலம் என்பவற்றுடன் விசாலமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

ஏறத்தாழ ஒன்றரை இலட்சத்தையும் எட்டியதாக இராணுவப்பலம் விளங்குகின்றது. அத்துடன் தொடர்ந்து செல்லும் வடக்கு கிழக்கு யுத்தம் காரணமாக ஆயிரக்கணக்கில் இராணுவவீரர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் ஊனமுற்றுள்ளனர்.

இவைதவிர தென்னிலங்கையில் இராணுவவீரர்களது குடும்பங்கள் பலவும் யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புக்களால் நிர்க்கதிக்குள்ளாகியும் இருக்கின்றன.

இந்நிலையில் இராணுவத்தினரைக் கௌரவித்து, இதுவரை காலமும் உயிர்நீத்த இராணுவச் சிப்பாய்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதத்திலேயே இராணுவ வீரர்தினம் கடந்த வாரம் (ஜூன் 7ந் திகதி) அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

இராணுவவீரர்கள் மட்டுமல்ல, முடிவற்ற நிலையில் தொடர்ந்து செல்லும் யுத்தம் காரணமாக பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் யுத்தக் கெடுபிடிகளின் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

எனவே இந்த நாட்டின் வடக்கு-கிழக்கு யுத்தம் முழுநாட்டிலும் உயிர், உடமை இழப்புக்களை ஏற்படுத்தி, நாட்டின் வளங்களையும் நாசம் செய்துவருவதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் தொடர்ந்து செல்லும் யுத்தம் காரணமாக நாட்டின் மூலை முடுக்குகள் அனைத்திலுமே பாதுகாப்பு தீவிரமாக அமுல்செய்யப்பட்டு வருகின்றது. இருந்தபோதிலும் இப்பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறியதாகவே அனர்த்தங்களும், அவலங்களும் ஏற்பட்டுவருவதை கொழும்பு இரத்மலானைப் பகுதியில் கடந்தவாரம் இடம்பெற்ற குண்டு வெடிப்பு புலப்படுத்தியிருந்தது.

இக்குண்டுவெடிப்பு, அரசு பிரகடனஞ்செய்திருந்த இராணுவவீரர் நினைவுதினத்திலேயே நிகழ்ந்ததுடன், பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய அமைச்சரான சி.வி.குணரட்ணவையும், அவரது பாரியாரையும் பலியெடுத்திருந்தது. இவ்விருவருடன் சேர்த்து இருபதுக்குமதிகமான பொதுமக்களும் அக் குண்டுவெடிப்பில் பரிதாபகரமான முறையில் உயிரிழந்திருந்தனர்.

அமைச்சர் சி.வி.குணரட்ண, அவரது பாரியார் மற்றும் பொதுமக்களைப் பலியெடுத்த தற்கொலைக்குண்டுத் தாக்குதல்கள் இலங்கைக்குப்புதியவையல்ல.

கொழும்பு நகரிலேயே இக்குண்டுத்தாக்குதல்கள் இதுவரை பலரைப் பலியெடுத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் கலாநிதி நீலன் திருச்செல்வத்தையும் ஒரு தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலே பலியெடுத்திருந்தது.

இதன் பின்னர் கடந்த ஆண்டு டிசம்பரில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின்போது ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியினதும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினதும் இறுதிக் கூட்டங்களில் தற்கொலைக் குண்டுகள் ஏககாலத்தில் வெடித்திருந்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணிக் கூட்டத்தில் பங்குபற்றிய ஜனாதிபதி சந்திரிக்கா தெய்வாதீனமாக அக்குண்டுவெடிப்பில் உயிர்தப்பியிருந்தார். எனினும் அநேகர் உயிரிழந்திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டத்தில் வெடித்த குண்டில் முன்னாள் இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம உயிரிழந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே கடந்த டிசம்பரில் நிகழ்ந்த தற்கொலைக் குண்டு அனர்த்தத்தின் பின்னர் அரசு அறிவித்திருந்த இராணுவ வீரர்தினத்தில் ஆளுங்கட்சியின் முக்கிய அமைச்சரான சி.வி குணரட்ண தமது பாரியார் சகிதம் கொல்லப்பட்டிருந்தார்.

ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியில் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த முதலாவது அமைச்சரும் சி.வி.குணரட்ணவே என்பது குறிப்பிடத்தக்கது.

இக் குண்டு வெடிப்புச்சம்பவம், இலங்கை நிலபரம் நாளுக்குநாள் மோசமடைந்து செல்வதையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

இலங்கையில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென பலகோடிக்கணக்கில் செலவிடப்படுகின்றது. ஆட்பலம், ஆயுதபலம் என்பவைகூட பாதுகாப்புச் சேவையில் என்றுமில்லாதவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இலங்கையில் கடந்த இருபது வருடங்களாகவே அமைதியற்ற அவலநிலை தொடர்ந்து சென்று கொண்டிருப்பதையே அவதானிக்கமுடிகின்றது.

இலங்கையில் நீடித்துச் செல்லும் உள்நாட்டுயுத்தம் மற்றும் அதன் பிரதிபலிப்பாக இருக்கும் வன்முறைக் கலாசாரம் என்பவற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படுவதே இன்றியமையாததாகின்றது. அரசியல் தீர்வொன்றின் முக்கியத்துவம் இலங்கையில் அனைத்துத்தரப்பினராலும் உணரப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கைப் பிரச்சனையில் கரிசனை காட்டும் வெளிநாடுகள் கூட அரசியல்தீர்வையே வலியுறுத்தி வருகின்றன.

ஆயினும் உள்நாட்டுயுத்தமென்பது எந்தவொரு தீர்வுமுயற்சியையும் முன்னெடுக்க முடியாத வகையில் முனைப்படைந்துள்ளதையே காண முடிகின்றது.

வடக்கே இராணுவரீதியான நடவடிக்கைகள் உக்கிரமடைந்ததையடுத்து உலக நாடுகள்பலவும் இலங்கை இனப்பிரச்சனைத்தீர்வு விடயத்தில் தமது ஒத்துழைப்பை வழங்கமுன்வந்திருந்தன.

இலங்கைப் பிரச்சனை அண்மைக்காலம் வரை இந்தியாவின் கவனத்தையே பெரிதும் ஈர்த்ததாக இருந்துவந்தது. ஆனால் தற்போது இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் உக்கிரத்தன்மை உலகநாடுகள் முழுவதையும் இலங்கை மீது கரிசனை கொள்ள வைத்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

எனவே இதுவரைகாலமும் உள்நாட்டில் கடந்த நான்கு தசாப்தகாலத்திற்கும் மேலாக இனப் பிரச்சனைத் தீர்வுநடவடிக்கைகளை மேற்கொண்டு பயன் எதனையும் கண்டு கொள்ள முடியாத இலங்கையின் அரசியலாளர்கள், வெளிநாடுகளின் உறுதுணையோடு தீர்வுமுயற்சிகளில் ஈடுபடவேண்டியதே காலத்தின் தேவையாக இருக்கின்றது.

நோர்வே அரசாங்கப் பிரதிநிதிகள், மற்றும் அமெரிக்க அரசபிரதிநிதிகள் ஆகியோர் நேரடியாகவே இலங்கை வந்து இனப்பிரச்சனை குறித்து ஆராய்ந்திருந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு.யஷ்வந்த் சிங் அவர்களும் கொழும்புக்கு விஜயம் செய்து, இலங்கை நிலபரத்தை ஆராய்ந்ததோடு, தமது அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியிருந்தார்.

கடந்த ஒரிருமாதங்களாக வடபுலத்தே அரச படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தம் சூடுபிடித்துள்ளதையடுத்து இந்தியா மிக உன்னிப்பாகவே இலங்கை நிலபரத்தை அவதானித்துவருகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கைவிவகாரமென்பது அரசியல் ரீதியாகமட்டுமல்ல, இராணுவரீதியாகக் கூட நன்குபரிச்சயமானதொன்றாகவே இருக்கின்றது.

இந்நிலையில் இலங்கையின் அரசியல் மற்றும் இராணுவ ரீதியான நடைமுறைகள் தொடர்பாக இந்திய ஆட்சியாளர்கள் பல்வேறு கூட்டங்கள், சந்திப்புக்களை கடந்த ஒரிருமாதங்களாக தம்மிடையே நடத்தி வருவதுடன், இந்தியாவின் தென்பிராந்தியத்தில் இந்திய விமானப்படை, கடற்படை என்பவை கூட பூரண உஷார் நிலையில் வைக்கப்பட்டே இருக்கின்றன.

இதுதவிர தென்னாசியப் பிராந்தியத்தில் ஒரு முக்கிய சக்தியாக இந்தியா இருந்துவருகின்ற காரணத்தினால் இலங்கை விவகாரத்தில் அக்கறை செலுத்தும் ஏனைய நாடுகள் கூட இந்தியாவை அனுசரித்தே இலங்கை விடயத்தில் தமது நிலைப்பாட்டை வெளியிட்டுவருவதையும் அவதானிக்கமுடிகின்றது.

இந்நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு.யஷ்வந்த் சிங்கின் கொழும்பு விஜயம், இலங்கையின் இன்றைய அரசியல் சூழ்நிலையில் மிகவும் முக்கியத்துவம் மிக்கதொன்றாகவே விளங்கியிருந்தது.

இலங்கை விவகாரம் தொடர்பாக இந்திய அரசியலாளர்கள் பலதரப்பட்ட கருத்துக் கண்ணோட்டங்களையும் வெளியிட்டு வருவோராகவே இருக்கின்றனர்.

இதில் தமிழக அரசியலாளர்களே இலங்கையின் இன்றைய நிலபரம் குறித்து தமது கரிசனையை பெரிதும் வெளியிட்டுவரக் காணப்படுகின்றனர்.

தமிழகம் இலங்கைக்கு மிக அண்மையிலேயே இருக்கின்றமையால் இலங்கையில் யுத்த நிலவரம் சூடுபிடிக்கும்போது அநேகர் கடல் கடந்து அங்கே அகதிகளாகத் தஞ்சம் புகுவதையே காணமுடியும்.

சுமார் ஒன்றரைலட்சத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் கடந்த பதினைந்து வருடகாலத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒரிரு மாதங்களாக வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலைமை மோசமடைந்துள்ளதையடுத்தும் பலர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கடந்த ஆண்டில்மட்டும் இலங்கை அகதிகளுக்கென இந்தியா முப்பது கோடிரூபாய்களைச் செலவிட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஏராளமானவர்கள் உணவின்றி இருக்கும்போது இலங்கை அகதிகளுக்கு மூன்று வேளை உணவை இந்தியா வழங்கி வருகின்றதெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழக அரசியலாளர்கள் இலங்கைப் பிரச்சனை தொடர்பாக தமது ஆர்வத்தை வெளிப்படுத்துவதோடு, அரசியல்தீர்வு நடவடிக்கைகள் தொடர்பாக தமது சொந்த அபிப்பிராயங்களையும் மனந்திறந்து வெளியிட்டே வருகின்றனர்.

தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி ஒரு சிறந்த அறிஞர் மட்டுமல்ல. இந்தியாவின் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவராகவும் இருந்து வருகின்றார்.

இலங்கை இனப்பிரச்சனையின் தாக்கம் இந்தியாவுக்குத் தாவிய காலம் முதற்கொண்டு கலைஞர் மு.கருணாநிதி இலங்கை விவகாரம் தொடர்பாகத் தமது கருத்துக் கண்ணோட்டங்களை வெளியிட்டு வருபவராகவே இருக்கின்றார்.

இதன் அடிப்படையில் கலைஞர் கருணாநிதி இலங்கை விவகாரம் குறித்து செக் மற்றும் ஸ்லோவாக்கியா பாணியில் ஒரு தீர்வு பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

கலைஞரின் இந்த அபிப்பிராயம் இலங்கையின் அரசியலாளர்களை வெகுவாகவே சீண்டி விட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்தியா ஒரு பெரும் ஜனநாயக நாடாக இருக்கின்றது. அத்துடன் அங்கே கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்பவை கூட தங்கு தடையின்றி இருப்பதையே காணமுடிகின்றது.

இந்நிலையில் ஒரு மூத்த அரசியல்வாதி மற்றும் ஒரு சுயாட்சி கொண்ட மாநிலத்தின் முதல்வர் என்றவகையில் கலைஞர் முத்துவேலு கருணாநிதி தமது அபிப்பிராயங்களை வெளியிடுவதை எந்தவொருசக்தியாலும் தடுத்துவிட முடியாது.

கலைஞர் கருணாநிதியின் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவையாகத் தென்படலாம். ஆனால் அவர் அதனை ஜனநாயக மரபு வழி நின்று தெரிவித்துள்ளார். இந்நிலையில் நீண்டு செல்லும் ஒரு பிரச்சனையைத் தீர்க்கக் கூடிய ஓர் ஆலோசனை என்றவகையில் அக்கருத்துக் கண்ணோட்டத்தின் அரசியல் முக்கியத்துவத்தை நோக்குவதே மதியூகமாகும்.

இலங்கையின் இன்றைய யுத்தத்தில் பல்வேறு நாடுகளும் இலங்கைக்கு இராணுவரீதியாக உதவியளித்துவருகின்றன.

இவ்வாறு உதவும் நாடுகளில் செக்கோஸ்லோவாக்கியா என்றிருந்து தற்போது செக் என்று பிரிந்து சென்றிருக்கும் நாடும் உதவியளிப்பது குறிப்பிடத்தக்கது.

செக்கோஸ்லோவாக்கியா என்று ஒரு நாடாக இருந்தபோது செக் இனத்தவரும், ஸ்லோவாக்கிய இனத்தவரும் தம்மிடையே சமஷ்டி அடிப்படையில் அதிகாரப்பகிர்வைக் கொண்டிருந்தனர்.

காலப்போக்கில் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையடுத்தே செக், ஸ்லோவாக்கியா ஆகிய பிரதேசங்கள் இரு வேறு நாடுகளாகப் பிரிந்தன.

இந்நிலையில் இனரீதியான முரண்பாடுகள் என்ற அடிப்படையில் செக், ஸ்லோவாக்கியா ஆகியவற்றின் அரசியல் வரலாற்றை கலைஞர் கருணாநிதி இலங்கைவிடயத்திலும் சுட்டிக்காட்டியிருந்தார் என்றே கருதமுடியும்.

எது எப்படியிருந்தபோதிலும் இலங்கை இனப்பிரச்சனைக்கு ஒரே நாடு என்ற அடிப்படையில், தமிழ், சிங்கள இனங்களின் தனித்துவங்களைப் பிரதிபலிக்கும் விதத்திலேயே தீர்வொன்று காணப்படவேண்டுமென்பதை இந்தியா அரசியலாளர்களும், ஏனைய உலக நாடுகளும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்நிலையில் இலங்கைவந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் யஷ்வந்த் சிங் அவர்கள் கூட இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படாத நிலையிலேயே அரசியல் தீர்வுகாணப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்தியிருந்தார்.

எனவே விதண்டாவாதங்களுக்கு இடந்தராது யுத்தமென்ற படுகுழியில் வீழ்ந்தநிலையில் வெளிநாடுகள் நீட்டுகின்ற உதவிக்கரத்தைப்பற்றி சமாதானத்தை நோக்கி நகருவதே அவசியமானதாகின்றது.

அதுவே இதுவரைகாலமும் கொடிய இனப்பிரச்சனை காரணமாக உயிரிழந்த அனைத்து உயிர்களுக்கும் செலுத்தும் உயரிய அஞ்சலியாகவும் இருக்குமெனக் குறிப்பிடலாம்.



---

## அதிரடி அய்யாத்துரை



**வாயால் அடிக்கின்ற** தந்தி என்பதால் வதந்தி என்ற பெயர் வந்தது. இந்த வதந்தி காலமாற்றத்துக்கேற்ற வகையில் வளர்ந்த வண்ணமே இருக்கின்றது. இந்த நவீன யுகத்திலும் கண்டம் விட்டுக் கண்டம் தாவும் விதத்தில் வதந்தியின் வேகம் நவீன தொடர்புச் சாதனங்களூடாகவும் பல்வேறு பரிமாணங்களைப் பெற்றுள்ளது. கடந்த வார தலைநகரச் சம்பவங்கள் குறித்து வதந்தி படுத்திவிட்ட பாடு ஒரு பெரும்பாடாகவே இருந்தது.

**இரத்மலான குண்டு வெடிப்பில்** கொல்லப்பட்ட அமைச்சர் சி.வி.குணரட்ணவிடம் ஏனைய அரசியல்வாதிகளிடமில்லாத ஒரு நற்பண்பு இருந்தது. அதாவது தமது தொகுதியில் உள்ள எந்த ஒரு பிரஜையினதும் ஈமச்சடங்குகளில் அவர் கலந்துகொள்ளத்தவறுவதில்லை. பத்திரிகைகளில் மரண அறிவித்தலைப்படித்ததும் தமக்கு அறிமுகமில்லாதவராகவுமிருக்கலாம். ஆனால் தமது தொகுதியில் இருப்பவர் என்றிருந்தால் இன, மத, மற்றும் உயர்வு தாழ்வு என்ற வித்தியாசமின்றி அவர் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டு தமது அனுதாபங்களை வெளியிட்டுவந்தார்.

**இலங்கை கிரிக்கெட் கப்டன்** சனத் ஜயசூரிய கழுதை தேய்ந்து கட்டெறும்பான பாணியில் நடந்து வருகிறார். முன்பு ஒரு காலத்தில் ஒரு நல்ல யோகக்காரராக இருந்தவர் தற்போது சகடயோகக்காரராக மாறிவிட்டார். ஒரு பந்தயத்தில் அடிக்கிறார். பலபந்தயங்களில் கோட்டை விடுகிறார். அதனால் இலங்கை கிரிக்கெட் அணி, வெற்றிக்கனிகளைச் சுவைக்கும் சந்தர்ப்பங்களைப் பறிகொடுக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**நமது நாட்டில்** அரசியல் தேர்தல்களைப் பற்றி அனைவரும் அறிவோம். தலைநகரில் மட்டும் ஒரு தேர்தல் கடந்தவாரம் நடந்திருந்தது. கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் பதவிக்கான தேர்தலே அது. பெரும்பயமுறுத்தல்கள், கெடுபிடிகளுக்கு மத்தியில் அத்தேர்தல் நடந்து முடிந்தது. நாட்டின் குதிரைப் பந்தய புள்ளி ஒருவர் தலைவராகியுள்ளார். ஏதோ இலங்கையிலும் கிரிக்கெட் சூதாட்டம் தலைகாட்டாது இருந்தால் சரி.

**இரத்மலான குண்டு வெடிப்பையடுத்து,** அமைச்சர் சி.வி.குணரட்ண பங்குபற்றிய ஊர்வலத்தை ஏற்பாடு செய்த ஊடகத்துறையின் முக்கிய புள்ளி ஒருவர் எல்லாம் வல்ல அம்மையாரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளாராம். நாட்டுநிலவரம் அறிந்தும் இப்படி ஒரு முட்டாள் வேலையை ஏற்பாடு செய்தமைக்காக அந்த ஊடகத் துறை தலைவர் மீது அரச வட்டாரம் மிகக்கடுகடுப்பாகவே இருக்கிறதாம்.

"அதுக்கு என்ன ஆதாரம்? கொலை நடந்தால் ரத்தம் கித்தம் இருக்கணுமே? அது எங்கே போச்சு?"

"அதைத்தான் யோசிக்கிறேன். நாளைக்காலையிலே திரும்பவும் பூந்தளத்திற்குப் போய் அந்த ஏரிக்கரைக்குப் போறோம்."

மறுநாள், ஏரிக்கரையில் அந்த கேம்ப் பகுதியை அடைந்தார்கள்.

"பதி! இப்ப நாம என்ன செய்யப் போகிறோம்னா கீழே இருக்கிற மணலை எடுத்துப் புடைக்கிறோம்!" என்றார் பதி.

திடுக்கிட்டுத் திரும்பினார் பிரபு. "ஏன் சார்?"

"கொலை சம்பந்தமா நிச்சயம் ஏதாவது கிடைக்கும்."

பதியும், பிரபுவும் வேலையில் இறங்கினார்கள்.

இருவரும் மணற்பகுதியில் வாரியெடுத்து சலிக்க ஆரம்பித்தார்கள்.

ஒன்றிரண்டு தீக்குச்சிகளும், சிகரெட் துண்டுகளும் கிடைத்தன. எடுத்து

கட்டாந்தரையாக இருந்தது. தடயங்கள் பதிவதற்கு வழியில்லை.

விடாப்பிடியாக அவர் பார்த்துக் கொண்டே போனார்.

ஒரு பர்லாங் சென்றதும் ஓர் இடிபாடு தெரிந்தது.

கட்டாந்தரை சற்று மேடாக இருக்க, அதில் ஓரம் மட்டும் இடிந்திருந்தது.

இடிந்த பகுதியில் கார் தளத்தின் பற்கள் நன்றாகத் தெரிந்தன.

"இதைப் பார்த்தியா! இந்தப் பக்கம் கார் வந்திருக்கு?" என்றார் பதி.

"அதில் என்ன அதிசயம் சார்? கிராமத்திற்கு கார் போயிருக்கு! அவ்வளவுதானே!"

"இரு, இரு!" என்று கையை ஆட்டினார் அவர்.

கீழே உட்கார்ந்தார். மண்ணின் உடைசலைப் பார்த்தார். மற்ற இடங்களிலுள்ள தடயங்கள் நன்றாகக் காய்ந்து போய் வெகு நாட்களுக்கு முன்னால் ஏற்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கின. ஆனால் இங்கே உடைந்திருக்கும் மண் பகுதி சமீபத்தில்தான் நிகழ்ந்தது போல் ஒரு தோற்றத்தைக் கொடுத்தது.

**உண்மையில் நடந்த கதை**

**(3 வாரங்கள் மட்டும்)**

*ஆராய்ச்சிக்கு வந்த வெள்ளைக்காரப் பெண்ணை விரும்பினான் அந்தக் கிராமத்து இளைஞன். அவளும் அவனை அணைத்தாள். ஆனால் அவனை தன் வாழ்க்கைத் துணையாக்க அவள் விரும்பவில்லை.*

"அதெல்லாம் நல்லாத்தான் இருக்கான். படிப்புத்தான் ஏற மாட்டேங்குது."

"எதுவரைக்கும் படிச்சிருக்காரு?"

"மெட்ரிகுலேஷன். அதுக்கு மேலே போகவில்லை."

"இப்ப என்ன செய்றாரு?"

"நமக்குத்தான் தோட்டம் தொறவு வயல் எல்லாம் இருக்கே? அதைத்தான் கவனிச்சிக்கிறான். ரொம்பச் சூட்டிகையான பையன். கல்யாணம் ஆகவில்லை. சீக்கிரம் ஆயிடும்."

இந்தச் சமயத்தில் அந்த இளைஞன் வெளியே வந்தான்.

# நடந்த கதை

காகிதப்பையில் போட்டுக் கொண்டார்கள்.

மேலும் சலித்தவாறு போக, கறுப்பு நிற உருண்டைகள் சில கிடைத்தன.

அதைக் கையில் வைத்து அழுத்தினார், பதி. அது பொடியாகப் போய்விட்டது.

"இது இரத்தக்கட்டி!" என்றார் பதி.

"அப்படின்னா?"

"ஆமாம். மணலோடு சேர்ந்து சின்னச் சின்னக் கட்டியா உறைஞ்சு

சற்று யோசனையுடன் திரும்ப, சில அடிகளுக்கு அப்பால் செடிகளின் கிளைகள் உடைந்து கிடப்பதைப் பார்த்தார்.

எழுந்து சென்று பார்த்தபோது, அதன் இலைகளும் நன்றாக நசுக்கப்பட்டிருந்தன.

வேன் அந்தப் பகுதியில் திரும்பிக் போயிருக்கலாம். அதாவது கிராமத்திற்கு நேராகச் செல்லாமல், கிராமத்தின் கொல்லைப்புறம் வழியாகப் போயிருக்கலாம்.

உடைந்த கிளைகளைப் பார்க்கும் போது, ஒரு பதினைந்து தினங்களுக்குள்தான் அது நடந்திருக்க வேண்டுமென்று தோன்றியது.

ஏனெனில், கிளைகளின் பசுமை

"இந்தா சீனிவாஸ்! இவங்க நமக்குத் தெரிஞ்சவங்க!" என்றார்.

"வணக்கங்க."

"உட்காருங்க!" என்றார் பதி.

திண்ணையில் உட்கார்ந்தான்.

பதியின் பார்வை அவன் நெற்றி ஓரத்தில் இருந்த காயத்தில் விழுந்தது.

காயம் நன்றாக ஆறிப் போய் வெள்ளைத் தழும்புகள் தெரிந்தன.

கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகியிருக்க வேண்டும்!

"என்ன காயம்?" என்று சாதாரணமாகக் கேட்டார்.

"ஒண்ணுமில்லை சார். நம்ப கிராமத்து ஆளுங்க ஒருத்தருக்கொருத்தர் சண்டை போட்டால், அடிதடியிலேதான் வந்து நிற்கும்" என்று கூறினான் சீனிவாஸ்.

கிராம அதிகாரி குறுக்கிட்டார். "அதெல்லாம் போடக்கூடாது என்று சொல்லியிருக்கேன். கேட்டாத்தானே! நீங்க சொல்லுங்க. இதெல்லாம் வேணுமா?" என்றார் அவர்.

பதி வேண்டுமென்றே சிரிப்பை

## மணக்க விரும்பாத (வெள்ளை) மங்கை 02

**புஷ்பா தங்கத்துரை**

போயிருக்கும். இன்னும் தேடினால்கூடக் கிடைக்கும்."

மேலும் பத்தடி நடந்ததில்

மூன்று இரத்தத்துளிகள் கிடைத்தன.

அவற்றை உடனே லாபரட்டரிக்கு அனுப்பினார்கள். அதிலிருந்து அறிக்கை வரும்வரை காத்திருந்தார்கள். அறிக்கை வந்தது. அந்த இரத்தம் மனித இனத்தைச் சேர்ந்தது என்று கூறப்பட்டிருந்தது.

மேலும் கெட்ட இரத்தமும், நல்ல இரத்தமும் கலந்திருப்பதாகக் கூறினார்கள்.

இப்பொழுது அவர்களுக்கு ஒரு பிரச்சனை கிளம்பியது. வேன் எங்கே நின்று கொண்டிருக்கும்?

பிரபு விழித்துக் கொண்டு நின்றார்.

"நிச்சயம் அதுக்கு அந்தப் பக்கம் வேற ஒரு வழி இருக்கணும். நாம போன வழி தவறான வழி" என்றார், பதி.

கேம்ப் இருந்த பக்கத்திலிருந்து சுற்றி வர அவர்கள் தேடினார்கள்.

300 அடி தொலைவில் சட்டென்று கீழே பார்த்ததும் பிரபு கத்தினார்.

"சார்! டயர் தடம்!" என்று கூவினார்.

பதி ஓடிப் போய்ப் பார்த்தார்.

அங்கே அந்த தரையில் டயர் தடயங்கள் நன்றாக அழுந்தியிருந்தன.

வேன் அந்தப் பக்கம் எப்படி வந்திருக்க முடியும் என்று தேடியபோது, அங்கே ஒரு கச்சா சாலை தெரிய ஆரம்பித்தது.

குறுகிய சாலை, செடி கொடிகள் மண்டியிருந்தன.

வேன் அந்த வழியாகப் போன தடம் இருக்கிறதா என்று அவர்கள் பார்க்கத் தொடங்கினார்கள்.

விலக்கிப் பார்க்க, ஓரிரு இடங்களில் தடயங்கள் நன்றாகத் தெரிந்தன.

"சரி! பார்த்துக்கொண்டே போவோம்" என்று அவர்கள் சென்றார்கள்.

வழி நீளமாகச் சென்று கிராமத்தின் சாலையை வந்து மோதியது.

அது புழுதி படிந்த சாலை. அதில் டயர் தடயங்கள் வலதுபுறம் நன்றாகப் பதிந்திருந்தன.

இடதுபுறமாகச் சென்றால், அது கிராமத்தை அடையும்.

இப்பொழுது பதிக்கு யோசனை தோன்ற, இடதுபுறம் ஏதாவது தடம் இருக்கிறதா என்று கவனித்தார்.

சிறிது தூரத்திற்குத் தெரியவில்லை.



முற்றிலுமாக உலர்ந்துவிடவில்லை.

பதி மேலும் நடந்து கொண்டே சென்றார்.

சிறிது தூரத்திற்கு மேல், செடிகள் தென்படவில்லை.

அதற்கு மேல் தடயத்தைக் காண முடியவில்லை.

அங்கிருந்து கொல்லைப்புறக் கிராமத் தோட்டங்கள் வழியாகச் சென்றார்கள்.

ஆங்காங்கே குழிவானப் பகுதியில் தங்கியிருந்த நீர்நிலைகளை, கிராமவாசிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

தோட்டங்களுக்கான நீரை அங்கிருந்து எடுத்தார்கள்.

பின்னர் இருவரும் கிராம அதிகாரியின் வீட்டுத் திண்ணையில் வந்து அமர்ந்தார்கள்.

ஒரு வாட்டசாட்டமான இளைஞன், அதிகாரியின் வீட்டுக்குள் சென்றுகொண்டிருந்தான். அவர்களை அலட்சியமாகப் பார்த்துச் சென்றான்.

சிறிது நேரத்தில் கிராம அதிகாரி வெளியே வந்தார்.

"வாங்க! வாங்க!" என்று சொல்லி அவரும் திண்ணையில் உட்கார்ந்தார்.

"உள்ளே ஒரு ஆள் போனாரே, யார் அவர்?" என்று கேட்டார் பதி.

"நம்ப மகனுங்க."

"அப்படியா? வாட்ட சாட்டமா நல்லா இருக்காரு."

உண்டாக்கினார்.

"பெரியவர் சொல்றதைக் கேட்டுக்குங்க!" என்று சொன்ன பதி, "யாரிடம் சண்டை போட்டீங்க" என்று கேட்டார்.

ஒண்ணுமில்லீங்க. பிரகாஷ் என்று ஒரு பையன். அவனோட சண்டை. அவன் இவனைக் கீறியிருக்கான். இவன் அவனை கையிலே அடிச்சுட்டான். புரிஞ்சுதா?" என்றார் பெரியவர்.

"அந்த வெள்ளைக்காரனைப் பத்தி" என்றார் பதி.

ஒரு பெரிய பார்வையாகப் பதியை நோக்கித் திரும்பினான், சீனிவாஸ்! "நீங்க யாருங்க?" என்று அழுத்தத்துடன் கேட்டான்.

"யாருமில்லீங்க. அவங்க சிநேகிதங்க. எங்க ஊர்ப்பக்கம் வந்திருக்காங்க. இங்கே எங்களை வரச் சொன்னாங்க. சந்திக்கிறதுக்கு வந்தோம். பார்க்க முடியல்லே!" என்றார் பதி.

"அவங்க ரெண்டு வாரத்துக்கு முன்னாலேயே போயிட்டாங்களே?

"எங்கே"

"ஊருக்குத்தான்."


"அப்படீங்களா?" என்றார் பதி.

"பிறகு பிரபுவை நோக்கி, "நாம போயிட வேண்டியதுதான். இனிமேல் இங்கே இருக்க வேண்டியதில்லை" என்று கூறினார்.

இருவரும் திரும்பிச் செல்லும்போது,

(அடுத்தவாரமும் வரும்)

# ஆசியப் பிரதமர் வாஜ்பாய்



அண்மையில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஆசியாக் கண்டத்தில் உள்ள கிரிக்கெட் அணிகளில் இருந்து வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆசிய அணி உலக அணியுடன் விளையாடியது அல்லவா?

அதுபோல் ஆசியக்கண்டம் முழுவதும் ஒரே நாடாக அமைந்தால் அதற்குப் பிரதமராக யாரை நியமிப்பது? மற்ற அமைச்சர் பதவிகளுக்கு யார் யாரை நியமிப்பது?

இப்படி ஓர் அசத்தலான, கருத்துக் கணிப்பை ஹொங்கொங்கில் இருந்து வெளியாகும் 'ஏசியா வீக்' சஞ்சிகை நடத்தியது. இந்தக் கருத்துக் கணிப்பிற்கு ஆசியாவின் கனவு அமைச்சரவை என்று பெயரிடப்பட்டது.

இக்கருத்துக் கணிப்பில் 'ஆசியாவின் பிரதம'ராக, இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

"வாஜ்பாயின் நேர்மை, இந்தியாவை வழிநடத்தும் விதம், புத்திசாலித்தனமான தூதரக அணுகுமுறையால் பாகிஸ்தானின் நண்பனாக இருந்த அமெரிக்காவைத் தம்பக்கம் கவர்ந்த திறமை, பல்வேறு கருத்துக்கள், தீவிர உணர்வுகள் கொண்ட தலைவர்களையும் அமைதிப் படுத்தித் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள புத்திசாலித்தனம், ஆசியக் கண்டத்தில் சீனாவைப் பின்னுக்குத் தள்ளி இந்தியாவை முன்னே கொண்டு சென்றுள்ள இலாவகம்.

இவை அனைத்தையும் உடல் நலம் பாதிக்கப்பட்டு ஒரு சிறுநீரகம் தான் இயங்கும் நிலையில் வாஜ்பாய் சாதித்துள்ளார், என்ற கருத்துக் கணிப்பில் வாஜ்பாய்க்கு புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.

அத்துடன், "பல்வேறு மொழி, இன, மத மக்களைக் கொண்ட இந்தியாவை நல்லபடியாக ஆட்சிசெய்யும் எவராலும் பல்வேறு நாடுகளைக் கொண்ட ஆசியாவை எளிதாக ஆள முடியும்!" என்றும் அப்பத்திரிகை தெரிவிக்கிறது.

ஆசியாவின் கனவு அமைச்சரவையில் பிரதமராக வாஜ்பாயுடன் துணைப் பிரதமராகவும் நிதி அமைச்சராகவும் சீனப் பிரதமர் சூக்ரோங் ஜி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேலும் மலேசிய அதிபர் மகதீர் முஹமட் உள்துறை அமைச்சராகவும் அந்தக் கருத்துக் கணிப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# ஆண்மை அதிகரிக்கும் மருந்துகளால் ஆபத்து

ஆண்மை உணர்ச்சியை அதிகரிப்பதாகக் கூறப்படும் மருந்துகளால் நினைவு சக்தி பறிபோகும் வாய்ப்பு அதிகமுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இலண்டன் எட்ஜ்ஹில் உயர்கல்விக் கழகத்தில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டது. இதன் மூலம் உடலுறவில் இன்பத்தை நீடிக்க வகை செய்யும் மருந்துகள், நினைவு சக்தியை அழித்துவிடுகின்றன. என அறியப்பட்டுள்ளது.

இந்த மருந்தைப் பயன்படுத்தியவர்களிடமும் பயன்படுத்தாதவர்களிடமும் பரிசோதனை செய்தபோது இது தெரிய வந்துள்ளது.

ஞாபகம் முழுவதும் 'அதிலே' போனால், மற்றவை எல்லாம் மறந்து விடும் போல் தெரிகிறதே?

# "வேண்டாம் மும்பை சினிமா!"

சீமா பிஸ்வாஸ்-படத்தைப் பார்த்துப் பெயரைப் படித்ததும் இவர் யாரென்று நினைவு வருகிறதா? ஆம்! பூலான்தேவியின் சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்கார வரலாற்றைப் பின்னணியாக வைத்து எடுக்கப் பட்டு பிரபலமாக ஓடிய 'பண்டிட் குயின்' படத்தில் நடித்தவர்.

'பண்டிட் குயின்' படத்தில் நடித்ததனால் ஏகப்பட்ட பாராட்டுக்களும் விருதுகளும் இவருக்குக் கிடைத்தன. அதன் பின் ஓரிரு இந்திப் படங்களிலும் நடித்தார்.

மேலும் பல படவாய்ப்புக்கள் இவருக்கு வந்தன. அவற்றை எல்லாம் மறுத்து விட்டார் சீமா. காரணம் சீமாவுக்கு நாடகம் மீதுள்ள காதல்தான்.

அஸ்ஸாம் மாநிலத்தில் நடமாடும் நாடகக் கம்பனியில் நடித்து வந்தவர்தான் சீமா பிஸ்வாஸ். எப்படியோ 'பண்டிட் குயின்' இயக்குநர் சேகர் கபூர் கண்ணில் பட சினிமா நடிகையானார்.

இப்போது சினிமாவே வேண்டாம் என்று சொல்லிவிட்டு மறுபடியும் அஸ்ஸாம் மாநில நடமாடும் நாடகக் கம்பனியில் இணைந்துள்ளார்.

இவர் தற்போது ஒரு நாடகத்தில்



நடித்து வருகிறார். இது சர்வதேச விருது வாங்கித்தரும் என்று பெரிதும் எதிர்பார்க்கிறார்.

"மும்பையில் தொடாந்து இருந்திருந்தால் பல படங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கும். ஆனால் நான் படங்களில் நடிப்பதை விட, இந்தத் தெருக்கூத்து நாடக மேடையில் நடிப்பதையே விரும்புகிறேன்!" என்று கூறுகிறார் சீமா பிஸ்வாஸ்.

பாவம் பிழைக்கத் தெரியாத நடிகை.

# மண் விளையாட விடுங்கள்

குழந்தைகள் மண்ணில் வீடு கட்டி விளையாடுவார்கள். மண் விளையாட்டில் ஈடுபடும் குழந்தைகளை அவர்களின் பெற்றோர்கள் அடித்து இழுத்துச் செல்வதைப் பார்த்திருப்போம்.

ஆனால் இனி குழந்தைகள் மண்ணில் விளையாடினால் அடித்து இழுத்துச் செல்ல வேண்டாம் என்று கூறுவது போல் இயற்கை மருத்துவர்களின் கூற்று உள்ளது.

காரணம் குழந்தைகள் மண்ணில் விளையாடும்போது இரத்த ஓட்டம் மேம்படுகிறது. உடலில் உள்ள சூட்டைத் தணிக்கிறது என்கிறார்கள் அவர்கள்.

இது மட்டுமல்ல, மண் மூலம் அளிக்கப்படும் சிகிச்சையால் தோல் நோய்கள் குணமாகின்றன என்றும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

# குத்துச் சண்டை வீரரும் சினிமாவும்



சினிமாக்கனவு எல்லாரையும் ஈர்க்கும் அபாரசக்தி கொண்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இங்கிலாந்தின் அதிபார உலகக் குத்துச்சண்டை 'சம்பியன்' லெனாக்ஸ் லூயிஸுக்கும் சினிமா மீது காதல் ஏற்பட்டுள்ளது.

34 வயதான லூயிஸ் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் குத்துச் சண்டைக்குக் குட்பாய் சொல்லிவிட நினைக்கிறார். அதன் பின் திரையில் மின்னிவிட வேண்டும் என்பது அவரது எண்ணம்.

லூயிஸின் இந்த எண்ணத்திற்கு ஒரு பின்னணி உண்டு. பிரபல ஹொலிவூட் நட்சத்திரம் டென்ஸில் வோஷிங்டன் 'த ஹரிக்கேண்' என்ற படத்தில் குத்துச் சண்டை வீரராக நடித்தார்.

தனது நடிப்பு இயல்பாக இருக்க வேண்டும் என்பதற்காக லூயிஸிடம் வந்து பயிற்சிபெற்றார். அபோதுதான் லூயிஸிற்கு சினிமா ஆசை துளிர் விட்டது. லூயிஸ் இப்போதெல்லாம் தன்னைச் சந்திப்பவர்களிடம் சினிமா பற்றியே திரும்பத்திரும்பப் பேசுகிறாராம்.

"சினிமா மீது அசைக்கமுடியாத ஆர்வம் ஏற்பட்டு விட்டது. எப்படியும் சினிமாவில் நடித்தே தீருவேன். தேவைப்பட்டால் சண்டைப்பயிற்சி மற்றும் தொழிநுட்பப் பணிகளிலும் இறங்குவேன்" என்கிறார் லூயிஸ்.

# மீன்களைக் காப்பாற்றும் மீட்புப் படையினர்

படத்தில் மிதந்து கொண்டிருக்கும் இந்த மீன்களுக்கு என்ன நடந்திருக்கும் என்று உங்களால் யூகித்திருக்க முடியும். ஆம், இந்த ஏரியில் இரசாயனப் பொருள் ஏதோ கலந்ததால் பல ஆயிரக்கணக்கான ஒரே இன மீன்கள் இறந்து விட்டன.

இவற்றில் இறக்காமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஏனைய மீன்களைக் காப்பாற்ற விசேட மீட்புப் படையினர் ஈடுபடுகின்றனர். பின் அவற்றிற்குச் சிகிச்சை அளிப்பதற்காக ஹெலிக்கொப்டரில் ஏற்றுகின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் தென்கொரிய சியோல் நகரில் உள்ள 'தேச்சோன்' என்ற ஆற்றில் இரசாயனம் கலக்கப்பட்டதால் இச்சம்பவம் நிகழ்ந்தது.

இந்த மீன்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் 'கொரிய 119' என்று அழைக்கப்படும் விசேட மீட்புப் படையினராவர்.





# தகவல் பெட்டி


அஹமட் நியாஸ்

வரும் செப்டெம்பர் மாதம் புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின்றன. அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் தொடங்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்காக பலகாலமாகவே அவுஸ்திரேலியா விழாக் கோலம் பூண்டு வருகிறது.

இந்த ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றும் அவுஸ்திரேலிய வீரர்கள் வீராங்கனைகளைத் தமது விளம்பரங்களில் பல நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்கின்றன. அதிலும் பல நிறுவனங்கள் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை அரை மற்றும் முழு நிர்வாணமாக விளம்பரப் படுத்துகின்றன.

'அல்பல்' என்ற நிறுவனத்தின் உற்பத்திப் பொருளுக்காக அவுஸ்திரேலிய நீர்ப்பந்து விளையாட்டு வீரர்கள் கொடுத்த விளம்பரப் போஸ் இது.

## ஒலிம்பிக் விளம்பரங்கள்






இவர்கள் ஜாலியால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டு விட்டதாம். அதனால்தான் ஃபிலிப்பைன்ஸ் நாட்டு பொலிசார் இந்த வினோதமான தண்டனையை வழங்கியுள்ளார்கள்.

## தண்டனை

படத்தில் கைகளையும் கால்களையும் நிலத்தில் ஊன்றிக் கொண்டிருக்கும் இந்த நால்வருக்கும் என்ன நடந்தது என்ற கேட்கிறீர்களா?

முக்கியமான போக்குவரத்து வீதியில் இவர்கள் ஜாலியாக நடந்ததற்குத் தான் இந்தத் தண்டனை.

"அப்படியென்றால் ஜாலியாக நடக்கக் கூடாதா?" என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

## மணல் முகம்

அண்மையில் உலகில் உள்ள பௌத்தர்கள் புனித வெசாக் தினத்தைக் கொண்டாடினார்கள்.

புனித வெசாக் தினத்தன்று தென்கொரிய நாட்டின் 'பூசான்' என்ற கடற்கரையில் வெசாக் தினக் கொண்டாட்டங்கள் கொண்டாடப்பட்டன.

அன்றைய தினம் ஒருவர் புத்தபெருமானின் திரு முகத்தை மணல் சிற்பமாக வடிக்கும் காட்சியே இது.



# குணச்சித்திர நடிகரின் 'பலான' அழைப்புக்கள்

தமிழகத்தில் பிரபல தினசரி ஒன்றின் இலவச இணைப்பு மலரில் வெளியான கட்டுரை ஒன்றில் வெளியானதை அப்படியே உங்களுக்குத் தருகிறேன்.

பெயரில் மட்டும் ராஜாங்கம் நடத்திக் கொண்டிருக்கும் அந்த 'விநோத'மான சக்கரவர்த்தி நடிகர் குணச்சித்திர வேடங்களில் நடிப்பதில் புகழ்பெற்றவர்.

அவரை மதித்து யாராவது பேசக் கொடுத்தால் போதும், உலக விஷயங்களைப் பற்றி, அதுவும் 'பலான' 'விஷயங்களைப் பற்றி பொளந்து கட்டி விடுவார். செக்ஸில் அவர் பெரிய மன்னர் என்று நினைக்குமளவில் அவரது பேச்சு இருக்கும்.

நடிகைகள் அவரிடம் சிக்கிக் கொண்டால் அவ்வளவுதான். அதுவும் ஏமாந்தவர்களாக இருந்தால் அவர்களிடம் தனது செக்ஸ் வீரப்பிரதாபங்களை எல்லாம் எடுத்து விடுவார்.

'இத பாரும்மா. ஒரு முறை என்கிட்ட வந்துட்டா எந்த நடிகையும் வாழ்நாளில் என்னை மறக்கவே மாட்டா. ஒரு 'தப்புத்தாள' நடிகை என்காலில் விழுந்து கதறிட்டா. 'எத்தனையோ பேருக்கு ஈடு கொடுத்திருக்கேன். உங்களுக்கு ஈடு கொடுக்க முடியாதய்யா," என்று அழுதிட்டா. என்கிட்ட வர்றதுக்கு எத்தனை பேர் போட்டி போட்டாங்க தெரியுமா?' என்றெல்லாம் கூறி எதிராளிகளைப் பேசவிடாமல் 'உம்' கொட்ட வைப்பார்.

இப்படிதான் ஒரு முறை வெளிப்புறப் படப்பிடிப்பொன்றில், தன்னோடு நடித்த 'சித்திரமான' நடிகையிடம் தன் அளப்புக்களை எடுத்து விட்டு. அவருக்கு அழைப்பு விடுத்தார். நடிகையும் அதற்கு உடன்பட்டார்.

"உனக்கு என்ன ட்ரிங்க் பிடிக்கும்?" என அவர் கேட்க, "உங்களுக்கு என்ன பிடிக்குமோ அதை வாங்கி வையுங்கள்," என்ற நடிகை, "இரவு உங்க அறைக்கு வந்து விட்டுமா" என்று கேட்க, நடிகர்," என் அறையில் சாமி படங்கள் எல்லாம் இருக்கு. உன் அறைக்கே வந்து விடுகிறேன்" என்றார்.

இரவு வந்தது நடிகர் நெற்றியில் விபூதி பட்டையோடு நடிகையின் அறைக்குள் நுழைந்தார். முதலில் இருவரும் மது அருந்தத் தொடங்கினார்கள் நடிகர் அடிக்கடி தெய்வங்களின் பெயரைச் சொல்ல. அதை ரசித்தபடி இருந்தார் நடிகை.

"ரமிலில் வந்ததுபய சரியான களைப்பாக இருக்கிறது" என்று கூறிய நடிகர் அந்த விஷயத்தில் சொதப்பி விட்டார். நடிகைக்கு என்னவோ போலாகி விட்டது. "நாளைக்கு வருகிறேன்" என்று விட்டு கம்பி நீட்டினார் நடிகர். மறுநாள் நடிகையை ஏதோ புதிதாகப் பார்ப்பது போல் பார்த்து விட்டு ஒதுங்கிப் போனார் நடிகர்.

'மூச்சுக்கு முந்நூறு தடவை தெய்வங்களை அழைக்கும் அவரா இப்படி?' என நினைக்கத் தோன்றும் அந்தக் குணச்சித்திர நடிகரைப் பற்றிய இந்த விஷயத்தை ஒரு நகைச்சுவை நடிகர் கூறியிருந்தார்.



இளவரசு-செந்தில் படம் [illegible]

## சங்கீதா சங்கடம்

இந்த வருடம் நடந்த நட்சத்திர திருமணங்களில் சங்கீதா-ஒளிப்பதிவாளர் சரவணன் திருமணமும் அடங்கும். திருமணத்திற்கு முன் சங்கீதா ஒப்புக்கொண்ட படங்களில் மட்டுமே நடித்து வருகிறார்.

இந்நேரத்தில் ரசிகா தனது பெயரை சங்கீதா என்று மாற்றி நடித்து வருகிறார். ரசிகாவைப் பற்றிய கிசுகிசுக்கள் இனி சங்கீதா என்ற பெயரில் வெளியானால் தேவையில்லாமல் தன்னுடைய பெயரும் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற சங்கடத்தில் இருக்கிறார் ஒரிஜினல் சங்கீதா.

## மலையாளத்தில் மாவீரன்

தமிழில் நெப்போலியன் நடித்து வரும் 'தென்றலைத் தூது விட்டு', 'கரிசக்காட்டுப் பூவே' போன்ற படங்களின் படப்பிடிப்புகள் பணப் பிரச்சனையால் தள்ளிப் போக கன்னடம் மற்றும் மலையாளப் படங்களில் கவனம் செலுத்த ஆரம்பித்தார்.

இவரது முரட்டுத்தனமான நடிப்பு மலையாளத்து இரசிகர்களுக்குப் பிடித்துப்போக நாலைந்து படங்களில் கதாநாயகனாக நடித்து வருகிறார். அவற்றில் ஒரு படம் விரைவில் தமிழுக்கு மொழிமாற்றப்பட்டு வெளியாகவுள்ளது.

## 'நாயுடு கி திரேட்'

விஜயகாந்த் நடித்து தற்போது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'வல்லரசு' இந்தியில் தயாராகப் போகிறது. இந்தியில் சன்னி தியோல் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

அதேவேளை 'வல்லரசு' தெலுங்கிலும் தயாராகவுள்ளது.

தெலுங்கில் 'ட்ரக்ஸ்' சுரேஷ் என்பவர் தயாரிக்கும் இப்படத்திற்கு 'நாயுடு தி கிரேட்' என்று பெயரிடப் பட்டுள்ளது.

தெலுங்கில் அநேகமாக வெங்கடேஷ் நாயகனாக நடிப்பார் என்று தெரிகிறது.



அருண்குமார்-சுவலட்சுமி படம் கண்ணால் பேசவா

## ரஜினியின் கதை

ரஜினியின் நண்பரும் தெலுங்கு நடிகருமான மோகன்பாபு தற்போது 'ராயல சீமா ராமன்னா சௌத்ரி' என்ற தெலுங்குப் படத்தில் நடித்து வருகிறார். 'பாட்ஷா' புகழ் சுரேஷ் கிருஷ்ணா இயக்கும் இப்படத்தில் மோகன் பாபு இரட்டை வேடத்தில் நடிக்க அவருக்கு ஜோடிகளாக பிரேமா மற்றும் ஜெயசுதா நடிக்கிறார்கள்.

இப்படத்தின் கதை ரஜினிகாந்தினுடையது. ஒரு நாள் ரஜினி மோகன்பாபுவுக்கு இக்கதையைச் சொன்னார். கதை மோகன்பாபுவுக்கும் பிடித்துப் போக அதை ரஜினி அவருக்கே கொடுத்து விட்டார்.

## காதோடு சொல்லுகிறோம்

மார்க்கண்டேய நடிகரின் மகனுடன் ஆக்ஷன் மன்ன... நடிகரையும் இணைத்து படமொன்றைத் துவக்கினார்க... ஆக்ஷன் மன்னனின் 'சுதந்திர'மான படம் தோல்... யடைந்ததால் அவரை தூக்கிவிட்டு பலசாலியா... குமார நடிகரை ஒப்பந்தம் செய்தனர். ப... விநியோகஸ்தர்கள் மத்தியில் அவரது படங்களு... தடை விதிக்கப்பட்டதால், இப்போது அவரையு... கழற்றிவிட்டு வேறொரு நடிகரைத் தே... வருகிறார்களாம்.

இசை நிகழ்ச்சிக்காக மலேசியா சென்... பார்ட்டி வைக்கும் தம்பதி.அங்கு அமை... சர் ஒருவரின் வீட்டில் வாரிசுகளு... தங்கினார்களாம். அவர்களுக்... தடபுடலாக விருந்து வைத்... அந்த அமைச்சர், விலைமதி... பற்ற பரிசுகளைக் கொடு... தாராம். அதற்கா... அமைச்சரைக் குஷ... படுத்தி விட்டு ... தார்களாம் அவர்கள்.

கோவை ... கிருஷ்ண... ஒளிப... திரை... இப்படம்... உருவாக்க...



## இமய மலை உச்சத்தில் 'வானவில்' படப்பிடி...

குரு ஃபிலிம்ஸ் தயாரித்து வரும் படம் 'வானவில்'. இந்தப் படத்தின் படப்பிடிப்பு இமயமலை உச்சியில் மொசூரி என்ற இடத்தில் நடைபெறுகிறது.

சுமார் 4 கோடி இந்திய ரூபாய் செலவில் உருவாகி வரும் இப்படத்தை இயக்கி வருகிறார் மனோஜ்குமார்.

'இந்தப் படத்தில் இடம்பெறும் ஒவ்வொரு காட்சியும் புதிதாக இருக்கும். வேறு ஒரு படத்தின் சாயல் இருப்பதாக யாராவது நிருபித்தால் ... இலட்சம் ரூபா கொடுப்... என்று சவால் விடுகிறார் இய... மனோஜ்குமார்.

அர்ஜுன்-புதுமுகம் அபி... பிரகாஷ்ராஜ் முதன்மை ... களில் நடிக்கும் இப்படத்தில் ... லட்சுமி, மணிவண்ணன், ச... பாரதி, தேவன், ராக்கி ஆகியோ... நடிக்கிறார்கள்.

## ஆற்றின் நடுவே அமைக்கப்பட்ட அரங்கு

மாம் கிரியேசன் நிறுவனம் 'சிவகாமி' என்ற பெயரில் படமொன்றைத் தயாரிக்கிறது. இதில் மீனா கதாநாயகியாக நடிக்கிறார். இதில் நரிக்குறவப் பெண் வேடம் ஏற்கும் மீனாவுக்கு ஜோடி கிடையாது.

இப்படத்தில் நகிதா சர்மா, பூஜா, விஜயகுமார், திலகன், ஹம்சவர்த்தன், நிஷிகுமார், பாலாஜி, 'வெண்ணிற ஆடை' நிர்மலா, ஸ்ரீவித்யா, சுமித்ரா ஆகியோர் நடிக்கிறார்கள்.

வைரமுத்து பாடல்களுக்கு தேவா இசையமைக்க, கிச்சாஸ் ஒளிப்பதிவு செய்கிறார். மோகன்தான் படத்தை இயக்குகிறார்.

இப்படத்திற்காக ஆற்றின் நடுவே 20 இலட்ச ரூபாய் செலவில் கோவில் அரங்கு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முகப்பில் — நெப்போலியன், சங்கீதா

## ராணிமுகர்ஜி மு...

'ஹேராம்' படத்தில் கமலோ... இதழோடு இதழ் பதித்து மு... காட்சியில் நடித்த ராணிமு... இனி இது போன்று நடிப்பதி... என்று முடிவு செய்துள்ளார் ... ணம் தன்னைச் சந்திப்பவர்கள்... லோருமே அதைக் குறித்தே அ... கேட்பதால் இந்த முடிவாம்.

...தூடும்பப் படம் எடுக்கும் மூன்றெழுத்து ...க்குநர் உதை மணியைத் தனது அடுத்த படத் ... நடிக்க வைப்பதற்காகக் கேட்கச் சென்றா ...ம் 'உன் படத்தோட மொத்தச் செலவுதான் ... சம்பளம் உன்னால கொடுக்க முடியுமா? ...று எகத்தாளக் கேள்வி கேட்டு அவரை ...சலோடு திருப்பி அனுப்பிவிட்டாராம்.

இரண்டெழுத்து வெற்றிப்படத்திற்குப் பின் ... காட்டில் அடை மழை கொட்டுமென்று எதிர் ...ர்த்தாராம் 'குஜலாம்பாள்' நடிகை. வாய்ப்புக் ... வராததால் அவர் பொறுத்தது போதும் ...று கவர்ச்சியில் தாராளமயக் கொள்கையைக் ...டைப்பிடிக்க ஆரம்பித்து விட்டாராம்.

## இராம. நாராயணன் இயக்கும் 'யப்பா யப்பா ஐயப்பா'

'திருப்பதி ஏழுமலை வெங்கடேசா', 'கந்தா ...ப்பா கதிர்வேலா' ஆகிய படங்களைத் ...டர்ந்து இராம. நாராயணன் இயக்கும் படம் ...பா யப்பா ஐயப்பா'.

இப்படத்தில் நாயகனாக சத்யராஜ் நடிக் ...ர். இவருடன் 'திருநெல்வேலி' படத்தில் அறி ...மான இளம் நாயகன் உதயாவும் நடிக்கிறார். ...கதாநாயகியாக ரோஜா, மும்தாஜ் நடிக்க ...றும் மணிவண்ணன், வடிவேலு, விவேக், ... அம்பிகா, பொன்னம்பலம், காக்கா ராதா ...பட பலர் நடிக்கின்றனர்.

...குமார் இசையமைக்க, என்.கே.விஸ்வநாதன் ...செய்கிறார். கதை வசனத்தை கலைமணி எழுத ... அமைத்து இயக்குகிறார் இராம. நாராயணன். ... ஆரம்பமாகி ஒகஸ்ட் 15ல் வெளியாகவுள்ள ...ம் நகைச்சுவைக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டு ...து.



ரோஜா-குஷ்பு-விவேக்-கோவை சரளா-புதுமுகம் கவிதா
படம்: கூடிவாழ்ந்தால் கோடி நன்மை





## அப்செட்டான அப்பாஸ்

ஒரு நடிகரின் படம் ஒன்று வெற்றி பெற்றுவிட்டால் போதும் அவர் நடித்த வேற்றுமொழிப்படங்கள் ஏதாவது இருக்கிறதா என்று கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டு தேடிக் கண்டுபிடித்து அதை மொழிமாற்றம் செய்து வெளியிட்டு விடுவார்கள்.

அந்தவகையில் 'அலைபாயுதே' மூலம் தமிழில் உச்சத்தில் இருக்கும் மாதவன் நடித்த 'சாந்தி சாந்தி சாந்தி' என்ற கன்னடப் படத்தை 'ரிலாக்ஸ்' என்ற பெயரில் தமிழுக்கு மொழிமாற்றுகிறார்கள்.

இதில் வேடிக்கை என்னென்றால் படத்தின் கதாநாயகன் அப்பாஸ். மாதவன், படத்தில் அப்பாஸின் 4 நண்பர்களில் ஒருவர். ஆனால் மாதவனை விளம்பரங்களில் முன்னிறுத்துகிறார்கள்.

ஏற்கனவே 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தின் விளம்பரங்களில் அப்பாஸை இருட்டடிப்புச் செய்தார்கள். இப்போது 'ரிலாக்ஸ்' பட விளம்பரங்களிலும் அதே நிலை என்ற வருத்தத்தில் அப்செட்டாகி இருக்கிறார் அப்பாஸ்.

## மினி சினி

★ 'அலைபாயுதே' படத்துக்குப் பின் மாதவன் நடிக்கும் படம் 'தோழன்'. 'அமர்க்களம்' படத்தை தயாரித்த வெங்கடேஸ்வராலயம் தயாரிக்கும் இப்படத்தை ஆர்.வி. உதயகுமாரின் உதவியாளராக இருந்த புஷ்பாவாசன் என்னும் புதியவர் இயக்கவுள்ளார்.

★ சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் 'மாயி' படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடுகிறார் மந்த்ரா. சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் அடுத்தபடத்தில் வாய்ப்புக் கொடுப்பதால் தான் நடனமாட சம்மதித்தாராம் மந்த்ரா.

★ பார்த்திபன் நடித்த 'புதுமைப்பித்தன்' படத்தை இயக்கிய ஜீவா, ஒரு தெலுங்குப் படத்தை இயக்கவுள்ளார். ஸ்ரீகாந்த் கதாநாயகனாக நடிக்கும் இப்படம் தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாராகிறது.

★ முதல் முறையாக மீனா அம்மன் வேடத்தில் நடிக்கவுள்ளார். இராம நாராயணன் இயக்கும் 'பாளையத்து அம்மன்' படத்திலேயே மீனா அம்மன் வேடத்தில் நடிக்கவுள்ளார். கதாநாயகன் ராம்கி.

★ மு.களஞ்சியம் ஒரு சிறிய இடைவெளிக்குப் பின் மீண்டும் படமொன்றை இயக்கவுள்ளார். பிரபு-தேவயானி ஜோடியாக நடிக்கும் இப்படத்திற்கு 'மிட்டா மிராசு' என்று பெயரிடப்பட்டுள்ளது.

★ தமிழில் வெற்றிகரமாக ஓடும் 'அலைபாயுதே' படத்தைத் தெலுங்கில் 'சகி' என்ற பெயரில் மொழிமாற்றி வெளியிட்டார் மணிரத்னம். தமிழை விட தெலுங்கில் சக்கை போடு போடுகிறதாம் 'சகி'.

★ தமிழில் காணாமல் போன இஷா கோபிகர் கன்னடத்தில் வெற்றிப்பட நாயகியாக உலா வருகிறார். இவர் ரமேஷ் அரவிந்துடன் நடித்து வரும் 'கூ அந்தியா கூகு அந்தியா' படம் பெரும் எதிர்பார்ப்பிற்குள்ளாகி உள்ளது.

★ இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமானின் நண்பரும் இசையமைப்பாளருமான பிரவீண்மணி முதல்முறையாக ஒரு தமிழ்ப் படத்திற்கு இசையமைக்கவுள்ளார். இப்படத்தை ...

## பழச்சாறு விற்கும் ரம்பா

தமிழில் அருண்குமாருக்கு ஜோடியாக 'அன்புடன்' படத்தில் மட்டுமே நடித்து வருகிறார் ரம்பா.

படவாய்ப்புகள் குறைந்துள்ள நிலையில் இப்போது புதுப்புது வியாபாரங்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளார் ரம்பா.

ஏற்கனவே தேயிலை விற்பனை ஏஜென்ஸி எடுத்து தனது அண்ணன் வாசு பொறுப்பில் விட்டுள்ளார் ரம்பா. இப்போது அடைப்பு பெட்டிக்குள் அடைக்கப்பட்ட பழச்சாறு மற்றும் குளிர்பானங்களை விற்பனை செய்யும் உரிமத்தையும் பல இலட்ச ரூபா செலவில் வாங்கி விற்பனை செய்து வருகிறார் ரம்பா.

இதற்காகப் பலவகைப் பழச்சாறுகளும் ரம்பாவின் ஒய்யாரமான விளம்பர போஸ்டருடன் கூடிய போஸ்டர்களும் தமிழகம் முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

சினிமா கைவிட்டாலும் ரம்பாவின் கைவசம் தொழில் இருக்கிறது. பிழைத்துக் கொள்வார்.

## கமல் ஜோடியாக யுக்தா முகி?

'முதல்வன்' படத்தை சொந்த மாகத் தயாரித்து இயக்கிய ஷங்கர், அடுத்த இயக்கும் படத்தை 'பெண்டா ஃபோர்' என்னும் கம்பியூட்டர் நிறுவனம் தயாரிக்கிறது. இதில்கதாநாயகன் கமல்.கமலுக்கு ஜோடி...ாக இந்தப் படத்தில் நடிப்பதற்கு சென்ற வருட... அழகியான யுக்தா முகியை அணுகியுள்ளார்கள். ...ா ராய், சுஷ்மிதா சென் ஆகிய அழகிகளை ...கர் இயக்கத்தில் இந்த அழகியும் நடிப்பாரா?

## 'நண்டு' பிடிக்கத் தடை

விஜய்-ஜோதிகா நடிப்பில் வெளிவந்து ஓடிக் கொண்டிருக்கும் 'குஷி' படத்தில் விஜய்யும் மும்தாஜும் இணைந்து நடனமாடும் 'கட்டிப்புடி கட்டிப்புடிடா...' என்ற முக்கல் முனகல் பாடல் காட்சியில் மும்தாஜ் அரைகுறை ஆடைகளில் வெளிப்படுத்திய நடன அசைவுகள் பார்ப்போரை வியர்க்க வைப்பது என்னவோ உண்மைதான்.

அத்தோடு பாடலைப் பாடிய 'ஹேராம்' நாயகி வசுந்தரா தாஸும் தன் பங்கிற்கு குரலில் மோகத் தீயைத் தடவி இளசுகளைத் துள்ள வைத்துவிட்டார்.

படம் தணிக்கைக்குப் போனபோது தணிக்கைக் கத்திரி இந்தப் பாடல் காட்சியில் கண்டபடி பதம் பார்த்துவிட்டது. குறிப்பாக, 'எந்த இடத்தில் சுகம் அதிகம், கண்டுபிடிப்பேன்... அந்த இடத்தில் நண்டு பிடிப்பேன்' என்ற வரிகளில் 'நண்டுபிடிப்பேன்...' என்ற வார்த்தைகளை வெட்டி விட்டனர்.

தணிக்கைக்குப் போன பிறகே இப்படியென்றால், தணிக்கைக்குப் போகுமுன்னர் இந்தப் பாடல் காட்சி எப்படி இருந்திருக்கும்?



அலெக்ஸ்-ஷாலு
படம்: வைஷ்ணவி

## நான்

"படைப்பின் இரகசியம்தான் என்ன!"
இறைவனிடம் ஒருவனின் கேள்வி
"இரகசியம் இல்லாத தன்மைதான்"
என்றார் அவர்
"விளங்கவில்லையே!" என்றான் அவன்
விளங்கிவிட்டால் நான் இல்லையே"
என்றார் அவர்
"நான் என்று யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?"
என்றான் அந்த விடாக்கண்டன்.
"உன்னையும் என்னையும் தான்!"
என்றார் அந்த விஷகண்டன்

பெ.இராஜேந்திரன்-கொழும்பு.



## தேன்கிண்ணம்

## ஆதங்கம்

அன்பிற்குரிய....
என் அருமை மைந்தனே!
இச் சூழலும் யந்திர வாழ்க்கையும்
எனக்குப் பிடிக்கவில்லை.
என்னை என் ஊருக்கே
அனுப்பி (வை)விடு!
••
உன்னிடம்
படுப்பதற்கு பஞ்சு மெத்தை கேட்கவில்லை;
பாயும் தலையணையும் கிடைத்தால்
போதும்!
ஏசிக் காற்றுக் கேட்கவில்லை;
இயற்கைக்காற்று வீசினால் போதும்!
அலாரம் மணி அடித்து
விடிகின்ற விடியல் கேட்கவில்லை;
சேவல் கூவி விடிகின்ற
விடியலே போதும்!
நாலு சுவற்றுக்கு நடுவில் வாழும்
போலி வாழ்க்கை வாழ விரும்பவில்லை.
••
நாலு பக்க வேலி வாழ்க்கை
வாழ்ந்தால் போதும்!
காரும் ரயிலும் கேட்கவில்லை;
நம்மூர் கட்டவண்டியே போதும்
புரியாத மழலைமொழி
கேட்கமுடியவில்லை
கொஞ்சும் மழலையின்
தமிழ் மொழி கேட்டால் போதும்.
தொலைக்காட்சியில்
புரியாத மொழியில் படம் பார்க்க
விருப்பமில்லை.
நம்மூர் இயற்கைக் காட்சியுடன் எழில்
மிகு வயற்
காட்சியையும் பார்த்தால் போதும்!
••
இத்தனையும் இல்லாத இவ்வூர்
எனக்குப் பிடிக்கவில்லை!
என்னை என் ஊருக்கே
அனுப்பி (வை)விடு!
••
என்றும்
அன்புடன்
அம்மா.

எஸ். றோஜனா-அரியாலை.

## ஒரு பாமரனின் பிரார்த்தனை

என்ன கேட்டேன்
உன்னிடத்தில்?
ஆசை பிடித்த
சொகுசு விரும்பி நானில்லை;
அதுதா... இதுதா..:
என்று கேட்க!

அரசியல் மோகம்
எனக்கில்லை;
அந்நியத்தனமும்
என்க்கில்லை;
ஆயுதமும் ஆதிக்கமும்
எனக்குத் தேவையில்லை;
பணத்திமிரில்
முதலாளியாகும் எண்ணமும்
எனக்கில்லை;
ஆட்சியைக் கைப்பற்றும்
அதிகாரமும் எனக்கு
இல்லவே இல்லை!

எட்டாக்கனிக்கு
கொட்டாவி விடும்
அப்பாவி மாதிரி
அன்றாடம் உன்னையே
கனவுகண்டு கனவுகண்டு
கற்பனையை வளர்த்து வைத்திருக்கும்
என் தேசத்துப் பிரஜைகளில்
ஒருகிராமத்துப் பாமரன் நான்!

இந்த மண்ணில் நான்
அவலத்தின் அவஸ்தையை
அனுபவித்து விட்டேன்;
மரணத்திலும்
வாழ்க்கையைத் தேடி
துவண்டு விட்டேன்;
முழுமையற்ற
என் வாழ்க்கையில்
அத்தனை
அனர்த்தங்களின்
அக்கினிச் சுவாலையின்
தகிப்பையும்
சகித்து விட்டேன்!

அன்றாடம்
உண்ண கொஞ்சம்
உணவும்
உடுக்க ஓர் உடையும்
படுக்கச் சிறு குடிசையும்
சுவாசிக்க சுத்தமான
சுதந்திரக் காற்றுமே
நிம்மதியாக வாழப்
போதுமானவை எனக்கு.

இன்னமும் நான்
உன்னிடத்தில்
என்ன கேட்பேன்?
சமாதானமே!
இல்லாமையையும்
இனவாதத்தையும்
ஏற்றத் தாழ்வுகளையும்
இல்லாமல் செய்திடலாம்
நீ வா...
இந்த மண்ணில்
அமைதிகாப்போம்!

இளையவன் ஜாபீர்-அட்டாளைச்சேனை.

## ஒரு மலையக கு(யி)(ர)ல்

சொந்த மண்ணின்
சுதந்திர அகதிகள்
நாங்கள்...!

எங்கள்
மண்ணில்
எங்களுக்கே வேலிகள்...!

வேலிகள் எல்லாம்
போலிகளாய்
எங்கள் மேல்
வேல்களைப் பாய்ச்சும்போது
இரத்தம் சிந்தி
நாங்கள்
இறக்கவா முடியும்.....?!

இது
எந்த ஏட்டில்
எழுத பட்ட கொடுமை...?!

இது எங்கள் வர்க்கத்தை
வேரோடு பிடிங்கிவிடும்
சூழ்ச்சியா....?

இல்லை
வெந்த புண்ணில்
வேல்பாய்ச்சும் வித்தையா....?!

பொறுப்பவர்களை
மேலும் மேலும்
வெறுத்துக் கொண்டுபோனால்,

இந்த
பூமிக்கூட தாங்காது....!

போலி வேலிகளை
பெயர்த்தெறிய
நாங்கள் புறப்பட்டுவிட்டால்
எங்களுக்கும்
'பயங்கரவாதிகள்' என்று
முத்திரை குத்திவிடாதே...
என்
சுதந்திர தேசமே...!

ராம்.யுவராஜ்-கண்டி.



## அவஸ்தை

அமர்ந்தார்..
புத்தகங்களோடு போர் செய்தார்
கூட்டினார்
பிழைவிட்ட இடத்தைச் சுரண்ட
'பிளேட்' தேடினார்..
'ப்ச்' என்றார்
சில இடங்களை வெட்டினார்
கொசு அடித்தார்,
வெற்றி பெற்றார்!
-•-
கணக்குப் புத்தகத்தை மூடிவிட்டு
கொட்டாவி விட்டார்.
எல்லாக் கணக்கும் சரி!
-•-
சம்பள நாள் வந்தது...
மெலிந்த பூனையுடன்
கடைசிப் பிள்ளையும்
நரைத்த தலை மனைவியும்
ஏனைய பிள்ளைகளும்
அங்கொருவரும் இங்கொருவருமாய்
அக்கறையுடன் நின்றனர்.
-•-
தலை சொறிந்தார்
'கணக்கு எங்கோ பிழைக்கு'தென்றார்!

எஸ்.பிரபா

## அந்தநாள் என்று வரும்?

விட்டிற் பூச்சிகளுக்குப் பயந்து,
கட்டியிருக்கும் கச்சை நழுவி,
தட்டுத்தடுமாறி ஓட-நாம்
என்ன வெந்நீர் உடம்பு
படைத்த வெறும் மனிதரா?
★★
இமயம் தொடங்கி, குமரி வரை
வென்ற வீரச் செந்நீர்
சிந்திய வேங்கை தமிழரடா
நாங்கள்!
★★
ஆனால் இன்று;
சந்தேகத்துப் பார்வையில்
சந்தியென்றும் பாராது
அடிமேல் அடிவாங்கும்
அபலைகள் இங்கு
நாம் மட்டும் தான்!
★★
ஆனாலும்... அடி வாங்கினாலும்
நாங்கள் அம்மியல்ல
நகருவதற்கு!
★★
மலையைக் கூடப் புரட்டும்
மகிமை எமக்குண்டென்பதை
மறத்தமிழர் மட்டுமே அறிவர்!
இன்று உயிரற்ற எம்
உடல்களைப் புரட்டுவதற்குக்கூட
எவருமில்லையிங்கே!
என்ன செய்வது?
தமிழராய் இப்பூமியில்
வந்து
தவறாகப் பிறந்து விட்டோமே!
★★
தொல்லை தரும் போர்க்கள
கூட்ட மகன்று,
வெள்ளைப் புறாக்களின்
இராஜ்யம் இனி எப்போது வரும்?

தமிழரும் தலை நிமிர்ந்து
வாழும் நன்நாளும்
அன்றுதான் வரும்!

சிவலிங்கம் சிவகுமாரன்-
வட்டகொடை.

## அட அப்படியா?



இரவு தூங்கும் போது கிழக்குப் பக்கம் தலை வைத்து மேற்கே கால் நீட்டிப் படுப்பது நல்லது.

கிழக்கே தலைவைத்துப் படுப்பதால் மனோ தைரியமும் உடல் வலிமையும் பெருகும். இல்லத்தில் பிரச்சனைகள் இருக்காது.

மேற்கே தலை வைத்துப் படுத்தால் தண்ணீர்த் தொல்லை தீரும். பிரயாணத்தில் வெற்றி கிடைக்கும்.

தெற்கே தலைவைத்துப் படுத்தால் பொன், பொருள் பெருகும். தம்பதிகள் சண்டை சச்சரவுகள் தீரும்.

வடக்கே தலைவைத்துப் படுப்பது கூடாது. அதே போல் வடகிழக்கு, தென்கிழக்கு போன்ற மூலைகள் சேரும் பகுதியிலும் தலைவைத்துப் படுக்கக் கூடாது.

வாசற்படிக்கு நேரேயும் தலைவைத்துப் படுக்கக் கூடாது.

பலர் ஓரிடத்தில் தங்க நேர்ந்தால், ஒருவர் கால் அருகில் ஒருவர் தலை வைத்துப் படுக்கக் கூடாது.

## பேனா நண்பர்கள்



பெயர்:
கே. விமலநாதன்
வயது: 20
முகவரி: கிரேட்வெஸ்டர்,
தலவாக்கலை.
பொழுது போக்கு:
பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: கே. ஸ்ரீதேவி,
வயது: 20
முகவரி:
தவசிக்குளம்,
கண்டி வீதி, வவுனியா.
பொழுது போக்கு:
வானொலி கேட்டல்.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானீர'

18.06.2000 முதல் 24.06.2000வரை

**மேடம்:**
திருமண முயற்சிகள் கைக்கூடும். கடன், வழக்குப் பிரச்சனைகள் தீர்வடையும். கல்வியில் அபிவிருத்தி காணப்படும். பரீட்சைகள் நல்ல முடிவு தரும். உடல் நிலையில் கவனம் எடுக்கவும். அச்சுவினி, நட்சத்திர பெண்களுக்கு அதிஷ்டகரமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 5
அதிஷ்ட திகதிகள் : 20, 23

**இடபம்:**
செலவுகள் கட்டுக்கடங்கும். கணவன், மனைவி தகராறுகள் தோன்றும். சிறுபிள்ளைகளின் கல்வி என்பன நன்றாக அமையும். அலைச்சலும் உடல் அசதியும் காணப்படும். ரோகினி நட்சத்திர குடும்பத்தவர்களுக்கு கஷ்டமான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 4
அதிஷ்ட திகதிகள் : 22, 20

**மிதுனம்:**
மனதில் தடுமாற்றம் ஏற்படும். தொழில் அமைப்பில், திடிர் மாற்றம் ஏற்படும்.வாழ்க்கை வசதிகள் அதிகரிக்கும். நண்பர்களின் உதவி கிட்டும். கன்னிராசிக்காரரால் உதவிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 2
அதிஷ்ட திகதிகள் : 20, 21

**கடகம்:**
பணவரவுண்டு. பொருட்கள் சேர்க்கைக்கிடமுண்டு. நோய் துன்ப மாற்றமும், பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். பயணங்களில் வெற்றி ஏற்படும். பூசநட்சத்திரருக்கு பணவசதிகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 7
அதிஷ்ட திகதிகள் : 18, 22

**சிம்மம்:**
பாரிய புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரமுயலும். கடன் பிரச்சனைகள் முடிந்து நல்ல நிலைக்கு திரும்பக் கூடிய பலன் உண்டு. கல்வி, தொழில் ஊக்க முயற்சிகள் கூடும். நன்மையான காலமாகும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, புதன்
அதிஷ்ட நிறம் : இளநிறம்; எண்: 1
அதிஷ்ட திகதிகள் : 19, 23

**கன்னி:**
குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புதிய இடங்களுக்குச் சென்றுவரவேண்டி வரும். தடைப்பட்ட பல விடயங்கள் தீர்வுக்கு வரும். நோய், தொழில் நிவர்த்திபெறும். உத்தரப் பெண்களுக்கு உயர்வான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், செவ்வாய்
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 6
அதிஷ்ட திகதிகள்: 21, 24

**துலாம்:**
தொழில் மற்றும் கல்வி நிலையில் சிக்கல் தோன்றும்.காதலால், குடும்பத்தில் பிரச்சனைகள் தோன்றலாம்.பணச் செலவுடன், நோய்துன்ப நிலை வந்துபோகும். சுவாதிப் பெண்களுக்கு பல சிக்கல்களைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி
அதிஷ்ட நிறம் : வெண்மஞ்சள்; எண்: 3
அதிஷ்ட திகதிகள் : 18, 21

**விருட்சிகம்:**
புதியமுயற்சி, தொழில், பணவசதி நன்றாக அமையும். பெரியோர்களின் ஆசிர்வாதம்கிட்டும். கைத் தொழில் செய்வோருக்கு உயர் வருமான வசதிகள் கிட்டும். பரீட்சை, உயர் வெற்றியாக அமையும். கேட்டைக்காரர் சகல சௌக்கியநிலை பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 6
அதிஷ்ட திகதிகள் : 21, 24

**தனுசு:**
நோய்நிலை மாற்றமுண்டு. பிள்ளைகளால் உயர்வு ஏற்படும். பயணங்களில் பணச் செலவுகள் அதிகரிக்கும். தூரதேச தொடர்புகள் ஏற்படும். வாரஇறுதியில் பல மாற்றங்கள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்
அதிஷ்ட நிறம் : மரூண்; எண்: 5
அதிஷ்ட திகதிகள் : 22, 23

**மகரம்:**
தடைப்பட்ட விடயங்கள் முடிவுக்கு வரும். தொழில் நிலையில் உயர்வு பெறுவர். விவசாய, கூட்டுமுயற்சிகள் சீரடையும். முன்னர் இருந்த எதிர்ப்புக்கள் மறையும், அவிட்டக்காரருக்கு உயாவுகள் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 8
அதிஷ்ட திகதிகள்: 18, 22

**கும்பம்:**
முக்கிய பதவிகள் பறிபோகலாம். கொடுக்கல்வாங்கல்கள் பிரச்சனைகளைக் கொடுத்துச் செல்லும். உடலில் நோய் துன்ப மாற்றங்கள் வந்து போகும். பயணம், தொழில் முயற்சிகளில் அவதானம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, செவ்வாய்
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்: 9
அதிஷ்ட திகதிகள் : 18, 21

**மீனம்:**
பெரியோர்களின் ஆசீர்வாதமும், தூரதேச தொடர்புகள் ஏற்படும்.கல்வி, பரீட்சை முயற்சிகள் நன்றாக அமையும், திட்டமிட்ட விடயங்கள் நன்றாக அமையும். உத்திரட்டாதி பெண்களுக்கு, மகிழ்ச்சியான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 5
அதிஷ்ட திகதிகள் : 22, 24

## நில்-கவனி-முன்னேறு

1. ஒரு புன்சிரிப்புடன் உங்கள் தினத்தை தொடங்குங்கள். கடுகடுப்பான முகம் மற்றவர்களுக்கு எரிச்சலையே உண்டாக்கும்.
2. அன்றாடம் சந்திக்கும் சிறு பிரச்சனைகளைப் பெரிதுப் படுத்தாதீர்கள். லேசான உடல்நலக் குறைவு, சிறு அளவில் பண நஷ்டம், உரிமைகள் மறுக்கப்படுதல் போன்ற விஷயங்களைப் பெரிது படுத்தாதீர்கள்.



3. ஏழைகளுக்கும், வறுமையால் கஷ்டப்படுகிறவர்களுக்கும் உதவ உங்கள் கைகள் தயாராக இருக்க வேண்டும்.
4. பேசுவது உண்மையாக இருந்தாலும் பிறர் தவறை சுட்டிக் காட்டுவதாக இருந்தாலும் சொல்ல வேண்டிய முறையில் சொல்லுங்கள். நீங்கள் சொல்வதால் மற்றவர் மனம் புண்படக் கூடாது.
5. உங்கள் வளமான வாழ்க்கைக்கு உங்கள் உடம்புதான் அடிப்படை. எனவே உடம்பை சரியான முறையில் பேணிக் காத்துக் கொள்ளுங்கள்.
6. உங்களைவிட வசதியானவரைப் பார்த்து பொறாமைப் படாதீர்கள். மாறாக உங்கள் வசதிக்கும் கீழே வாழும் மக்களைப் பார்த்து ஆறுதல் அடையுங்கள்.
7. நீங்கள் செய்த காரியம் தவறு என்று அறியும்போது உடனடியாக தவறுக்கு மன்னிப்பு கேட்கத் தயங்காதீர்கள். இதனால் நிச்சயம் உங்கள் மதிப்பு குறையாது, உயரவே செய்யும்.
8. அடுத்தவரிடம் குறைகாணும் போது பெரிய மனதுடன் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் தவறு செய்யாத முழு மனிதர் இல்லை என்பதை உணர்ந்து செயல் படுங்கள்.
9. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமானக் கொள்கை இருக்கும். எல்லோரும் உங்களைப் போலவே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள்.
10. நிரந்தரமான எதிரி என்று எவரையும் எண்ணாதீர்கள் அவரே பின்னாளில் நெருங்கிய நண்பராக முடியும்.
11. எக்காரியத்தைத் தொடங்கினாலும், முடியும் என்று நினைத்து தொடங்குங்கள். ஏனெனில் நாம் எப்படி நினைக்கிறோமோ அப்படியே ஆகும்.
12. உங்களைவிட வயதில் பெரியவர்கள், பெற்றோர், ஆசிரியர் மற்றும் மேல் அதிகாரிகளிடம் மரியாதை காட்டுங்கள். உம்மை ஒத்தவர்களிடம் அன்பு காட்டுங்கள். உங்களை விட கீழ்ப்பட்டவர்களிடம் கருணை காட்டுங்கள்.
13. நேரமின்மை, வசதியின்மை போன்ற பல காரணங்களால் சமூகத்திலும் நல்லபடியாய் சேவைகள் செய்ய உங்களால் முடியாது போனாலும் சமுதாயத்தை கெடுக்கும் எந்தவிதக் காரியங்களிலும் ஈடுபடாதீர்கள்.
14. உங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டு அதன்படி வாழ்ந்தால் பல விதப் பிரச்சனைகள் அமுங்கி போய்விடும்.
15. இறுதியாக இரவு படுக்கும் போது, அன்றைய தினம் நடந்த நல்ல மற்றும் கெட்ட சம்பவங்களை நினைத்துப் பாருங்கள். வேண்டாத குணங்களை விட்டொழிக்க அது மிகவும் உதவும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ்
லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## பச்சரிசிப் பற்களின் பராமரிப்பு



தினமும் காலை, மாலை அதாவது இரவு படுக்கப் போகும் முன்பு பற்களைத் துலக்க வேண்டும்.

பல் துலக்கப் பயன்படுத்தும் பிரஷ்களை குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாற்றி விட வேண்டும்.

இனிப்பு வகைகளைச் சாப்பிட்டவுடன் தண்ணீரைக் கொண்டு உடனே வாயைக் கொப்பளிக்க வேண்டும்.

பல் பிடுங்கி விட்டு வந்தபிறகு சூடான உணவுகளையோ அல்லது குளிர்மையான உணவுகளையோ சாப்பிடுவதைத் தவிர்த்து விட வேண்டும்.

பல்வலி ஏற்பட்டால் சிலர் கோப்பித்தூள், மூக்குத்தூள் என்று பல்லில் வைப்பார்கள். இது தவறான முறை ஆகும்.

கடைவாய்ப்பற்களில் ஒன்றிரண்டைப் பிடுங்கி விட்டால், அவற்றிற்குப் பதிலாக பொய்ப்பற்களைக் கண்டிப்பாகக் கட்ட வேண்டும். இல்லையென்றால் சாப்பிடுவதற்குக் கஷ்டமாக இருக்கும்.

பொய்ப்பற்களைக் கட்டிய பிறகு மிகவும் கடினமான பொருட்களைக் கடிக்கக் கூடாது. குறிப்பாக கரும்பு, எலும்பு போன்ற கடி அயிட்டங்களைத் தவிர்த்து விட வேண்டும்.

பிள்ளைகள் விளையாடும் போது கீழே விழுந்து பல்லில் இருந்து இரத்தம் வெளியேறும் போது, உடனே ஐஸ்கட்டி ஒத்தடம் கொடுத்து மருத்துவரிடம் அழைத்துப் போவது முக்கியம்.

குழந்தைகளின் பற்கள் சீராக இருக்கவில்லை என்றால் ஆரம்பத்திலேயே சரி பார்க்க வேண்டும். இல்லாவிடில் சிரமம்தான்.

அடுக்குப் பற்கள் உள்ளவர்கள், தேவையில்லாதவற்றை அகற்றி விடுவது நல்லது. அவற்றால் எவ்வித பயனும் இல்லை. மாறாக அவை முகத்தின் அழகைக் கெடுத்து விடும்.

மகிழ்ச்சியான வாழ்க்கைக்குச் சிரிப்பு அவசியம். பச்சரிசிப் பல் அழகிற்கு பற்களை இப்படித்தான் பராமரிக்க வேண்டும்.

## பெண்கள் உணவில் கல்சியம்

இயற்கையாகவே பெண்களின் உடல் வளர்ச்சி வேகமாக இருக்கும். அதற்கேற்ப அதிகமான சத்துக்களை உடலுக்குக் கொடுக்க வேண்டும். அவற்றில் முக்கியமானது கல்சியம். இது வயதான பிறகும் உடலுக்கு வலு சேர்க்கும்.

எலும்பு உறுதி, பற்களின் ஆரோக்கியம் இவற்றிற்குத் தேவைப்படும் கல்சியம் தான் பெண்களுக்கு மிக மிக முக்கியம்.

கல்சியம் சத்துள்ள உணவுப் பொருட்களை இளம்பெண்கள் அதிகம் எடுக்க வேண்டும். ஏனென்றால் வயது அதிகரிக்க அதிகரிக்க உடலானது கல்சியத்தைச் சேர்த்து வைக்கும் தன்மையை இழந்து விடுகிறது. இளம் வயதில் கல்சிய உணவுகள் சாப்பிட்டால் மட்டுமே உடம்பு அதை சேமித்து வைக்கிறது. ஆனால் வயதான பிறகு சாப்பிட்டால் கல்சியம் உடலில் சேமிக்கப்படாமல் கழிவாக வெளியேற்றப்பட்டுவிடும்.

பால், தயிர், பச்சைக்காய்கறிகள், போஞ்சி போன்றவற்றை அடிக்கடி கர்ப்பிணிகள் எடுத்துக் கொண்டால் போதும், அவர்களுக்குத் தேவையான கல்சியம் அவற்றிலிருந்து கிடைக்கும்.

கருவளர்ச்சியின் போது கல்சிய சத்து நிறைய இருந்தால்தான் பிறக்கும் குழந்தை திடகாத்திரமாகப் பிறக்கும். அத்துடன் பால்சுரப்பிற்கும் கல்சியத்தின் பங்கு அதிகம்.

## சின்ன சின்ன யோசனைகள்

தேனீர், கோப்பி கோப்பைகளில் கறை படிந்து கழுவும் போது போக மறுக்கிறதா? கோப்பைகளில் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் தூள் கலந்த நீருடன் ஒரு கரண்டி உப்பைச் சேர்க்கவும். ஒரு மணிநேரம் ஊற வைத்த பின் பிரஷ் கொண்டு தேய்த்துக் கழுவ கோப்பை பளபளக்கும்.

சந்தனத்தூளைத் துணியில் கட்டி பீரோ மற்றும் துணிப்பெட்டிகளில் வைக்க நறுமணம் வீசும். அத்துடன் துணிகளை அரிக்கும் பூச்சித் தொல்லைகளும் அறவே இருக்காது.

முத்துமாலை வைத்திருப்பவர்கள் உங்களது முத்து மாலைகளை கடதாசி மற்றும் பழைய துணிகளால் சுத்தம் செய்ய வேண்டாம். சுத்தமான பருத்தித் துணியால் துடையுங்கள். இதனால் முத்துக்கள் மீது ஒரு கீறல் கூட விழாது. ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் மாலையைப் போட்டு சிறிதளவு டல்கம் பவுடரையும் போட்டு வைக்கவும். இதனால் முத்து பளபளப்பாக இருக்கும்.

தலைவலி அதிகமாக இருந்தால் சுக்கை அரைத்து, நெற்றியில் போட்டுக் கொண்டால் தலைவலி நீங்கிவிடும்.

வாயுத்தொல்லை உள்ளவர்கள் வாதநாராணி இலையை பறித்து, துவையல் செய்து சோற்றுடன் பிசைந்து சாப்பிட்டால் வாயுத் தொல்லையுடன் கை, கால், மூட்டுவலி, குடைச்சல் நீங்கும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HS

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

தொழில்:.............................

கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 24.06.2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# மோனிக்கா என் மோனிக்கா

வழங்குவது புவனா

42

போர்ட்லண்டில் மோனிக்கா அண்டி பிளேய்லரை அவன் இல்லத்தில் சென்று பார்த்து வந்ததிலிருந்து அவளுடைய மனம் ஒரு நிலையிலில்லை. மீண்டும் பிளேய்லருடன் உறவு கொள்ள வேண்டுமென்று அவள் உள்மனது துடித்தது. படுக்கையில் புரண்டு புரண்டு கிடந்தாளே தவிர தூக்கம் வரவேயில்லை.

அதே வேளையில் அவளுடைய அறையிலிருந்த தொலைபேசி கிணுகிணுத்தது. அரை மனதுடன் எடுத்து காதில் வைத்தாள். தன்னுடைய சிநேகிதியான மணப்பெண் தான் மறுமுனையில் தொடர்பு கொள்கிறாளோ என்று தான் நினைத்திருந்தாள். ஆனால் மிக மெதுவாகக் கேட்டது அண்டி பிளேய்லரின் குரல்.

அக்குரலைக் கேட்டதும் அவள் தன்னை மறந்தாள்-விம்மி விம்மியழுதாள். "அண்டி! நீ உடனடியாக இங்கே வரவேண்டும். எப்படியாவது உடன் வந்து சேராவிட்டால் என் உயிரே போய்விடும். உடன் புறப்பட்டு வா!" என்று சிணுங்கினாள்.

'மோனிக்காவுக்கு ஏதோ நடந்து விட்டது போலிருக்கிறது' என்று பிளேய்லர் துடித்தான்.

மனைவியிடம் "மோனிக்காவுக்கு ஏதோ நடந்துவிட்டதுபோல் தெரிகிறது. வா உடனே போய்ப்பார்த்துவிட்டு வருவோம்!" என்று மனைவியையும் அழைத்துக் கொண்டு வாடகை வண்டியொன்றை, பிடித்துக் கொண்டு மோனிக்கா இருக்கும் விடுதியைபோய் அடைந்தான்.

மோனிக்காவின் அறையைத் தேடிப் பிடித்து மணியை அழுத்தினர். சில நொடிகள் கூட தாமதமில்லாமல் கதவு திறந்தது. அப்போது மோனிக்கா இருந்த கோலத்தைப் பார்த்து அண்டியும் கேற்றும் திகைப் படைந்தனர். இவர்கள் இருவரையும் பார்த்ததும் மோனிக்கா ஏமாற்றத்தின் உச்சிக்கே போய் விட்டாள். வீறிட்டு கத்தியவண்ணம் பிளேய்லரை ஓடிப்போய் இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

பிளேய்லரின் மனைவி கேற் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினாள். மோனிக்காவை அந்த இரவு நேரத்தில் யாரோ பலாத்காரம் செய்வதற்கு முயன்றிருக்கின்றனரோ என்றுதான் கேற் கருதினாள். இதற்குக் காரணம் மோனிக்கா அப்போது காணப்பட்ட கோலம்தான். அவளுடம்பில் ஆடைகலெதுவும் காணப்படவில்லையென்பதுதான்.

### அடங்காத ஆசை

மோனிக்கா பொஸ்னியாவுக்குச் சென்ற போது பெண்டகனிலிருந்து தொமாஸ் என்பவரும் சென்றிருந்தார் அல்லவா? இருவரும் ஒரே விடுதியில் சில நாட்கள் தனியாக இருந்தனர். தொமாசும் திருமணமாகாத ஒரு பிரமச்சாரி. மோனிக்காவும் சிறுவயதிலிருந்தே பாலியலில் அதிக நாட்டம் கொண்டவள். இதனால் தனிமையில் இருவரும் ஒன்றாக இருக்கும் போது கிடைத்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொண்டனர். இதனால் மோனிக்கா கருவுற்றதும் கருவைக் கலைத்ததும் ஏற்கனவே வாசகர்கள் அறிந்ததே.

இக்கருக்கலைப்பைத் தொடர்ந்து உளரீதியாக மோனிக்கா பாதிப்படைந்திருந்தாள். முன்பிருந்ததை விட அவருடைய உணர்ச்சிகள் வேகமாக பொங்கியெழுந்து அவளை ஆட்டிப் படைத்தன. தாங்க முடியாத விரகதாபம் அவளை ஆட்கொண்டது.

கிளின்ரனிடம் நெருங்கி உறவாடக் கிடைத்த சந்தர்ப்பங்களும் மோனிக்காவின் தாபத்தைத் தீர்த்து வைக்க ஏற்றதாக அமையவில்லை, அவருடன் ஒன்றாகவே தங்கியிருந்து இன்பம் துய்க்கவேண்டுமென்று அவள் ஆசைப் பட்டாள். கிளின்ரனிடம் வெளிப்படையாகவே தன்னுடைய ஆசையை வெட்கமின்றிக் கூறியுமிருக்கிறாள். ஆனால் அவளுடைய ஆசையைப் பூர்த்தி செய்ய அவரால் முடியவில்லை. இதற்காகவே அவரிடம் பல முறை, "நீங்கள் நாட்டின் ஜனாதிபதியாக இல்லாமல் ஒரு சாதாரண குடிமகனாக இருந்திருக்கலாகாதா?" என்று ஆதங்கப்படுவாள்.

அன்றையதினம் பிளேய்லர் வீட்டில் பிளேய்லரையும் மனைவியையும் சந்தித்துவிட்டு தன்னறைக்குத் திரும்பியதும் கடந்த காலத்தில் பிளேய்லருடன் அவள் கொண்டிருந்த உறவு பற்றி சிந்தனைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவளுடைய மனத்திரையில் நிழலாட்டமிட்டன. இதனைத் தொடர்ந்து பிளேய்லரை உடன் வருமாறு அவள் தொலைபேசியில் கேட்டுக் கொண்டாள். அவனோ மோனிக்கா பேசிய முறையை வைத்து அவளுக்கு ஏதோ தீங்கு ஏற்பட்டுவிட்டதாகக் கருதி மனைவியையும் அழைத்துக்கொண்டு வந்துவிட்டான்.

எதிர்பார்த்ததற்கு மாறாக சம்பவம் நடந்தமையினால் மோனிக்கா பைத்தியம் பிடித்தவள் போலாகிவிட்டாள். கேற் தனது கணவனை மோனிக்காவிடம் இருந்து விடுவிப்பதற்குப் பெரும் பாடுபட்டாள். மோனிக்காவின் உண்மையான நோக்கத்தை பிளேய்லர் புரிந்து கொண்டான். எனினும் கேற்றினால் முடியவில்லை. மோனிக்காவின் உடைகளை எடுத்து கேற் அவளுடைய உடம்பில் போட்டு விட்டாள். கணவனும் மனைவியுமாக பல ஆறுதல் வார்த்தைகளைக் கூறி மோனிக்காவை அமைதிப் படுத்தினர். இதற்குள் பிளேய்லர் கொஞ்சம் கூடுதலாகவே மோனிக்காவுக்கு மதுபானத்தை ஊட்டி போதை ஏற்றி படுக்க வைத்தான். இருப்பினும் அன்றிரவு முழுவதும் மோனிக்காவின் அறையிலேயே இருவரும் தங்க வேண்டியதாயிற்று.

பொழுது விடிந்ததும் கேற் மட்டும் தனது இல்லம் திரும்பினாள்–தன் கணவனை சிலமணி நேரம் மோனிக்காவுடனேயே இருந்து அவளை ஆசுவாசப்படுத்திவிட்டு வரும்படி கேற் கேட்டுக் கொண்டாள்.

சிலமணிநேரம் என்றில்லாமல் அன்று முழுவதும் மோனிக்காவுடனேயே பிளேய்லர் தங்கினான். அவன் தன் அலுவலகம் செல்ல வேண்டுமென்று புறப்பட்டபோது மோனிக்கா தடுத்து விட்டாள்.

### ஹவாயில் மோனிக்கா

இதற்கடுத்தநாள் மோனிக்கா தனது சிநேகிதியான மணமகளுடன் ஹவாய் சென்றாள். வாஷிங்டனிலிருந்து புறப்பட்டது தொடக்கம் மோனிக்கா பிரயாண அலைச்சலினால் களைப் படைந்திருந்தாள். ஹவாய் வந்ததும் கடற்கரையில் சூரியக் குளிப்பில் பல தடவைகள் ஈடுபட்டாள். இதனால் அவளுடைய உடம்பில் பளுப்பு நிறம் சற்று அதிகரித்தது. அதுமட்டுமல்லாமல் அவளுடைய உடம்பிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.



கடலில் நீச்சலடித்தமையினால் உடல் பருமனும் சற்றுக் குறைந்திருந்தது. மாப் பொருட்களை அதிகமாக உணவில் சேர்க்காமல் பழங்களையே அதிகம் சாப்பிட்டமையினாலும் எடை குறைந்தும் காணப்பட்டாள்.

முதல் நாளன்று பிளேய்லருடன் தங்கள் பழைய வாழ்க்கையைப் பற்றி வெகுவாக உரையாடினார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் பிளேய்லர் தனது மனைவி கேற்றைவெறுக்க ஆரம்பித்து விட்டதாகவும் அவளை விவாகரத்து செய்யப் போவதாகவும் கூறியிருந்தான். இக் கதையைக் கேட்டதும், மோனிக்காவின் மனதில் ஒரு நப்பாசை தோன்றியது. கேற்றை விளக்கி விட்டு பிளேய்லர் தன்னைத் திருமணம் செய்வதற்காக அவன் இந்த முடிவை எடுத்திருப்பானோ? என்று கூட அவன் எண்ணினான்–

## ஆசைநாயகன் அரவணைப்பில்



தன்னை மணக்கும் படி பிளேய்லர் கேட்டிருந்தால், மோனிக்கா அப்போதிருந்த நிலையில் நிச்சயமாக ஒப்புக் கொண்டிருப்பாள். ஆனால் பிளேய்லர் தொடர்ந்து கூறிய கதையினால் அவள் பெரும் ஏமாற்றமடைந்தாள்.

பிளேய்லர் தன்னுடைய அலுவலகத்தில் பணி புரியும் ஒரு பெண்ணை விரும்புவதாகவும் அவளையே மணமுடிக்கப் போவதாகவும் தெரிவித்தான். இதைக் கேட்ட மோனிக்கா அவனுடன் கோபித்துக் கொண்டு சண்டை போட்டாள்.

மோனிக்கா ஒருவாறு வாஷிங்டன் திரும்பினாள். டிசம்பர் மத்தியில் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற கிறிஸ்மஸ் நடன நிகழ்ச்சியில் பங்குபற்ற சென்றிருந்தாள். கிளின்ரனும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அத்தனை மக்கள் கூட்டத்திலும் மோனிக்காவைப் பார்த்து பலதடவைகள் புன்னகை செய்ய அவர் மறக்கவில்லை.

கிளின்ரனுக்கு அன்று பல நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அவை ஒன்றன்பின் ஒன்றாக பகலிரவாகத் தொடர்ந்தன. இதற்கிடையில் எங்கிருந்தோ மோனிக்காவின் இல்லத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டார் கிளின்ரன். "இன்று நீ மிக அழகாகத் தோன்றினாய். உன் உடம்பு மிகக் கவர்ச்சியாகக் கானப்பட்டது!" என்று கூறினார். அத்துடன் கிறிஸ்மஸ் பரிசாக மோனிக்காவுக்கு நியூமெக்ஸிக்கோவிலிருந்து தலையில் அணியும் தொப்பியில் குத்துவதற்கான ஒரு 'பின்'னும் கொண்டு வந்திருப்பதாகச் சொன்னார். "விரைவில் சந்தித்து அதனை உனக்குத் தருவேன்!" என்றும் தொலைபேசியிலேயே கூறினார்.

கிறிஸ்மஸ்சுக்கு முதல் வார முடிவில் எப்படியும் சந்திக்கலாம் என்று மோனிக்காவிடம் கூறியிருந்தார். ஆனால் அத்தகைய சந்திப்பு இடம் பெறாமையினால், மோனிக்காவுக்கு ஏமாற்றமாகப் போனது. இருப்பினும் கிளின்ரனின் மகள் செல்சியா கலந்து கொண்ட ஒரு கலை நிகழ்ச்சியில் கிளின்ரனை சற்றுத் தொலைவில் காண நேர்ந்தது. அவர் தனது மனைவி ஹிலரியுடன் தன் மகளின் நிகழ்ச்சியைப் பார்க்க வந்திருந்தார். மோனிக்காவும் அவளுடைய தாயாருடன் இந்நிகழ்ச்சியைப் பார்க்கச் சென்றிருந்தாள்.

மனைவியுடன் கிளின்ரன் இருந்த போதிலும் மோனிக்காவைப் பார்க்கவும் சிரிக்கவும் அவர் தயங்கவில்லை.

நிகழ்ச்சி முடிவடைந்து திரும்பும் போது பல தடவைகள் மோனிக்காவைப் பார்த்து விடை பெறுவதாகச் சைகைக் காட்டிக் கொண்டு சென்றார். இவற்றை எல்லாம் நோட்டமிட்டவண்ணம் மோனிக்காவின் அருகில் மற்றொரு பெண் நின்றிருந்தாள். அவள் வேறுயாருமல்ல; மோனிக்காவின் தாயார்தான்.

(வருவாள்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**ஹாலி எல வாசகிக்கு அதிஷ்டம்!**

| | |
|---|---|
| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான் | கே. பொட்டுமலர், குனிஸ்டவுன் குரூப், 100 ஏக்கர், ஹாலி-எல. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



# சந்தன மரம்



முன்னொரு காலத்தில் காந்தப்பன் என்ற திருடன் ஒருவன் இருந்தான். இவன் திருட்டுத் தொழிலை மிகவும் திறமையாக செய்துவந்தான். இவனைப் பிடிப்பதற்கு அரசர் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை.

ஒரு முறை ஒரு திருட்டில் ஈடுபட்டிருந்தபோது மாட்டிக் கொண்டான் காந்தப்பன். காவலர்களிடம் இருந்து தப்பி அங்கிருந்த அடர்ந்த காட்டிற்குள் நுழைந்தான். இவனது பரிதாபமான நிலையைக் கண்ட சந்தன மரம் ஒன்று இவன் மீது இரக்கப்பட்டது. அவனுக்கு அடைக்கலம் கொடுக்க நினைத்தது. இதற்கு மேல் ஓடுவதற்கு தெம்பில்லாத காந்தப்பன், அந்த சந்தன மரத்தை பார்த்து, "மரமே என்னைக் காப்பாற்று என் மீது இரக்கம் காட்டு," என்று கெஞ்சினான்.

அந்தப் பெரிய சந்தனமரமும் தன் அடிப்பகுதியில் இருந்த பொந்தை அவனிடம் காட்டியது."இதற்குள் பதுங்கிக்கொள். மரப் பட்டைகளால் நான் உன்னை மூடிக் கொள்கிறேன். ஆபத்து நீங்கியவுடன் நீ இங்கிருந்து செல்லலாம்," என்றது.

திருடனும் அப்படியே செய்தான். வீரர்களும் அந்தக் காட்டை சல்லடை போட்டுத் தேடினர். இரண்டு நாட்கள் தேடிய பிறகு சலித்துப் போய் நாடு திரும்பி விட்டனர். அவர்கள் சென்றுவிட்டதை அறிந்த காந்தப்பனும் வீட்டுக்குச் சென்றுவிட்டான். நாட்கள் சென்றன. ஊர்க்காவலர்கள் மிகவும் விழிப்புடன் இருந்ததால், காந்தப்பனால் முன்புபோல் திருட முடியவில்லை. அதனால் வீட்டில் வறுமை தாண்டவம் ஆடியது.

காந்தப்பனின் மனைவி அவனைப் பிடுங்கி எடுத்தாள். "என்ன உன் திறமையே இவ்ளோதானா? எங்காவது போய் திருட வேண்டியதுதானே. ஏன் இப்படியே உட்கார்ந்திருந்து என் உயிரை வாங்குற?" என்று திட்டித் தீர்த்தாள்.

காந்தப்பனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சட்டென்று அன்று காட்டில் அடைக்கலம் கொடுத்த சந்தன மரம் நினைவுக்கு வந்தது. 'ஆஹா... அந்தச் சந்தன மரத்தை வெட்டி, ஊர்ப் பண்ணையாரிடம் தெரியாமல் விற்று விடுவோம். அதன்மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு சிறிது நாட்கள் வாழ்க்கையை ஓட்டலாம்!' என்று நினைத்துக் கொண்டான்.

மறுநிமிடம் கோடாரியுடன் புறப்பட்டான். தான் அடைக்கலம் கொடுத்தவனே தன்னை வெட்ட வருவதைக் கண்டு திடுக்கிட்டது சந்தனமரம்.


"நான் உனக்கு செய்த நன்மைக்கு நீ செய்யும் கைமாறு இது தானா?" என்றது சந்தனமரம். அதற்கு காந்தப்பன், "பாவ, புண்ணியம் பார்த்தால் நான் சாக வேண்டியதுதான்," என்று சொல்லியபடியே மரத்தை வெட்டினான்.

தீயவன் ஒருவனுக்கு உதவி செய்யப் போய் தன் வாழ்க்கையே அழிந்து போய் விட்டதை எண்ணி கண்ணீர் விட்டபடியே உயிரைவிட்டது சந்தனமரம்.

எப்போதுமே தீய நண்பர்களுடன் சேரா தீங்கன்னு பெற்றோர் சொன்னா கேட்டுக்கணும். தீய சகவாசம் எப்போதுமே உங்களுக்கு ஆபத்தில் தான் முடியும்.



## வழிகாட்டுங்கள்



மேலே இருக்கும் குட்டிநாய்க்கு கீழே உள்ள எலும்புத் துண்டைத் தின்பதற்கு வழிகாட்டி உதவுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **24.06.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **347**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 345

பரிசுக்குரியவர்:
பாதிமா நிஷ்மா நஜீம்,
சென். எக்னஸ் கொன்வன்ட், பலாங்கொட.

### பாராட்டுக்குரியவர்கள்:


| | |
|---|---|
| பரசுராமன் விஜயவதனன், விவுலானந்த மத்திய கல்லூரி, காரைதீவு-04. | ம.காத்திகேயன், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| ஜெ. தயாளினி, ந/சரஸ்வதி தமிழ்மகா வித்தியாலயம், லிந்துலை. | எம்.கார்த்திகா, க/ஒல்ட் பிக்கோக் த.வி. புஸ்சல்லாவ. |
| பாத்திமா றுஸ்னா, முஸ்லீம் மகளிர் கல்லூரி, கொழும்பு-04. | கி.ஷர்மினா, கோ/சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை. |
| பே.தினேஸ்குமார், விநாயகர் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று. | எஸ்.லோகதர்சினி, கிளனமோறா த/வி, தலவாக்கலை. |
| எம்.ரசாட், சமீரா மத்திய கல்லூரி, உக்குவல. | ம.டிலான், சமயபுரம், வவுனியா. |

## அதிசய உலகம்

→ **த**ண்ணீருக்கு மேலே நடக்க முடியுமா? முழுநேரமும் தண்ணீரில் வாழ்கின்ற தவளையாலும் முடியாத செயல் இது. ஓணான் ஒன்று தண்ணீரில் நடக்கிறது. ஆனால் இங்கல்ல.

மெக்சிக்கோ, ஈக்வடோர் பிரதேசத்தில் காணப்படும் 'பாஸிலிக்ஸ்' என்ற ஓணான்கள் தான் இந்தக் கில்லாடிகள். மரங்களில் நான்கு கால்களினால் ஓடினாலும் தண்ணீரில் இவை இரண்டு கால்களை மட்டும் தான் பயன்படுத்துகின்றன.





← **வ**ட அமெரிக்காவில் காணப்படும் வண்ணாத்துப் பூச்சியைச் சிறப்பு மிக்க வண்ணத்துப்பூச்சி என்கின்றனர். 'சக்கரவர்த்தி வண்ணத்துப் பூச்சி' என்றழைக்கப்படும் இவற்றிற்கு என்ன சிறப்புத் தெரியுமா?

கனடாவின் ஹட்சன் கடற்கரையில் இருந்து அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணம் வரை இது நிற்காமல் பறக்கிறது. இது நிற்காமல் பறந்து செல்லும் தூரம் எவ்வளவு தெரியுமா? சுமார் 4 ஆயிரம் கிலோ மீட்டர்.



→ **ப**டத்தில் இலையின் மேல் உட்கார்ந்திருக்கும் இந்தப் பூச்சியின் பெயர் இலைப்பூச்சி. இலையைப் போன்ற வடிவத்தில் இருப்பதால் தான் இதற்கு இப்பெயர்.


இந்தப் பூச்சியின் நரம்புகள் கூட இலைகளில் உள்ள நரம்புகள் போன்று காணப்படும். இப்பூச்சியின் முட்டைகள் மரங்களின் விதைகள் போல் இருக்கும். 8 சென்டி மீட்டர் நீளம் வரை வளரும் இப்பூச்சியின் உணவும் இலைதான்.

ஆபிரிக்கா, வட அவுஸ்திரேலியா, தென்கிழக்காசியா ஆகிய இடங்களில் இப்பூச்சிகள் வசிக்கின்றன.

## தெரிந்து கொள்ளுங்கள்

விமானத்தில் அதிகம் உபயோகப்பட்டிருக்கும் உலோகம்- அலுமினியம்
இரண்டாம் உலகப்போரில் அதிகளவு பயன்படுத்திய விஷ வாயு- அமோனியாவாயு
கடல்மட்டத்தில் ஒரு கன அடியில் உள்ள காற்றின் நிறை- 14.7 இறாத்தல்.
உடலில் மிகச்சிறிய எலும்பு- காதிலுள்ள எலும்பு
உலகில் முதல் வைத்திய கல்லூரி ஆரம்பித்த இடம்- அலெக்ஸாண்ட்ரியா
இடிமுழக்கம் உருவாகும்போது தோன்றும் அமிலம்- நைட்ரிக்கமிலம்
சப்த அலைகளின் கணிப்பீடு எவ்வாறு அழைக்கப்படும்- டெசிபல்
அண்மையில் சோவியத் விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்ட மூலப்பொருள் - குவாடோமியம்

தொகுப்பு:- மு.சக்திலேந்திரன், கொழும்பு-12.



# திக் திக் தொடர்

30

# சிகப்பு வணக்கம்

"மிஸ்டர் விவேக்..... என்னோட கணவர் இங்கே இருக்கிறவரைக்கும் எந்த உண்மையையும் சொல்லமாட்டார். அவரை கஸ்டடி பண்ணி, என்கொய்ரி நடத்தினா ஆச்சார்யா பங்கஜ் கொலைகளுக்குப் பின்னாடி இருக்கிற உண்மைகள் வெளியே வரும்....!"

"யூ... யூ.... ராட்டன் ப்ளடி பிட்ச்" நரேஷ் ஆவேசமாய், ஆங்காரமாய் கத்திக் கொண்டே ஹம்ஸாவின் மேல் பாய முயல-

விவேக் நரேஷின் இடதுகை தோள் பட்டையை இரும்புப் பிடியாய் பிடித்தான்.

"நரேஷ்! கண்ட்ரோல் யுவர் செல்ஃப்...! உங்க மனைவி உங்க மேல அபாண்டமா எதையும் சொல்லலை.. அவங்க உண்மையைத்தான் சொல்லியிருக்காங்க..."

நரேஷ் திமிறினான்...."அவ சொன்னது உண்மைன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்....?"

விவேக் சின்னதாய்ப் புன்னகைத்து, "உங்களை இங்கே லேசர் பிஸ்டல் விஷயமா என்கொய்ரி பண்ணவர்றதுக்கு முன்னாடியே தெரியும்...."

"எ...எ.... எப்படி....?" நரேஷின் கண்கள் பயத்திலும் அதிர்ச்சியிலும் விரிந்தன.

"உங்க காரியங்களுக்கு உதவியாக இருந்த ஆகாஷ், இப்போ லாக்கப் கம்பிகளுக்குப் பின்னாடி உட்கார்ந்துகிட்டு இருக்கான்...."

"ஆகாஷ்....?"

"ம்....! ஜ்யோதியோட அண்ணன் ஆகாஷ்....! அவனை எப்படி ஸ்மெல் பண்ணிக் கண்டுபிடிச்சோம்கிறதையும் சொல்லிடறேன். டெலிஃபோன் மூலமா அவன், ரெண்டு மணி நேரத்துக்கு முந்தி, கமாண்டோ ஆபீஸர்க்கு ஒரு மிரட்டல் விட்டான்.

அவர் அந்தப் பேச்சை டேப் பண்ணிப் போட்டுக் காட்டினார். அந்த மிரட்டல் பேச்சை இரண்டு மூணு தடவை போட்டுக் கேட்டபோது, அதில் இருந்த சில வார்த்தைகளின் உச்சரிப்பு எனக்கு வித்தியாசமாகப்பட்டது. ஜ்யோதியை நான் விசாரணைக்காகச் சந்திக்கப் போன போது, அவளுடைய அண்ணன் ஆகாஷ் கிட்ட கொஞ்சம் நேரம்தான் பேசிட்டிருந்தேன்.

அந்தச் சொற்ப நேரத்திலேயே அவன் சில வார்த்தைகளை வித்தியாசமா உச்சரிச்சான். அதே வார்த்தைகள் மிரட்டல் பேச்சிலும் இருந்தது. அப்ஸர்வ் பண்ணி, உடனே என்னுடைய டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கோகுல்நாத்துக்குத் தகவல் கொடுத்தேன்.

அவர் உடனே ஆகாஷை ரகசியமா அமுக்கி, லாக்கப்புக்குக் கொண்டு போய் உட்கார வெச்சு, விசாரிக்கிற விதத்துல மரியாதை கொடுத்து விசாரிச்சதும், 'ஆச்சார்யா' பங்கஜ் கொலைகளுக்குக் காரணகர்த்தா நரேஷ்தான். அவர் கொடுத்த பணத்தை வாங்கிக்கிட்டு அவர் சொன்ன காரியங்களைச் செஞ்சு முடிச்சேன்'னு சொன்னான்.

அவன் கொடுத்த ஸ்டேட்மெண்ட் உண்மையா பொய்யான்னு தெரியாத நிலையில், அதை ரகசியமா வெச்சுகிட்டு, லேசர் பிஸ்டல் விஷயத்தில் நீங்க மாட்டிக்கிட்டா ஆகாஷோட ஸ்டேட்மெண்ட்டை உங்ககிட்ட சொல்லலாம்னு இருந்தேன். லேசர் பிஸ்டல் விஷயத்தில் நீங்க முதல் தடவை தப்பிச்சுக்கிட்டதும் எனக்குள் ஒரு சின்ன ஏமாற்றம்...! ஆனா உங்க மனைவி ஹம்ஸா, நீதிக்கும் நியாயத்துக்கும் முதலிடம் கொடுத்து, லேசர் பிஸ்டல் விஷயத்தில் உங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துட்டாங்க...."

நரேஷ் உறைந்து போயிருந்தான். விவேக் தொடர்ந்தான்.

"இனியும் நீங்க உண்மைகளை மறைச்சா, அது உங்களுக்கு நல்லதில்லை மிஸ்டர் நரேஷ்....! நீங்க இந்த நிமிஷம் ஒரு பெரிய வி.ஐ.பி.யா இருக்கலாம்... பட், போலீஸ் லாக்கப்புக்குள்ளே நீங்க வந்துட்டா, ஒரு விசாரணைக் கைதிகிட்ட நாங்க எப்படி நடந்துக்குவோமோ, அதே மாதிரிதான் உங்ககிட்டேயும் நடந்துக்குவோம்.

உண்மைகளை வரவழைக்க, தேர்ட் கிரேட் ரெஸ்பெக்ட் கொடுத்தா அந்த மரியாதையை உங்களால தாங்கிக்க முடியாது. உங்களுக்கு வசதி எப்படி....? உண்மைகளை இங்கேயே சொல்றீங்களா....? இல்லை, லாக்கப்புக்குப் போய் அங்கே தர்ற மரியாதையை வாங்கிக்கிட்டுச் சொல்றீங்களா....?"

நரேஷ் தளர்ந்துபோய் இரண்டு கைகளாலும் தலையை பற்றிக் கொண்டு அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். உதடுகளிலிருந்து வார்த்தைகள் நடுக்கமாய் உதிர்ந்தன.

"சொ....ல்....றே....ன்..."

விவேக்கும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

"ம்.... சொல்லுங்க.... எதுக்காக இந்தக் கொலைகள்....? ஆச்சார்யா, பங்கஜ் மேல உங்களுக்கு என்ன கோபம்...?"

நரேஷ் சில விநாடிகள் மௌனம் சாதித்துவிட்டு, கண்கள் சிவக்க நிமிர்ந்தான். குரல் கோபமாய் வந்தது.

"அவங்க துரோகம் பண்ணிட்டாங்க...!"

"யாருக்கு.. உங்களுக்கா...?"

"இல்லை.... இந்த நாட்டுக்கு....!"

விவேக் புருவங்களை மெல்ல உயர்த்தினான்.

"நாட்டுக்குத் துரோகம் பண்ணினாங்களா....?"

"எஸ்... கடந்த ரெண்டு வருஷகாலமா நம்ம இந்திய கிரிக்கெட் அணி, எட்டு டெஸ்ட் மேட்ச்சுகளிலும் முப்பது ஒரு நாள் மேட்ச்சுகளிலும் விளையாடியதில், ஒரே ஒரு



டெஸ்ட் மேட்ச்சிலும், மூணு ஒரு நாள் மேட்ச்களில் மட்டுமே ஜெயிக்க முடிஞ்சது. மத்த எல்லா மேட்ச்களிலும் நாம படுதோல்வியடைஞ்சோம். ஒரு மேட்ச்ல, எழுபத்தெட்டு ரன்னுக்கு எல்லா விக்கெட்டுகளையும் இழந்தோம். இந்தத் தோல்விக்குக் காரணம் என்னன்னு உங்களுக்குத் தெரியுமா...?" குரலை உயர்த்திக் கேட்டுவிட்டு பெருமூச்சு விட்டான் நரேஷ் விவேக் குழப்பமாய் நரேஷை ஏறிட்டான்.

"சொல்லுங்க.... என்ன காரணம்?"

"டபிள்யூ.... ஜி.சி.ன்னு சொல்லப்படுகிற உலக சூதாட்ட கிளப்போடு, நம்ம கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யாவும், அணியோட ஸ்பின் பௌலர் பங்கஜ்ஜும் ஒரு ரகசிய உடன்பாடு பண்ணிக்கிட்டு,லட்சக் கணக்கில் டாலரை வாங்கி ஸ்விஸ் பேங்க்கில் போட்டதோட பலன் நாம் கிரிக்கெட்டில் தோற்க ஆரம்பிச்சோம்.

ஆச்சார்யாவும் பங்கஜ்ஜும் எனக்குத் தெரியாமே, நம்ம அணி வீரர்களுக்குப் பணத்தைக் கொடுத்து, மோசமா விளையாடி தோற்கும்படியா செஞ்சாங்க.....! பங்கஜ் தன்னோட பந்து வீச்சுல் முழுத் திறமையைக் காட்லை. ஒரு ஓவர்க்கு சுலபமா இருபது ரன் கொடுத்தார்.

இப்படி எல்லாருமே பணத்துக்காக ஆசைப்பட்டு, நம்ம அணியைத் தோற்கடிச்சு இந்தியாவைக் கேவலப்படுத்தினாங்க.... தனிமையில அவங்க ரெண்டு பேரையும் சந்திச்சு புத்தி சொல்லி பார்த்தேன். அவங்க கேட்கலை... பணம் சம்பாதிக்க இதுவும் ஒரு வழின்னு சொல்லிச் சிரிச்சாங்க. பகிரங்கமா அவங்களைக் கண்டிக்க முடியலை.

இந்தியா ஒவ்வொரு தடவையும் தோற்கும்போது, என்னோட மனசு போர் நடந்த யுத்த களம் மாதிரி ஆயிடும். பல இராத்திரிகள் எனக்குத் தூக்கம் இல்லாமலேயே விடிஞ்சிருக்கு.... கிரிக்கெட் விளையாட்டு வரலாற்றில், இந்தியாவின் தோல்விகள் கரும்புள்ளிகளாக மாறி, அது நீங்காத கறைகளாகிவிடக் கூடாதுங்கிற எண்ணத்துலதான் ஆச்சார்யாவையும் பங்கஜையும் தண்டிக்க நினைச்சேன்.

ஜ்யோதியோட அண்ணன் ஆகாஷுக்கும் இதே மாதிரி கோபம் இருந்ததினால, நாங்க ரெண்டு பேரும் ஒண்ணு சேர்ந்தோம். திட்டம் போட்டு அவங்களைத் தீர்த்துக் கட்டினோம்.

கிரிக்கெட் வீரர்களுக்கு, தீவிரவாதிகளோட மிரட்டல்கள் ஏற்கெனவே இருந்ததால ஆச்சார்யா, பங்கஜ் கொலை செய்யப்பட்டால் அந்தப் பழி தீவிரவாதிகள் மேலே விழும்னு நினைச்சோம்.... ஆனா உங்க இன்வெஸ்டிகேஷன் வேறு மாதிரி இருந்ததால, ஆகாஷும் நானும் பயந்தோம். உங்களைத் திசைதிருப்பறதுக்காக என்னையே யாரோ கொலை பண்ண வர்ற மாதிரி செட்டப்பண்ணினோம்..."

விவேக் குறுக்கிட்டுக் கேட்டான்.

"வீட்ல டைனமெட்டை ஃபிக்ஸ் பண்ணினதும், ஏர்கண்டிஷனர் பாக்ஸில் லிக்விட் பாய்ஸனை வெச்சதும் நீங்கதான் இல்லையா...?"

"ஆமா.....! உங்களுக்கு என் மேல துளியும் சந்தேகம் வரக்கூடாதுங்கிறதுக்காக பெய்ன் கில்லர் மாத்திரைகளைச் சாப்பிட்டுவிட்டு, லேசர் பிஸ்டலாலே என் தோள்பட்டையில் லேசா சிராய்ப்பு விழற மாதிரி சுட்டுக்கிட்டேன்... நான் தப்பிக்க நினைச்ச வழிகளே என்னைக் காட்டிக் கொடுத்துடுச்சு...!"

"மிஸ்டர் நரேஷ்...! நீங்க கொஞ்சம் பொறுமை காட்டியிருக்கலாம். ஆச்சர்யாவுக்கும் பங்கஜ்ஜுக்கும் இன்னும் சொஞ்சம் புத்திமதி சொல்லிப் பார்த்திருக்கலாம...."

"அவங்க கேட்கமாட்டாங்க ஸார்....கேட்கக்கூடிய ஜென்மங்களும் இல்லை.... அதனாலதான் கையில ஆயுதம் எடுத்தேன். என்னைப் பொறுத்தவரைக்கும் தேசத்துரோகம் எந்த வகையில் செய்யப்பட்டாலும் அது மரணதண்டனைக்குரிய குற்றம். அந்த தண்டனையைத்தான் ரெண்டு பேருக்கும் கொடுத்தேன். நான் இப்படி தீர்ப்பு கொடுத்தது உங்களுக்குச் சட்ட விரோதமா படலாம்... ஆனா என்னோட மனசுக்கு இது ஒரு பெரிய சந்தோஷம்! இந்த சந்தோஷத்தோட உங்க சட்டம் கொடுக்கற தண்டனையை ஏத்துக்கிறேன்...!"

இரண்டு கைகளையும் நீட்டினான் நரேஷ்...

விவேக்கின் செல்ஃபோன் கூப்பிட்டது. எடுத்து காதுக்கு ஒட்ட வைத்தான். மறுமுனையில் கமாண்டோ ஆபீஸர் பேசினார்.

"ஸார்...! கட்டப்பட்டு வந்த த்ரீஸ்டார் ஹோட்டலின் மாடி உச்சியில், வெடிமருந்துகளோடு கைது செய்யப்பட்ட அந்த ஆணையும் பெண்ணையும் விசாரிச்சோம்.... அவங்க லோக்கல் தாதாக்களுக்கு வெடிமருந்து பொருட்களை சப்ளை பண்ற கோஷ்டியாம்... பாதி கட்டப்பட்டு நிக்கிற கட்டடத்துக்குள்ளே யாரும் வரமாட்டாங்கங்கிற தைரியத்துல, அங்கே வந்து சப்ளை பண்ணிக்கிட்டு இருந்தாங்களாம்.... அவங்க பொய் சொல்றாங்கன்னு நினைக்கிறேன்.... ஸார்! நீங்க வந்து விசாரிச்சாத்தான் உண்மை வெளியே வரும்..."

"இல்லை.... அவங்க சொல்றது தான் உண்மை...."

**கிரைம் சக்கரவர்த்தி**

**ராஜேஸ்குமார்**

"ஸார்..."

"ஆச்சார்யா.... பங்கஜ் கொலைகளுக்கான காரணகர்த்தாக்கள் யார்ன்னு தெரிஞ்சுடுச்சு.... ஸ்டேட்மெண்ட்டும் கைக்குக் கிடைச்சாச்சு..."

கமாண்டோ ஆபீஸர் ஆர்வமாய்க் கேட்டார். "யார்.... யார் அவங்க....?"

"க்ரைம் ப்ராஞ்சுக்கு வாங்க.... நேர்ல பார்த்துக்கலாம்... அப்படியே ஒரு 'ப்ரஸ் மீட்'க்கும் ஏற்பாடு பண்ணிடுங்க...."

"எஸ்.... ஸார்...."

விவேக் செல்ஃபோனை அணைத்து, தன் பாக்கட்டில் போட்டுக் கொண்டு நரேஷின் மனைவி ஹம்ஸாவுக்கு நன்றி சொல்வதற்காகத் திரும்பினான்.

அவள் சேலைத் தலைப்பில் வாயைப் பொத்தி நிசப்தமாய் அழுது கொண்டிருந்தாள்.

(முற்றும்)

# புகழ்பெற்ற வழக்குகள் 03

உலகப் புகழ்பெற்ற ஒரு தலைவரின் மனைவி 'இரத்தக் காட்டேரி' என்று கொலைக் குற்றம் சாட்டப்பட்டு கூண்டில் ஏற்றப்பட்டாள். அவரோ அகிம்சைவழியில் அறப்போர் மூலம் மறுக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுக்கப் பாடுபட்டார். அடக்கு முறைக்குட்படுத்தப்பட்டு கால் நூற்றாண்டு சிறை வாசமேற்றார்.

அவருடைய மனைவியோ வன்முறையை வளர்க்கும் கும்பலுக்குத் தலைமை தாங்கினார். சிறை மீண்ட செம்மல் தன் மனைவியுடன் சில காலமாவது இணைந்து வாழ முடியாத நிலை ஏற்பட்டது. தன் மனைவியை சட்டப்படி விலக்கி விட்டார். நாட்டின் தலைமையை ஏற்று மக்களை வழி நடத்தினார். அவர் மனைவியோ சட்டத்தின் வலிய பிடியில் சிக்கி வாடினார். காந்திய நெறியில் வாழ்ந்து காட்டி வெள்ளையரின் இன வெறியை ஒழித்துக்கட்டிய நெல்சன் மண்டேலாவின் முன்னாள் மனைவி வின்னியின் கதை இது.

'தென்னாப்பிரிக்கத் தாய்' என்று ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்டவர் வின்னி மண்டேலா. தன் கணவர் தொடர்ந்து பல வருடங்கள் சிறையில் இருந்த போதும், மனம் தளராது வெளியிலிருந்து போராடியவர். ஆனால், திடீரென்று ஒரு நாள் அவர் ஒரு இரத்த வெறிப்பிடித்த காட்டேரி போல சிலரால் சித்தரிக்கப்பட்டார். 'கொலைகாரி' என்று குற்றம் சுமத்தப்பட்டு கூண்டில் ஏற்றப்பட்டார்.

"நெல்சன் மண்டேலாவை விடுவியுங்கள். தென்னாப்பிரிக்காவின் இனவெறியை ஒரு முடிவுக்குக் கொண்டு வாருங்கள்!" என்று உலகிற்கே அறைகூவல் விடுத்து, உன்னத பெண்மணியாக விளங்கினார் அவர். தன் கணவர் விடுதலை பெற்ற பின், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் உதவித் தலைவர் பதவிக்கும் போட்டியிட்டார். அப்போது, அவர் மீது பல குற்றங்கள் சுமத்தப்பட்டன. அவற்றில் ஆறு கொலைகள், கர்ப்பிணி ஒருத்தியின் மீது தாக்குதல் ஆகியவையும் உண்டு. முக்கியமாக 14 வயது சிறுவன் ஸ்டாம்பி செபி என்பவரை கடத்திச் சென்று கொலை செய்ததாக இவர் மீது தொடுக்கப்பட்ட வழக்கு பெரும் பரபரப்பைக் கிளப்பியது.

இந்தவழக்கு விசாரணைக்கு வந்த போது, வின்னியிடமிருந்து மண்டேலா விவாகரத்துப் பெற்றிருந்தார். 1996ல் அவர்கள் திருமண வாழ்க்கை முடிவுக்கு வந்தபோது, வின்னியை என்றென்றும் தன் மனதில் நன்றியுடன் நினைக்கப் போவதாக மண்டேலா குறிப்பிட்டார்.

## கொலைகாரியான தாய்!

ராம் ஷேகர்



விவாகரத்துக்குக் காரணம், மண்டேலாவின் சாத்வீகப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல், வின்னி தீவிரமான வழிமுறைகளில் இறங்கியதுதான் என்று கூறப்பட்டாலும், இருவருமே தங்கள் பிரிவுக்கான காரணத்தை பகிரங்கப் படுத்தவில்லை.

தொடர்ந்து ஐந்து நாட்கள் வின்னியிடம் விசாரணை நடத்தியது, இதற்கான விசாரணைக்கமிஷன். 1991ல் மேலே குறிப்பிட்ட இளைஞனைக் கடத்திக் கொன்ற குற்றத்திலிருந்து வின்னி விடுவிக்கப்பட்டார். என்றாலும், அவரை கடத்தியதற்கு உதவி புரிந்ததற்காக மூவாயிரம் டாலர் அபராதமும், சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. ஆனால், மேல் முறையீட்டில் இந்த சிறைத் தண்டனை நீக்கப்பட்டது.

இதெல்லாம் நடந்து முடிந்த கொஞ்சக்காலத்துக்குப் பிறகு செபெகுலு என்பவர் மேற்படி இளைஞனை கடத்திச் சென்று அடித்து துவைத்தது தான் தான் என்று ஒத்துக் கொண்டார். ஆனால், அதேசமயம் வின்னி தான் பளபளப்பான ஒரு பொருளால் அந்த இளைஞனைக் குத்திக் கொன்றார் என்றும் கூறினார். அந்தச் சிறுவனின் கூக்குரல்கள் வெளியே எட்டாதபடிக்கு அனைவரையும் உரத்த குரலில் பாடச் சொன்னாராம் வின்னி.

இதையெல்லாம வின்னி மறுத்தார். சொல்லப்போனால் இந்த விசாரணை பகிரங்கமாக நடக்க வேண்டும் என்றும், அப்போதுதான் தன் மீது படிந்த அவப்பெயர் நீங்கும் என்றும் கோரினார். இனவெறி நடந்த காலத்தில் 'நடைபெற்ற' குற்றங்கள் இவை என்பதால் பொது மன்னிப்புக் கேட்டால் மன்னிப்பு வழங்கப்படும் என்ற நிலை நிலவியது. ஆனால், வின்னி அப்படிக் கேட்க மறுத்துவிட்டார்.

விசாரணைக்கமிஷன் தெளிவான ஒரு முடிவைக் கூறாமலேயே வின்னி குற்றம் புரிந்ததாக யூகிக்க இடமிருந்தாலும், அதை நிரூபிக்க ஆதாரங்கள் இல்லை என்று முடித்துக் கொண்டது.

'பலமுறை வின்னியின் அரசியல் வாழ்வு முடிந்துவிட்டதாகத் தோன்றும். ஃபீனிக்ஸ் பறவைபோல புது பலத்துடன் அவர் மீண்டும் வருவார்' என்றது அந்நாட்டின் தேசிய நாளிதழ்.

பாராளுமன்ற உறுப்பினராகத் தொடர்கிறார் வின்னி.

(வழக்குகள் தொடரும்)

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி....

## எஸ்.டி.சிவநாயகம் 07

இரா.பத்மநாதன்

மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்தின் அருகே உள்ள ஆஸ்பத்திரி வீதி, கோவிந்தன் வீதி, ஆகிய வீதிகள் சந்திக்கும் இடத்தில் ஒரு கடையை திரு.செல்லையா என்பவர் நடத்தி வந்தார். தன் ஒரே மகனான இராசதுரைக்கு தங்கத்தால் அணிகள் பூட்டி மகிழ்ந்திருந்தார்.தமிழில் உயர் வகுப்பு வரை படித்துவிட்டு மத்திய கல்லூரியில் சேர்ந்து இராசதுரை ஆங்கிலம் பயின்றார்.

பள்ளிப்படிப்பைவிட உலகியல் படிப்பை மேற்கொள்வதிலேயே இளைஞனான இராசதுரைக்கு நாட்டம் அதிகம் இருந்தது. இவர் தனது இளமைக் காலத்தை கோட்டை முனையின் ஒரு பகுதியாகவிருந்த மோர்சாப்பிட்டியில் கழித்தார்.

அப்போது மட்டக்களப்பில் இரண்டு புத்தக நிலையங்கள் இருந்தன. கோட்டை முனை திருமலை வீதியில் எஸ்.பொன்னையா என்பவர் ஒரு புத்தகக் கடையை நடத்தினார். புளியந்தீவுப் பகுதியில், பிரதான வீதியில் ஆனந்தா புத்தக சாலையை திரு.மகாலிங்கம் என்பவர் நடத்திவந்தார். மட்டக்களப்பில் வளர்ந்து வந்த இளஞ் சமுதாயத்தினரின் அறிவுப் பசியைத் தீர்ப்பதற்கு இவ்விரு புத்தகசாலைகளுமே உதவின. முக்கியமாக திரு.பொன்னையா அவர்கள் இளைஞன் இராசதுரையின் அறிவுத் தாகத்தைத் தீர்த்து வைப்பதில் பேருதவி புரிந்தார். தமிழ் நாட்டிலிருந்து நூல்களையும் சஞ்சிகைகளையும் தருவித்து உதவினார்.

இவை தவிர, தினசரிப் பத்திரிகைளை அப்போது சேதுராமன் செட்டியார் நிறுவனமே விநியோகித்து வந்தது. பயனியர் தெருவில் இருந்த பத்தர் என்பவர் இந்தியாவிலிருந்து இசைத் தட்டுக்களைத் தருவித்து விற்பனை செய்து வந்தார்.

திரு.பொன்னையா அவர்களின் உதவியினால் தமிழில் தனது ஆற்றலை இராசதுரை வளர்த்து வந்தார். இதன் காரணமாகவே அவருடைய மேடைப் பேச்சும் எழுத்தாற்றலும் வளர்ச்சியடையத் தொடங்கின.

### பித்தன் ஷா

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது தமிழ் நாட்டுக்கு இரு இளைஞர்கள் சென்றார்கள். இவர்கள் இருவரும் மோர்சாப்பிட்டியைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர்களாவர். இவர்களில் ஒருவர் தான் 'பித்தன்' என்ற பெயரில் பிற்காலத்தில் புரட்சிகரமான சிறுகதைகளை எழுதி இலங்கையில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்தவர். இவர் இயற்பெயர். கே.எம்.ஷா என்பதாகும்.

தமிழ்நாட்டில் திரு.ஷா அவர்கள் எப்படியோ 'மெட்ராஸ் ரெஜிமெண்ட்' என்ற பிரிட்டிஷ் படைப்பிரிவில் சேர்ந்து கொண்டார்.

வட இந்தியா முழுவதும் பிரிட்டிஷ் படைகளுடன் இணைந்து திரு.ஷா சென்றார்.

எகிப்திலுள்ள அலக்ஸாண்ரியா நகர் வரை இவர் சென்று திரும்பினார்.

ஒரு தடவை துப்பாக்கி சுடுவதற்கு பயிற்சி எடுக்கும்போது இவருடைய வலது கை ஆட்காட்டி விரல் துப்பாக்கியின் குதிரைக்குள் மாட்டிக் கொண்டது. மருத்துவமனையில் சிகிச்சைபெற்றும் இந்த விரல் ஒரு கம்புத் துண்டு மாதிரியே நிமிர்ந்த நிலையில் இருந்ததே தவிர இதனை அசைக்க முடியாமல் போய் விட்டது. இதனால் தொடர்ந்தும் பிரிட்டிஷ் இராணுவத்தில் கடமைபுரிய இலாயக்கற்றவர் என்று படையில் இருந்து நீக்கிவிட்டார்கள். ஆனால் இவருடைய ஆயுள்வரை இவருக்கு ஓய்வூதியம் வழங்கப் படுவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பாடுசெய்து நட்டஈடாகவும் ஒரு தொகைப் பணம் இவருக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் இருக்கும் போது ஷா அவர்கள், புதுமைப்பித்தனின் எழுத்துக்களிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். படையில் சேர்ந்து அலக்ஸாண்ரியா செல்லும்போதும் புதுமைப்பித்தன் நூல்கள் பலவற்றையும் தன்னுடன் எடுத்துச் சென்றார். பணியிலிருந்து ஓய்வுபெற்றுத் திரும்பி வரும்போது சென்னையில் புதுமைப்பித்தன் அவர்களைக் கண்டு அவருடன் நெருங்கிப் பழகிவிட்டு இலங்கை திரும்பினார்.

வட இந்தியாவில் இந்தி மொழியில் பேசும் சிப்பாய்களுடன் நெருங்கிப் பழகியமையினால் இந்தி மொழி பேசவும் எழுதவும் கற்றுக் கொண்டார். மட்டக்களப்பு திரும்பியதும் பிரதான வீதியில் படங்களுக்குச் சட்டம்

### லங்கா முரசு

போடும் ஒரு கடையை ஆரம்பித்தார். மோர்சாப்பிட்டியில் பிறந்து வளர்ந்த ஏ.எம்.ஏ. அஸீஸ், இராசதுரை போன்ற இளைஞர்களுடன் நானும் இணைத்து திரு.ஷா அவர்களின் கடையில் மாலைவேளையிலும் பள்ளி விடுமுறை நாட்களிலும் ஒன்றுகூடி இலக்கிய, சினிமா சர்ச்சைகளில் ஈடுபடுவோம். புதுமைப்பித்தனின் நட்பு ஷா அவர்களுக்கு ஏற்படுத்திய தாக்கத்தினால் தன் புனைபெயரை 'பித்தன்' என்று குறிப்பிடலானார். 'சுதந்திரன்', 'தினகரன்-வாரமஞ்சரி', 'வீரகேசரி' ஆகிய இதழ்களில் பித்தனின் கதைகள் பிரசுரமாயின.

### 'யுவன்' அஸீஸ்

திரு.அஸீஸ் மற்றும் என் போன்ற சிலர் அப்போது மாணவர்களாக இருந்தோம். அஸீஸ் அவர்கள் 'யுவன்' என்ற புனை பெயரில் எழுதுவார். அதே பெயரில் மாதப் பத்திரிகை ஒன்றையும் அவர் ஆரம்பித்தார்.

1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது. இதனைக் கொண்டாடும் முகமாக மட்டக்களப்பு மைதானத்தில் திரு.சிவநாயகம் போன்றோரால் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோட்டைமுனை சுத்தானந்த வாசிக சாலையிலிருந்து ஓர் ஊர்வலம் புறப்பட்டது. 'இந்திய சுதந்திரதின விழா 1947' என்று பெரிய எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட 8 அடி நீளமான ஒரு பதாகையை ஒரு பக்கம் அஸீஸ்சும் மறுபக்கம் நானுமாகப் பிடித்த வண்ணம் ஊர்வலத்தின் முன்னணியில் சென்றோம். அப்போது பிடிக்கப்பட்ட புகைப் படம் ஒன்றினை அஸீஸ் தனது 'யுவன்' மாத இதழ் முன்பக்க அட்டைப் படமாகப் போட்டிருந்தார்.



இதனையிட்டு திரு.சிவநாயகம் பின்னர் குறிப்பிடும்போது, "அஸிசும் பத்மனும் பெரிய பிரமுகர்களாகிவிட்டார்கள்" என்று கூறினார். இதற்கான காரணம் விளங்காமல் அவரிடம் வினவியபோது, "ஒரு பத்திரிகையில் ஒருவருடைய படம் வருவதானால், அவர் நிச்சயம் ஒரு பிரமுகராகத்தான் இருக்க வேண்டும், நீங்கள் இருவரும் ஒரு சஞ்சிகையின் அட்டையில் ஜொலிக்கிறீர்களே! ஆகவே நீங்கள் மிகப் பெரும் பிரமுகர்களல்லவா?" என்று கேட்டார்.

அக்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி, ஒரளவு எழுத்தாற்றல் உள்ள இளைஞர்கள் தாங்களாகவே ஒரு பத்திரிகை நடத்த வேண்டும் என்று ஆசைப்படுவது இயல்பு. திரு.இராசதுரையும் 'லங்கா முரசு' என்றோர் சஞ்சிகையை ஆரம்பித்தார். எழுத்துப்பிரதிகளை கொழும்பிலுள்ள ஓர் அச்சகத்துக்கு அனுப்பியே அச்சிட்டு வந்தார். இப்பத்திரிகையை விநியோகிக்க திரு.இராசதுரையுடன் நானும் சேர்ந்து கிராமம் கிராமமாகச் செல்வோம்.

"லங்கா முரசின் முதல் இதழில் 'பித்தன்' இருட்டிலே'" என்றொரு சிறுகதையை எழுதியிருந்தார். இது சற்று ஆபாசமாகவே இருந்தது. ஏற்கனவே திரு.இராசதுரைக்கு அவருடைய தந்தையார் பொன்னகைகள் போட்டு வைத்திருந்தார் என்று குறிப்பிட்டிருந்தேன். இவை ஒவ்வொன்றாகக் கழற்றி எடுக்கப்பட்டே 'லங்கா முரசு' ஒலிக்க வைக்கப்பட்டது. இதனை அறிந்த திரு.செல்லையா அவர்கள் இராசதுரையைக் கடுமையாக வைதார். இதன்பயனாக லங்கா முரசு ஓய்ந்தது.

மட்டக்களப்பு மைதானத்தில், திரு.ஆர்.பி. கதிர்காமரின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு.இராசதுரை ஆற்றிய உரையைத் தொடர்ந்து அவர் கொழும்பு சென்று சுதந்திரனில் இணைந்து கொண்டார்.

திரு.சிவநாயகம் அவர்கள் தினகரன் உதவி ஆசிரியராகப் பணி ஏற்றார். சிவநாயகம் தினகரனில் பணி ஏற்றபோது அதன் ஆசிரியராகவிருந்தவர் திரு.நாதன் அவர்கள். இவர் தமிழ் இலக்கண இலக்கிய அறிவு கொண்டவர். இத்துடன் சிறிதளவு வித்துவக் காய்ச்சலும் அவரிடம் இருந்தது. இதனால் சிவநாயகம் அவர்கள் மீது சற்றுக் கடுமையான முறையில் ஆதிக்கம் செலுத்தினார். திரு.சிவநாயகத்தால் திரு.நாதனுடைய நெருக்குவாரத்துக்கு ஈடு கொடுக்க முடியாமற் போய்விட்டது. இந்தக் காலகட்டத்தில் தான் திரு.சிவநாயகத்தை 'சுதந்திரன்' தன்பால் ஈர்த்துக் கொண்டது.

தந்தை செல்வா, திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் போன்ற பல தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்து 'வீரன்' என்ற பெயரில் ஒரு தமிழ்த் தினசரியை ஆரம்பித்தனர். இதுவே பின்னர் 'சுதந்திரன்' என்று பெயர் மாற்றப்பட்டுப் பிரசுரமானது. திரு.சிவநாயகம் பொறுப்பேற்கும் போது 'சுதந்திரன்' நாளிதழாக வெளிவந்து கொண்டிருந்தது. தினசரி பல்லாயிரக்கணக்கில் பணத்தைத் தின்றதே ஒழிய, வருவாய் கிடைக்கவில்லை. இதனால் தான் இதனை வார இதழாகப் பிரசுரிப்பதே நன்மை பயக்கும் என்று எஸ்.டி.எஸ். ஆலோசனை வழங்கினார். இவ்வாலோசனைக்கேற்ப, 'சுதந்திரன்' வார ஏடாக மாறியது,

இராசதுரை சுதந்திரன் பணியிலிருந்து விலகி மட்டக்களப்பு வந்து சேர்ந்தார். அப்போது நெல் சந்தைப் படுத்தும் சபையின் கீழ் இயங்கி வந்த நெல்லுச் சங்கம் என்று அழைக்கப்பட்ட ஓர் அமைப்பின் நிர்வாகியாகப் பணி ஏற்றார். அவருக்கு உதவியாக 'மூனாரூனா' என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட திரு.முருகேசு அவர்கள் இராசதுரை அவர்களுடன் இணைந்தார்.

திரு.முருகேசு நீண்டகாலம் கொழும்பில் பல கைத்தொழில் நிறுவனங்களில் பணி புரிந்தவர். 'ரவீந்திரா பற்பொடி' என்று ஒரு சிறு தொழில் திரு.இராசதுரை அவர்களின் இல்லத்திலேயே சிறிய அளவில் தொடங்கப் பட்டது.

இதே காலகட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் பிரசாரக் கூட்டங்கள் எங்கு நடைபெற்றாலும் அங்கெல்லாம் திரு.இராசதுரை சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்பட்டார். அழகு தமிழில் அவர் பேசும் பேச்சைக் கேட்கவே ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவர்.

மக்கள் மத்தியில் இராசதுரை அவர்கள் பெற்ற செல்வாக்கு, தந்தை செல்வா, கோப்பாய் கோளமான் கு.வன்னியசிங்கம் போன்றாரை அவர்பால் ஈர்த்தது. இதன் பயனாகவே திரு.இராசதுரை மட்டக்களப்புத் தொகுதி வேட்பாளராக தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் சந்தர்ப்பத்தைப் பெற்றார்.

### என் புராணம்

இந்தக் கட்டத்தில் இந்தக் கட்டுரையை எழுதும் நான் என்னைப்பற்றியும் சில குறிப்புக்களைக் கூறும் நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளேன்.

அரசினர் கல்லூரியில் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். கண்ணகி நாடகத்தைத் தொடர்ந்து இராசத்துரை அவர்களுக்கும் எனக்குமிடையில் நெருக்கமான உறவி மலர்ந்தது. இடதுசாரி அரசியல் கொள்கைகளில் அப்போது இருவருக்கும் ஈடுபாடு இருந்தது.

சில சந்தர்ப்பங்களில் நாங்கள் ஒரு சிறு குழுவாகச் சேர்ந்து சிவப்பு வர்ணமை வாளியுடன் தூரிகைகளையும் ஏந்தி தெருக்களிலுள்ள வீட்டுச் சுவர்களில் அரிவாளும் சுத்தியும் கொண்ட அடையாளங்களைப் பொறிப்போம்.

பொதுவாக இரவு நேரங்களிலேயே இவ்வாறு எங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்த முயற்சிப்போம். அப்போது மட்டக்களப்பில் நீதிபதியாகவிருந்த திரு.கரத் அவர்களுடைய புதல்வரும் இணைந்து கொள்ளுவார்.

பள்ளிப்படிப்பின்போது எனக்கு கணக்குப் பாடம் சுத்த சூனியம். அரசாங்க உயர் தர பரீட்சையில் எப்போதும் கணிதம் ஒரு கட்டாய பாடமாக இருக்கும். ஆனால் 1949ம் ஆண்டு நான் எஸ்.எஸ்.சி பரீட்சை எடுக்கும் போது, கணிதம் கட்டாய பாடமாக இருக்கவில்லை. நான் இப் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்பதற்காகவே கல்வித் திணைக்களம் அந்த வருடம் மட்டும் கணிதத்தைக் கட்டாய பாடமாக விதிப்பதிலிருந்து விலக்களித்து விட்டதென்று நான் அன்றும் கூறினேன்; இன்னும் கூறிக் கொண்டிருக்கிறேன்.

அரசாங்கக் கல்லூரி திரு. நல்லையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதும், அதற்கு முதல் சிவானந்த வித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருந்த நான்,அரசாங்கக் கல்லூரியில் சேர்ந்து விடவேண்டிய தாயிற்று.

இப்பரீட்சையில் சித்தியெய்தியதும் மெதடிஸ்த மிஷன் பாடசாலைகளில் முகாமையாளராகவிருந்த திரு.எஸ்.ஏ.செல்வநாயகம் அவர்கள் எனக்கு ஆங்கில உதவி ஆசிரியர் பதவியை அளிந்து கிரான்குளம் மே.மி.பாடசாலையில் பணிபுரிய பணித்தார் -ஆக, 5ம் வகுப்புவரை மட்டுமே அப்பாடசாலை வகுப்புகள் இருந்தன.

(இன்னும் வரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 61**

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

> **இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**
>
> **அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**
>
> **இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**
>
> **நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**
>
> **இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**
>
> ~கண்ணதாசன்~

அகமது உசேன் வீட்டு அராபிய பாணிப் பள்ளி அறையில் உள்ளே வந்த நான் உட்கார்ந்ததும், வழக்கம் போலவே பலவகையான மது பாட்டில்களை அவள் கொண்டு வந்து வைத்தாள்.

எங்கள் சமூக தர்மத்தில், நாங்கள் வணங்கும் மதர் தேவதை அதுதானே!

மனிதனின் சிந்தனைப் போக்கை மாற்றுவதற்கு அதை விட அற்புதமான பொருள் வேறு என்ன இருக்கிறது?

மதுவைப் பற்றி ஆங்கிலத்தில் சில பழமொழிகள் நான் எழுதியிருக்கிறேன்.

முன் கை வளையலை ஒதுக்கி விட்டு கொண்டு கற்பகமே ஊற்றிக் கொடுத்தாள்.

எப்பொழுதுமே மதுவின் சக்திக்கு ஒரு வரிசை உண்டு முதல் ரவுண்டில், உடம்பு சூடாகும்.

இரண்டாவது ரவுண்டில், உற்சாகம் பிறக்கும்.

மூன்றாவது ரவுண்டில், உளறல் ஆரம்பமாகும்.

கற்பகத்துக்கு இந்த வரிசை தெரியாதா?

இரண்டாவது ரவுண்டில் அவள் என்னருகே உட்கார்ந்து விட்டாள்.

மெதுவாக என் தோளில் கைவைத்து, "என்மீது கோபமா...?" என்று கேட்டாள்.

"சீச்சீ! இல்லையே...!" என்றேன்.

"சந்திரசூரியன் மூலம்தான் மராட்டிய மந்திரி ஒருவரைப் பிடித்து குமாரசாமியின் விடுதலைக்கு ஏற்பாடு செய்தேன்," என்றாள்.

அவள் சொன்னதை என்னால் நம்ப முடியவில்லை. சந்திரசூரியன் இதிலே தலையிட்டிருப்பாரா? அந்தச் சந்தேகத்தை அப்போது நான் கிளப்பவில்லை.

நல்ல நேரத்தில் சந்தேகத்தைக் கிளப்புவது, பொழுதை வீணாக்கி விடும்!

அதனால் மெதுவாகப் பேச்சை மாற்றினேன்.

"லலிதா இனிமேல் வாழ்க்கைக்குத் தகுதியுள்ளவளாக இருக்க மாட்டாள் போலிருக்கிறதே...?" என்றேன்.

"ஆமாம், அதை இழந்த பிற்பாடு ஒரு பெண்ணுக்கு என்ன இருக்கிறது...?" என்றாள் கற்பகம்

"சில பெண்களுக்கு உடம்பு தானே மூலதனம்...!" என்றேன் நான்.

"என்னைக் குத்திக் காட்டுகிறீர்களா...?" என்றாள் கற்பகம்.

"இன்னும் இல்லை...!" என்றேன், நான்.

"இனிமேல் கூட என்னை கேலி செய்யாதீர்கள். என் வாழ்க்கையின் போக்கு உங்களுக்குத் தெரியும். எவ்வளவோ பாதுகாப்பாக இருந்த நான், ஏன் இந்த நிலைக்குத் தயாரானேன் என்பதை உங்களைவிட யார் தெரிந்து கொள்ளப்போகிறார்கள். நாளைக்கும் உங்கள் உதவி எனக்கு வேண்டும்!" என்றாள் கற்பகம்.

அப்பொழுதே அந்த இரகசியத்தை அவளிடம் கேட்டுவிட வேண்டும் போலிருந்தது.

"ஆமாம், அகமது உசேனின் துணைவி, ஜானா பீவி, உண்மையிலேயே ஒரு இஸ்லாமியப் பெண்தானா?" என்று கேட்டேன்.

"அதிலே சந்தேகம் என்ன? பம்பாயில் இந்துக்கள் முஸ்லீம்களிடையே அதிகம் வித்தியாசம் தெரியாது. நீங்கள் யாரையாவது பார்த்து ஏமாந்தீர்களா...?" என்று கேட்டாள்.

கற்பகத்தின் வார்த்தைகளில் இருந்து, 'இவளும் நம்மை ஏமாற்றுகிறாளோ...' என்று தான் தோன்றிற்று. பெண்ணின் மனத்தாழத்தை யார் கண்டு கொள்ள முடியும்?

அதற்குள் மூன்றாவது ரவுண்டு முடிந்து விட்டது.

அந்த நேரத்தில் கதவைத் திறந்து கொண்டு ஒரு பெண் நுழைந்தாள்.

ஆம்; சந்திரபுஷ்கரணி!

"வாம்மா! உட்கார்!" என்றாள் கற்பகம்.

"இவளைத் தெரியும்...?" என்று வேறு என்னிடம் கேட்டாள்.

அவளைப் பார்த்தவுடனேயே எனக்கு உதைக்க வேண்டும் போல் தோன்றிற்று.

சந்திரபுஷ்கரணி தான் ஜரீனாபீவியாகி, ஜரீனா பீவிதான் சந்திரபுஷ்கரணியாகி இருக்கிறாளா?

பெண்ணுக்கு எல்லா வேஷமும் பொருந்துகின்றன!

"இவளை எனக்கு நன்றாகத் தெரியும்!" என்று ஆத்திரத்தோடு சொன்னேன்.



பூனைக்கு ஒரு கிளாஸ்.விஸ்கி கொடுத்து விட்டால், அது புலியைப் போலச் சீறாதா?

"அன்று ரிட்ஸ் ஒட்டலில் தங்கக் கட்டிகளை நான் வைத்து விட்டு வெளியேறியது உங்களைக் காட்டி கொடுப்பதற்காக அல்ல: என்னை காப்பாற்றிக் கொள்ளத்தான், விக்டோரியா டெர்மினஷ் அருகே வரும்போது என்னை இரண்டு கான்ஸ்டேபிள்கள் ஜாடையாகப் பார்த்தார்கள். அதிலே பயம் வந்ததுதான், பாதுகாப்புக்காகப் பெட்டியை உங்கள் அறையில் கொண்டு வந்து வைத்தேன்!" என்றாள், அவள்.

"சரி எழுந்து உட்கார்!" என்றேன்.

அவள், எழுந்து உட்கார்ந்தாள்.

"இங்கே ஜரீனாபீவியாக நடித்துக் கொண்டிருப்பது நீதானா...?" என்றேன்.

"இல்லை அவள் என் சகோதரி நாங்கள் இருவரும் இரட்டையர்கள்?" என்றாள் அவள்.

"என்னடியம்மா இது? நீ சந்திரபுஷ்கரணி அவள் ஜரீனாபீவி. உங்கள் தகப்பன் முஸ்லீமாகவும் இந்துவாகவும் இருந்தானா?" என்றேன்.

"இல்லை, நான் உண்மையைச் சொல்லுகிறேன். சிறு வயதிலே நாங்கள் பெற்றோரை இழந்தவர்கள். அகமது உசேன் தான் எங்களை வளர்த்தார். தயவு செய்து யாரிடமும் சொல்லாதீர்கள்.

(அந்தரங்கம் வரும்)

# மறுபக்கம்

சித்ராவுக்கு திருமண நாள் நெருக்கிக் கொண்டிருந்தது. அவளுக்கு தாய், தந்தை இல்லாத குறை தெரியாமல் நாதனும் மாலதியும் மிக அன்பாகக் கவனித்து வந்தார்கள். வடமராட்சியில் நடைபெற்ற ஒப்பறேஷன் லிபரேஷனில் விமானப் படையினரின் வெறித்தனமான குண்டு வீச்சில் தாய் தந்தையரை ஒரே நாளில் பறி கொடுத்து விட்டுப் பரிதாபமாக அழுது கொண்டிருந்த சித்ராவை அவளின் தாய் மாமன் நாதன் அபயக்கரம் நீட்டித் தன்னுடன் அழைத்து வந்தான். சித்ராவின் வயதை ஒத்த தங்கள் மகள் செல்வி, மகன் செந்தூரனுடன் சேர்த்து அவளையும் மூன்றாவது பிள்ளையாக நாதனும் அவன் மனைவி மாலதியும் வளர்த்து வந்தார்கள்.

"ஏனம்மா, சித்ரா இன்னும் பத்து நாளில் கலியாணம். நீ என்றால் எதையோ பறிகொடுத்த மாதிரி இருக்கிறாய். என்ன வேண்டுமானாலும் சொல்லம்மா. உனது சந்தோஷம் தான் எங்களுக்கு முக்கியம்!" என்று சித்ராவை அன்புடன் அணைத்தாள் மாலதி.

மடை திறந்த வெள்ளம் போல் ஆண்டாண்டாக அடக்கி வைத்திருந்த அழுகை, சித்ராவிடமிருந்து பீறிட்டுக் கொண்டு வந்தது. மாலதியின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்கினாள். மாலதி துடித்துப் போய் விட்டாள்.

"என்னம்மா சித்ரா, நாங்கள் உனக்கு ஏதாவது குறை விட்டுவிட்டோமா? என்னெண்டு சொல்லம்மா? இப்ப என்ரை உயிரைக் குடுத்தெண்டாலும் செய்யிறம்.நீ அழுகிறதை என்னாலை சகிக்க முடியேல்லை!" என்ற மாலதியின் கண்கள் குளமாகி விட்டன.

"ஐயோ அத்தை, நீங்கள் குறையில்லாமல் என்னைப் பாக்கிறது தான் எனக்குப் பெரிய



குறையாயிருக்கு!" சித்ரா புதிர் போடுவது போல் சொல்லவும் மாலதியின் முகம் வியப்புடன் உயர்ந்தது.

"நீ என்னம்மா செல்லுறாய்?"

"நான் படிக்கேக்கையும் பழைய பென்சில் பேனையளை செல்வி செந்தூரனுக்குக் கெடுத்திட்டு எனக்குப் புதிசு புதிசாய் வாங்கித்தருவியள். சில வேளை தீபாவளி, பொங்கலுக்குக் காசில்லை எண்டு அவைக்கு உடுப்பு எடுக்காட்டிலும் எனக்கு விலை கூடின உடுப்பா எடுப்பியள். சாப்பிடேக்கையும் எனக்கு மட்டும் ஸ்பெஷலா ஏதும் முட்டையோ, மீன் பொரியலோ தருவியள். எல்லாத்திலும் பார்க்க செல்வி என்னை விட ஐந்து மாதம் கூடவாக இருக்க எனக்கு மாப்பிள்ளை பாத்திருக்கிறியள். அதோடை... அதோடை... செல்வியை வாடி, போடி என்று உரிமையோடை கதைக்கிறனியள் என்னை மட்டும் வாம்மா, போம்மா என்று சொல்லுறியள். நான் என்ன பிழை செய்தாலும் அது தவறுதலா நடந்திட்டுது எண்டு சமாளிச்சுப் போட்டு செல்வி, செந்தூரன் செய்யாத பிழைக்கே அடிக்கிறியள். இதெல்லாம் நான் உங்கடை பிள்ளையில்லை எண்டு என்னைக் குத்திக் காட்டிக்கொண்டே இருக்கு. அம்மா அப்பாவிடம் திட்டும் அடியும் வாங்குவதும் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டிருப்பதும், பிறகு சமாதானமாகிச் சிரிப்பதும் எவ்வளவு ஜாலி தெரியுமா? நீங்கள் செல்வி செந்தூரனை அடிக்கும்போது எனது அம்மா அப்பா இருந்தால் இப்படித்தானே என்னுடன் உரிமையுடன் நடந்து கொள்வார்கள் என்று ஏக்கமாக இருக்கும்" விக்கலும் முனங்கலுமாக சித்ரா கூறி முடித்த போது மாலதி உறைந்து போயிருந்தாள்.

**அல்வையூர் காந்தி அருணாசலம்-கனடா**

சித்ரா பெற்றோரைப் பறிகொடுத்து அநாதையானபோது அவளுக்கு வயது எட்டுத் தான். செல்வி, செந்தூரனை விட சித்ரா வுக்கே நாதனும் மாலதியும் அதிக செல்லம் கொடுத்து வளர்த்தார்கள். சிறு வயதில் தாய் தந்தையரை இழந்த ஏக்கம் அவளுக்கு இம்மியும் ஏற்படக்கூடாது என்பதில் நாதனும் மாலதியும் போட்டி போட்டுக் கொண்டு கவனித்தார்கள்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகப் பிள்ளைகள் வளர்ந்த போது, செல்வியைப் பெண் கேட்டுத் தரகர் மூலம் நல்லதொரு வரன் அமைந்தது. உடனே மாலதிக்கு, அந்த மாப்பிள்ளையை சித்ராவுக்கே செய்து, அவளை முதலில் நல்லபடி வாழவைக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. தனது எண்ணத்தை நாதனிடம் சொன்னபோது அவனும் சந்தேஷத்துடன் ஏற்றுக் கொண்டதுடன் மனைவியை எண்ணிப் பெருமிதமும் கொண்டான்.

வீடு ஒரு திருமணத்தை நோக்கிக் கலகலக்கத் தொடங்கியது. செல்வி சித்ராவை கேலியும் கிண்டலும் கலந்த வார்த்தைகளால் சீண்டி விளையாடிய போதும் சித்ராவின் முகம் வாடிச் சோர்ந்திருந்தது. 'பெற்றவர்களுடைய எண்ணம் வந்திருக்கும். எப்படித் தான் நாங்கள் பார்த்தாலும் தாய் தந்தையரின் இடைவெளியை நிரப்ப முடியாது தானே?' என்று மாலதி மனதினுள் எண்ணியபடி சித்ராவின் தலையை ஆதரவுடன் வருடி விட்டாள்.

தனது பிள்ளைகளுக்கு மேலாக அன்பு காட்டி வளர்க்கிறோம் என்று பெருமையுடன் இறுமாந்திருந்த மாலதிக்கு 'ஆண்டவா? இப்படியும் ஒரு மறுபக்கம் இருக்கிறதா' என்று திகைப்பாகி விட்டது. சிலை போல் ஆடாமல் அசையாமல் நின்ற மாலதியை சித்ராவின் குரல் சுயநினைவுக்கு கொண்டு வந்தது.

"என்மேல் கோபமா அத்தை?" என்ற சித்ரா மெதுவாக் கேட்டபோது, மாலதி தன்னை முழுமையாகச் சுதாகரித்துக் கொண்டாள்.

"அடியோய் கழுதை இரண்டு அறை தந்தால் தான் நீ சரி வருவாய். இவ்வளவு காலமும் எல்லாத்தையும் மூடி மறைச்சு மனசுக்கள்ளை வைச்சிருந்திருக்கிறியே, கள்ளி. இப்ப என்ன, உனக்கு நாலு பேச்சு உறைக்கத் தரவேணும். நான் ரெடி, மகாராணியாருக்கு வசதி எப்படியோ... ஆரம்பிப்போமா?" என்று சேலையை வரிந்து கட்டியபடி மாலதி சீரியசாக முகத்தை வைத்துக் கொண்டு சொல்லவும் சித்ரா மனநிறைவுடன் வாய் விட்டுச் சிரித்தாள்.

# மாறிடும் நெஞ்சம்

உரியநாட்காலியில் அமர்ந்து கொண்டதும் ஏனோ அன்றைய கடமைகளைச் செய்திட மனசு இஷ்டப்படவில்லை. பொதுவாக, மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியது மனமாகயிருந்தாலும் அவரைப் பொறுத்தவரையில் அன்று இனம்புரிந்திட முடியாதவொரு தடுமாற்றம். ஏன்....?

வீடு முழுவதும் சொந்தக்காரர்கள் உட்பட வேண்டியவர்கள், அறிந்தவர்கள் என்று ஏகப்பட்ட கூட்டம். அவரவர் வேலைகளில் தீவிரமாகவும் சுவாரசியமாகவும் இருந்துகொண்டமையினால் எதைப்பரிமாறிக் கொள்கின்றார்கள், என்ன பேசிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியாத அவசரங்கள் எல்லோரிடமும். இவ்வளவிற்கும் மத்தியில் 'ஐவா' 750 வலு சுமாராக 350க்கும் மேலாக அலறிக்கொண்டு. நடந்து கொண்டிருப்பது யார் வீட்டுக்குச் சொந்தமானது, அதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்ற விபரங்களை அறிந்து கொள்வதற்கு முன்னதாக கனவு தடைப்பட்டு விட்டதே. அப்போதிருந்தே அவர் மனதில் குழப்பம்.

காலை பத்து மணிக்குள்ளாக அன்று பலதரப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள். மனநிலை திருப்தியாக இல்லாமையினால் பதில்களும் அளவாகவே இருந்தன. தொடர்ந்து பல தொலைபேசி அழைப்புக்களுக்கு சக ஊழியர்கள் ஒருவரே பதில் கொடுத்துக்கொண்டிருந்தார்.

"அண்ணே! ஃபோன் உங்களுக்குத் தான்!"

"ஹலோ.... சொல்லுங்க. உண்மையாகவா.....! எத்தனை மணிக்கு....? ஐயோ! என்ட வீட்டாக்களெல்லாம்....!!!"

தகவல் பரபரப்பாக இருந்தமையினால் அவரைச்சுற்றிலும் காரியாலய ஊழியர்கள். "ஏதோ பிரச்சனை போலயிருக்கு.... கொஞ்சம் ரெஸ்ட் கொடுங்க!"

உடன் அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் சிலருக்கு இருந்தமையினால் அவர் பேசும் வரைக்கும் சற்று பொறுமையாக.

"என்ட வீடு எரிஞ்சு போச்சு....!" குரல்கம்மி வார்த்தைகள் தடைப்பட்டுக் கொண்டன. தன்னுடைய மனைவி பிள்ளைகள் அநாதரவாக நிற்பார்களே என்ற ஆதங்கம் விஸ்வரூபமாய் அவரை ஆட்கொண்டிருந்தது.



"தகவல் எங்கிருந்து...?"

"ஊர் போஸ்ட் ஓவ்பிசிலிருந்து பிறண்ட் ஒருவர் தான்!"

உடன் ஆறுதல் சொல்வதா அல்லது பரிகாரத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிப்பதா என்ற தடுமாற்றம் சுற்றியிருந்தவர்களுக்கு. கேள்விப்பட்ட தகவலாக இருந்திருந்தால் இவ்வளவு பரபரப்புக்கள் இருந்திருக்காது. பாதிக்கப்பட்டவர் கண் முன்னே காணப்படும் போது.....

"நீங்க உடனே போங்க, உங்கட வேலைகளை நான் பார்த்துக்கொள்கின்றேன். விசயத்தை ஐயா வந்ததும் சொல்லி லீவுக்கு ஏற்பாடும் செய்கிறேன்!"

"சிக்கலாயிருக்குமென்றால் முன் ஏற்பாடுகளுக்கு ஏதும்....!"

"நாங்க ரெண்டொரு பேர் வேண்டுமானால் கூட...."

அவர்கள் பங்கிற்கு ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தார்கள். பரபரப்பு அடங்கிவிடுவதாக இல்லை. மேசையில் ஆங்காங்கே கிடந்த பைல்ளை சக ஊழியையொருத்தி ஒழுங்கு படுத்தி அதற்குரிதான இடத்தில் வைத்தாள்.

சற்று நேரச் செலவு.

"இந்தாங்க....!"

"என்னயிது...?"

"இப்போதைக்கு உதவியாக இருக்கும்!"

"இல்லை வேண்டாம் சமாளிச்சுக்கு வேன்."

"பரவாயில்லை. இது நம்மோட கடமையும் கூட. நாளைக்கு எங்களுக்கு. கூச்சப்படாமல் வாங்கிக்கோங்க."

சிறு பணத்தொகை கைமாறிக்கொண்டது.

விரைவாகப்போய் பஸ் பிடித்து எப்படியும் இரண்டு மணிநேர இடைவெளிக்குள்ளாக.. ச்சே! இடையில் எத்தனை பரிசோதனை நிலையங்களைத்தாண்ட வேண்டியிருக்கு. அப்போது எதையும் பொருட்படுத்தக்கூடியதாக மனநிலை இல்லை. அவசரம் எப்படியொரு அவசரம். தவித்துக் கொண்டிருக்கும் மனைவி பிள்ளைகளுக்கு தன்னைக் கண்டால்தான் ஆறுதல் கிடைக்கும் என்ற உணர்வு அவருக்குள்.

"அண்ணே! வேண்டுமென்றால் என்ட மோட்டர் சைக்கிளில் எப்படியும் அரைமணிக்குள்ளாக போய்விடலாம்."

வார்த்தைகளைக் கேட்டதும் மனதிற்கு ரொம்பவும் ஆறுதலாக இருந்தது. எவ்வளவு மனிதங்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு. இடைவழியில் ஏதும் சிக்கல் என்றால்....

"அங்கு நிலைமை எப்படியோ தெரியாது. முடியாவிட்டால் ஆட்டோ பிடித்தாவது போய்க் கொள்வேன்."

"அண்ணே! எதுக்கும் நீங்க ஒருதடவை ஃபோன் செய்து பார்த்துவிட்டு...."

அவசரத்திலும் பதற்றத்திலும் தவறவிட்டுப் போன யோசனை. சடடென மனசு ஏற்றுக் கொள்ள தொலை பேசியைச் சுழற்ற கைகளை நீட்டவும், அதன் மணி மீண்டும் ஒலிக்கவும் நேரம் சரியாக....

"ஹலோ! ஓமோம். நான்தான் சொல்லுங்க.... ஐயோ அப்படியா! எல்லோருமா? சரி.... சரி.... அப்படியே செய்யுங்க."

"என்னவாம்....?"

"என்ட வீடு மாத்திரமல்ல. முழு ஊருமே எரிஞ்சுபோச்சாம். பஸ் போக்குவரத்தை நிறுத்தியிருக்காங்களாம். இப்போ ஊர் பாடசாலையில் உறவுக்காரர்கள் துணையுடன் என்ட குடும்பம். நிவாரணத்திற்கான

**தி. இளையவன்**

ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்காம்."

இப்போது என்ன செய்வதென்ற குழப்பநிலையில் சுற்றியிருந்தவர்கள். முதல் தகவலுக்கும் இரண்டாவது தகவலுக்கு மிடையில் அவரில் ஏகப்பட்ட மாற்றத்தை ஒரு சிலர் கண்டுகொண்டனர். தொப்பென்று நாற்காலியில் வீழ்ந்தார்.

"அப்போபின்ன மோட்டார் சைக்கிளில் போங்கோ!" எல்லோரும் ஒருமித்து, "இல்லை வேண்டாம். ஊர்க்காரர்கள் பார்த்துக்கொள்வார்கள். வீண் ரிஸ்க் எதுக்கு? மாலை நான்கு மணிக்குள்ளாக பஸ் போக்குவரத்து வந்துவிடுமாம்." பெருமூச்சுடன் சொல்லிக் கொண்டார். அந்த நிலைமையில் எவரையும் ஏறெடுக்காத பேச்சுத்தொனி. மற்றவர் அதைப் பெரிதுபடுத்தவில்லை. அவர் நிலையைப் புரிந்துகொண்டவர்கள். தான்மட்டுமென்று அறிந்து கொண்டதும் தடுமாறிப் போய் தவியாய்த் தவித்த மனசு இப்போ முழு ஊரும் என்று அறிந்துகொண்டதும் என்னமாய் மாறி சமாதானமாகி விடுகின்றது.

# அகதி

முற்றத்தில் காகம் ஒன்று ஓயாமல் கரைந்துகொண்டிருந்தது. "பிள்ளை கஜனி.. அந்தச் சனியன்பிடிச்ச காகத்தை கொஞ்சம் கலை பிள்ளை. சும்மா கிடந்து கத்திக்கொண்டிருக்குது....!" குசினிக்குள்ளிருந்து அம்மா சறோ எரிச்சலோடு கத்தினாள். "காகம் கத்தினா கடிதம் வருமாம்... சும்மா இருங்கம்மா... அது கத்தட்டும்..!" கஜனிக்கு அந்தக் காகத்தின் மீது ஏதோ ஒரு பரிதாபம். உள்ளே போய் கையில் கொஞ்சம் அரிசியைக்கொண்டு வந்து முற்றத்தில் போடுகிறாள். அப்படியாவது தயாவின் கடிதம் வராதா என்ற ஏக்கம் அவளுக்குள்.

தயா, கஜனியின் கணவன். சில வருடங்களுக்கு முன் கஜனியைக் காதலித்து பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்துகொண்டவன். நாட்டில் நடைபெறும் அநர்த்தங்களுக்கு முகம்கொடுக்க முடியாமல் நாட்டை விட்டு வெளியேறிய இளைஞர்களில் ஒருவன்.

தன்னிடம் இருந்ததையும், நண்பர்களின் உதவியுடனும் கிடைத்த காசில் கனடா அனுப்புகிறோம் என்ற ஒரு ஏஜென்சியிடம் காசையும் காட்டினான். ஏஜென்சியும் ஒரு நாள் அவனோடு சிலரையும் கனடா அனுப்ப என ஒரு பக்கத்து நாட்டுக்கு அழைத்துச் சென்றது. அவர்களும் கனடாக்கனவுகளோடு விமானம் ஏறினார்கள். ஆனால் நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது போல அவர்களோடு வந்த அந்த ஏஜென்சிக் காறன் அவர்களை ஒரு றூமில் விட்டுவிட்டு வெளியே போனவன் திரும்பி வரவேயில்லை.

இவர்கள் கையில் காசுமில்லாமல், தங்க இடமுமில்லாமல் தவிக்க அந்த நாட்டுப்பொலிஸ் அவர்களைப் பிடித்து கொழும்புக்கு அனுப்பியது. கொழும்பிலே கொஞ்ச நாள் சிறைவாசம். வெளியே வந்த தயாவுக்கு எந்த முகத்தோடு ஊருக்குப்போவது என்ற தயக்கம். கடைசியிலே கனடா வேண்டாம், வேற எந்த நாடு என்றாலும் பரவாயில்லை என்று எண்ணி ஊரிலிருந்து வட்டிக்கு காசு மாறி வேறு ஒரு ஏஜென்சியைப்பிடித்து ஒரு மாதிரி ஜேர்மனிக்குப் போய்ச்சேர்ந்து விட்டான்.

தயா ஜேர்மனிக்குப்போய் இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த நாட்டின் வெளிநாட்டவர் சட்டதிட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்களால் வேலை செய்ய முடியாத நிலை.

'இவ்வளவு நாளும் ஒழுங்காகக் கடிதம் போட்டவர்... கடந்த இரண்டு மாசமா ஒரு கடிதத்தையும் காணயில்லை..!' தயாவின் கடிதத்தைக்காணாமல் கஜனி தவித்துக்கொண்டிருந்தாள். 'பிள்ளை... சும்மா ஏன் றோட்டையே பாத்துக்கொண்டிருக்கிறாய்? மருமகன் கடிதம் போடாமல் இருப்பாரே.. கப்பல் ஓடினாத்தானே பிள்ளை கடிதம் வரும்... நீ சும்மா யோசிச்சுக் கொண்டிருக்காத பிள்ளை!' அவளின் தவிப்பைப்புரிந்து கொண்டு அம்மா சமாதானம் செய்தாள்.

"கேற்றடியில ஆரோ கூப்புடுகினம் பிள்ளை... ஆரெண்டு ஒருக்கா பார் பிள்ளை!" அம்மாவின் குரல் கேட்டு கேற்றடியைப்பார்த்த கஜனிக்கு திக்கென்று ஆகியது. கேற்றடியில் வட்டிக்காற வேலாயுதத்தார். 'கடவுளே இந்த மனுசன் வருகுதே... என்ன பதில் சொல்லுறது...? காகம் கத்தினா கடிதம் வரும் எண்டா, கடன்காறன் வாறான்' தனக்குள் நினைத்துக் கொண்டே "வாங்கய்யா... வாங்கோ!" அவரை உள்ளே அழைக்கிறாள்.

"எங்க பிள்ளை உன்ர கொம்மா? கொஞ்சம் கூப்பிடு!" வேலாயுதத்தார் கண்களில் கோபம் தெரிந்தது. "வாங்க... அண்ணை... வாங்கோ... பிள்ளை கஜனி அந்த கதிரைய எடுத்தா பிள்ளை!" குசினிக்குள்ளிருந்த அம்மா சறோ வேலாயுதத்தாரின் குரல் கேட்டு வெளியே வருகிறாள். "நான் ஒண்டும் உங்களோட இருந்து விருந்து கொண்டாட வரயில்லை... பாருங்கோ... ஏதோ உங்கிட மனுசன்ர முகத்துக்காகத் தான் காசு தந்தனான்..., இப்ப அந்த நல்ல மனுசனும் போய்ட்டுது... ரெண்டரை வருசமாச்சுது. வட்டியும் ஏறிட்டே போகுது!" வேலாயுதத்தார் கோபத்தோடு கத்தினார்." அண்ணை... எங்கிட நிலமை உங்களுக்குத் தெரியும்தானே... உங்கிட காசை நாங்கள் எப்பிடியும் தருவம்... இப்ப கொஞ்ச நாளா கப்பல் ஒண்டும் ஓடாததால மருமகன்ர கடிதம் வருகுதில்லை... எப்பிடியும் மருமகன் காசு அனுப்புவார். வந்த உடன கொண்டு வந்து தாறம் அண்ணை!" சறோ நம்பிக்கையோடு சொன்னாள். "இன்னும் ஒரு மாசத் தவணை தாறன். இதுதான் கடைசித் தவணை.. இனியும் இப்படி நான் அலைய முடியாது... பிறகு என்னில குறைநினைக்காதையுங்கோ... நான் வாறன்...." வேலாயுதத்தார் கோபமாக வெளியேறினார்.

சறோவுக்கும், கஜனிக்கும் அவமானமாகப்போய் விட்டது. எப்படி மரியாதையோடு வாழ்ந்த குடும்பம். "கடவுளே... எப்பிடியெல்லாம் மரியாதையா வாழ்ந்தனாங்கள்... எப்ப.. என்ர மனுசன அந்தப்பாவிகள் கொண்டாங்களோ, அண்டைக்கே என்ர வாழ்க்கை இப்படி நாசமாப்போச்சுது... அந்த மனுசன் இருந்தா நாங்க இப்படியெல்லாம் கண்ட நாய்களிட்டையும் பேச்சு வேண்ட வேண்டியிருக்குமா...?" பல வருடங்களுக்கு முன் சறோவின் கணவன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இன்னும் அவள் கண்முன்னே நிழலாடியது. தலையில் கைவைத்து அழுதபடி தரையில் அமர்கிறாள்.



"அம்மா... இப்படி அழுது ஒண்டும் ஆகப்போறதில்லை... எழும்புங்க... ஏதாவது யோசிப்பம்!" என்னத்தை யோசிச்சு, என்ன செய்வது?' என்ற ஏக்கம் அவளுக்குள். இருந்தாலும் அம்மா அழுவதைப் பார்க்க முடியாமல் ஏதோ சொன்னாள்.

அப்போது கேற்றடியில் மணியோசை. நிச்சயம் தபால்காரன்தான். கஜனியின் மனதுக்குள் ஒரு சந்தோசம். ஓடிப்போய் கடிதத்தை வாங்குகிறாள். நீலநிறக்கவரில் வெளிநாட்டுக்கடிதம் தயாவிடமிருந்து வரும் என்று எதிர்பார்த்தவளின் சந்தோசம் அங்கே உடைந்து போனது.அது ஒரு உள்நாட்டுக்கடிதம். அதுவும் கொழும்பிலிருந்து. கஜனிக்கு ஆச்சரியமாக இருந்தது. 'எங்களுக்கு யார் இருக்கினம்...? கொழும்பில் இருந்து கடிதம் போடுறதுக்கு?' அவசரமாகப் பிரித்துப்பார்க்கிறள்.

*அன்பின் கஜனிக்கு..., நான் நலமாக இருக்கிறான் என்று பொய் சொல்ல எக்கு விருப்பமில்லை. ஜெர்மனியிலிருந்து எனது கடிதத்தை எதிர்பார்த்திருந்த உனக்கு கொழும்பு சிறையிலிருந்து நான் எழுதும் இந்தக்கடிதம் உனக்கு அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருக்கலாம். ஆனால் உண்மை அதுதான். இது எப்படி என்று நீ யோசிக்கலாம்.*

*உங்கள் நாட்டில் தற்போது பிரச்சனை இல்லை, உங்களுக்கு அங்கே பாதுகாப்பான சூழ்நிலை இருக்கிறது என்று ஜெர்மனி அரசு எனது அகதிக்கோரிக்கையை நிராகரித்ததால் பொலிஸ் என்னைப்பிடித்து கொழும்புக்கு அனுப்பி விட்டார்கள். இப்படி என்னுடன் இருபது பேரளவில்திருப்பி அனுப்பப்பட்டோம். நாங்கள் எவ்வளவோ மறுத்தும், லோயரைத் தொடர்பு கொண்டும் கட்டாயமாக எங்களை ஏற்றி அனுப்பிவிட்டார்கள்.*

*அனுப்பும் போது அவர்கள் உங்களுக்கு அங்கே எந்தப்பிரச்சனையும் வராது, அதற்கு தாங்கள் பொறுப்பு என்றும் சொல்லித்தான் அனுப்பினார்கள். ஆனால் இங்கு நடந்ததோ வேறு. விமானநிலையத்தில் நாங்கள் இறங்கியதும் பொலிசால் எங்கள் பாஸ்போட் பறிமுதல் செய்யப்பட்டு, விசாரணைக்கென தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். எங்களில் சிலருக்கு இங்கே உதவிகள் இருப்பதால் அவர்கள் வெளியே போய்விட்டார்கள். நானும், சிலரும் எந்த உதவிகளும் இல்லாததால் வெளியே வரமுடியவில்லை. தமிழனாகப்பிறந்ததற்கா இவ்வளவு வேதனைகள்?*

**நெடுந்தீவு குகன்-கனடா.**

*உனது நிலமை எனக்குத் தெரியும். இதையெல்லாம் உனக்கு எழுதக்கூடாது என்றுதான் நினைத்தேன். ஆனால் வேறுயாருக்கு நான் எழுதுவது...? வேலாயுதத்தார் அடிக்கடி காசு கேட்டு வருவார் என்பது எனக்குத்தெரியும். அவரிடம் நிலமையைச் சொல்லி கொஞ்சம் தவணை கேள்.*

*விசாரணைகள் கெதியில் நடந்து அவர்கள் என்னை விடுதலை செய்தால் விரைவில் அங்கு வருகிறேன். ஏதோ இயன்றதைச்செய்து வாழ்வோம். நீ கண்டபடி யோசிக்காமல் தைரியமாக இரு. கடவுள் எங்களைக்கை விட மாட்டான்.*

*அம்மாவுக்கும் சுகம் சொல்லு.*

*என்றும் அன்புடன்,*
*உனது தயா.*

வாசித்த கஜனிக்குத்தலை சுற்றியது. அப்படியே நிலத்தில் சாய்கிறாள். அம்மா வந்து கடிதத்தை வாங்கிப்பார்ப்பது அவளுக்குத்தெரியவில்லை. வேலாயுதத்தார் கோபமாகக்கத்திவிட்டுப்போன அந்தக்காட்சி அங்கே தெரிகிறது. காகம் இப்போது கரையவில்லை.

# உன்னுடன் இருந்தால்.....

**இலக்கியநயம்**

இருள் கவியும் நேரம். அந்தப் பாழடைந்த கோயில் மண்டப ஒதுக்குப்புறத்தில் இருவர் அமர்ந்திருந்தனர்.

ஊருக்கு வெளியே ஒதுங்கியிருந்தது அந்தக் கோயில். ஆள் நடமாட்டமற்ற இடத்தில் அந்த இருவர் மட்டும் தனியே இருந்தனர்.

"நம்மைத் தேடி அலுத்துத் திரும்பியிருப்பார்கள்," என்றது ஆண் உருவம்.

"ம்... இரவு இங்கேயே தங்கிக் கொள்வோம். பொழுது விடிந்ததும் மேலே நடக்கலாம்..." என்று கால்களை நீட்டி முழங்காலின் கீழிருந்த ஆடுசதையை கைகளினால் அழுத்திவிட்டுக் கொண்டது பெண் உருவம்.

நெருங்கிப் பார்த்தோமானால் இருவரது முகமும் களைத்துச் சோர்ந்து, பயத்தால் வெளிறியுமிருப்பது தெரியும்.

இருவரும் வெகு தொலைவுக் கிராமத்திலிருந்து ஓட்டமும் நடையுமாக பகல் முழுவதும் அலைந்து இந்தப் பாழடைந்த கோயிலுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

"நம்மைத் தெரிந்தவர்கள் யாரும் இனி எதிர்ப்பட மாட்டார்கள்," என்றான் அரிஞ்சயன்.

"எங்கே போகப் போகிறோம்?" என்று கேட்டாள் பூவழகி.

"காலையில் எழுந்து ஊருக்குள் போனால் வண்டி ஒன்று பிடித்துக் கொள்ளலாம். இங்கிருந்து நாற்பது மைல் தொலைவிலுள்ள நகரில் இருக்கிறது என் நண்பனின் வீடு. அங்கு போய்விட்டோமென்றால் ஆபத்தில்லை. பிழைத்துக் கொள்ளவும் ஏதாவது வேலை கிடைத்துவிடும்..."

சற்று நேரம் அமைதியாக அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டுச் சொன்னான்: "உன்னால் தாங்கிக் கொள்ள முடிகிறதா பூவழகி? மலர்களின் மீது நடந்து படுத்து வளர்ந்தவள் நீ. என்னோடு கல்லிலும் முள்ளிலும் நடந்து வருகிறாயே...!"

"அரி, உண்மையைச் சொல்வதாயிருந்தால், உன்னை விட்டுத் தனியே இருக்கும் நேரங்களில் என் வலி இருக்கிறதே.... அது இந்தக் கல் முள் எல்லாவற்றையும் விடக் கடுந்துயரம். உன்னுடன் இருந்தால் எனக்குத் தீ கூடச் செந்தேன்!"

அரி அவளைக் காதலோடு பார்த்தான். கண்களுக்குள் குளிரருவி நிறைந்தான். அவள் பாதங்களை எடுத்து மடியில் வைத்துக் கொண்டான். விரல்களுக்குச் சொடக்கு எடுத்தான்.

அவள் கூச்சத்தோடு கால்களை இழுத்துக் கொண்டாள். அவன் மீண்டும் எடுத்து மடியில் வைத்தான்.

"என்ன இது?" என்று அவள் சிணுங்கினாள்.

"என்னுள் கட்டற்ற ஆறு எனப் பொங்கிப் பெருகும் காதலை வெளிப்படுத்த-வடிகாலிட வழிவேண்டும். என்னை விடு பூவழகி!"

அவள் சற்றுநேரம்



மௌனமாயிருந்துவிட்டுச் சொன்னாள்: "முன்பெல்லாம் சிறு எறும்பு கடித்தாலும் வலியால் துடித்துப்போவேன் தெரியுமா? இப்போது தேள் கடித்தாலும் எனக்கு வலி தெரியாது என்று தோன்றுகிறது... உன்னுடன் இருக்கிறேன் என்ற நினைவே எனக்கு உலகத் துன்பங்களிலிருந்து விடுதலை கிடைத்த உணர்வைத் தருகிறது..."

"உனக்குப் பசிக்குமல்லவா? நான் போய் ஏதாவது வாங்கி வர முடியுமா என்று பார்க்கிறேன்!" கூறியபடியே எழுந்திருக்க முயன்றான் அரிஞ்சயன்.

"நான் எப்படித் தனியாக இருப்பேன்? நானும் வருகிறேன்!" என்றெழுந்தாள் அவளும்.

சிறிது தூரம் நடந்தார்கள்.

பூவழகி 'தொப்' என்று கீழே அமர்ந்தாள்,

"என்னால் முடியவில்லை அரி. காலெல்லாம் புண்ணாக வலிக்கிறது. எனக்குப் பசியில்லை. வா காலையில் பார்த்துக் கொள்ளலாம்," என்றபடி அவன் தோளைப் பற்றி சிரமத்துடன் எழுந்தாள். இருவரும் திரும்பி நடந்தனர்.

கோயில் கிணற்றிலிருந்து நீரள்ளிப் பருகினர்.

"நீ அதிகம் இந்த நீரைக் குடியாதே. உனக்கு இது ஒத்துக் கொள்ளாது பூவழகி!"

"நீ குடிக்கிறாய்தானே! எனக்கும் ஒன்றும் செய்யாது."

"அப்படியில்லை பூவழகி, நான் இப்படிப்பட்ட கிணற்று நீரையே குடித்து வளர்ந்தவன். என் உடம்பில் இந்த நீரிலுள்ள கிருமிகள் எதிர்ப்பு சக்தி இருக்கிறது. நீயோ, சுத்திகரிக்கப்பட்ட நீரைக் குடித்து வளர்ந்தவள். உன் உடலுக்கு இந்த நீர் ஒத்துக் கொள்ளாது. கொஞ்சமாய்க் குடி. காலை வரை பொறுத்துக் கொள் கண்ணே."

அவள் அவனது தோளில் தலை சாய்த்து அமர்ந்தாள். கூந்தலைக் கோதினான். விரல்களில் பிசுபிசுப்பை உணர்ந்தான். வியர்வை! புழுதி கலந்து அழுக்கின் மணத்தை நாசி உணர்ந்தது.

***

அவள் கூந்தலின் வாசனைக்குள் இறங்கிய நாள் ஞாபகத்தில் வந்தது. அவளுக்கென்றொரு பிரத்தியேக வாசனை இருப்பதை அவன் அறிவான். அது அவள் கூந்தலிலிருந்து சருமமெங்கும் வியாபித்திருந்தது அவனுக்குள் அவள் நினைவு வரும் போதெல்லாம் அந்த மணமும் கூடவே வந்தது.

"உன் வாசனை பிரத்தியேகமானது. நான் வேறெங்கும் இந்த வாசனையை அறிந்ததில்லை. ஆகவே இது உன் கூந்தலிலிருந்தோ சருமத்திலிருந்தோ தான் வருகிறது. செண்பகப் பாண்டியன் சந்தேகம் என்னால் இன்று தீர்ந்தது!" என்றான்.

அவள் சிரித்தாள்.

**தருவது புழடில்யன்**

"நான் பிரத்தியேகமாய் உபயோகிக்கும் வாசனைத் தைலங்களில் வருகிறது அது." என்றாள்.

"இல்லை, அந்த வாசனைப் பொருட்களின் மணம் அல்ல இது. ஒருவேளை அவை உன் உடலில் கலப்பதால் உண்டாகிற புது வாசனையாக இருக்கலாம். இந்த வாசனை உன்னிடம் மட்டும்தான்.....!"

"வேறு யாரையெல்லாம் மோந்து பார்த்திருக்கிறாய்?"

"இல்லை இல்லை... அந்த வாசனைத் தைலங்களின் வாசனை தான் எனக்குத் தெரியுமே... உன்னிடமிருந்து வருவது அதுவல்ல என்றேன்....!" சமாளித்தவாறே அவளை வேறு திசைக்கு இழுத்துச் செல்லும் உரையாடலுக்குள் புகுந்தான்.

***

அன்றைய அவள் கூந்தலின் நினைவிலிருந்து, பிசு பிசுப்பும் அழுக்குமாய் மணக்கும் இன்றைய இந்தக் கூந்தலுக்குத் திரும்பினான்.

அவள் வெறுந்தரையில் படுத்துவிட்டிருந்தாள். கையைத் தலைக்கு அணையாய் வைத்தபடி சட்டென்று உறங்கியிருந்தாள்.

குழந்தை போலத் தூங்கும் அவள் முகத்தைப் பார்த்தான். மூடிய இமைகள் மலர் மொட்டுக்களாய்த் தோன்றின. காதலி கண்மூடித் துயில்வதை, மலர்ந்த பூக்கள் இரண்டு மறுபடி மொட்டுக்களானதாக வர்ணித்த ஆங்கிலக் கவிஞன் ஞாபகத்தில்வந்தான்.

நுளம்புக் கடிகளுக்கு அவ்வப்போது சிலிர்த்தவாறும் சிணுங்கியவாறும் அவள் தூங்கினாள்.

குளிரறைக்குள், மலரிதழ்களை விட மென்மையான பஞ்சு மெத்தையில் உறங்கிய அவளின் இந்தக் கட்டாந்தரை உறக்கம் அவனை வாட்டியது.

தன் காதலின் மீதே அவனுக்கு கோபமுண்டானது.

புழுதியில் ஒரு பூ வீழ்ந்துகிடக்கத் தான் காரணமாக நேர்ந்ததே என்று கவலையில் ஆழ்ந்தான்.

**புன்கண் கூர்யாமத்து,**
**பூழிமேல் தான் படுத்து,**
**தன் கண் துயில்வாளைத்**
**தான் கண்டும் என் கண்**
**பொடியாதல்! உள் ஆவி**
**போகாதால்! நெஞ்சம**
**வெடியாதால்! என்றான்,**
**விழுந்து.**

-நளவெண்பா

---

# சிந்தியா பதில்கள்

★ டியர் சிந்தியா, 355வது முரசில் எஸ்.சுரையாவின் (மாவனல்லை) கேள்விக்கு, ரோஜா திரைப்படத்தில் 'தமிழா... தமிழா...' என்ற பாடல்தானே சரியான பதில்?

ஐ.கோடீஸ்வரன், வத்தளை.

அடடா! தமிழுக்குப் பிறகுதானே உயிர்.... ஆமாம்!

★★

★ அனைவராலும் இன்று இரசிக்கப்படும் கிரிக்கெட் மைதானம் சூதாட்டக் களமாக மாறியது பற்றி...?

வீ.ஸ்ரீதரன், மல்லிகைத்தீவு.

கிரிக்கெட் மீது வளர்ந்து வந்துகொண்டிருந்த ஆவேச பித்து, யோசிக்க வைத்தது உண்மைதான். சினிமாக் கதாநாயகர்கள் போல கிரிக்கெட் நாயகர்களும் இரசிகர்களின் வழிபாட்டுக்குரியவர்களாக மாறி வந்து கொண்டிருந்தார்கள். கண்னாபின்னாவென்று வளர்ந்து கொண்டிருந்த மோகம் கொஞ்சம் வடிவது விளையாட்டு இரசிகர்களைப் பொறுத்தவரையில் நல்லது. ஆனால், விளையாட்டுக்கு பாதகம் தான்.

★★

★ இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு என்ன செய்யலாம் சிந்தியா?

ராமையா மணிவண்ணன், பூண்டுலோயா.

அதை அரசினர் அல்லவா திட்டமிட வேண்டும். ஆனால் வாழ்க்கையைப் படிக்க பாடசாலை வளவுக்கு வெளியே வந்தால் தான் உண்டு.

★★

★ பெண்கள் இல்லாவிட்டால் நம்மால் வாழவே முடியாதா?

எஸ்.தியாகராஜா, மட்டக்களப்பு.

வாழலாம். ஏன் வாழ வேண்டும்?

★★

★ அப்பாவித்தனமாக இருப்பதாக என்னை எல்லோரும் கேலி செய்கிறார்கள். நான் என்ன செய்யலாம் சிந்தியா?

வி.வினயரூபன், வவுனியா.

அதைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்து விட்டீர்கள் அல்லவா? இனி அப்பாவித்தனம் போய்விடும். அப்பாவித்தனம் ஒன்றும் கெட்ட குணம் அல்ல, மிக அதிகம் பேரைச் சிரிக்க வைக்கும் ஜோக்குகள் அப்பாவித்தனத்திலிருந்துதான் வருகின்றன. "ஒருத்தர் ரெயில்வே ஸ்டேஷனில். போய் ரிட்டேர்ண் ரிக்கற் வேணு"மென்று கேட்டார்.

ரிக்கற் கொடுப்பவன் கேட்டான்: "எந்த ஊருக்கு?" இவர் சொன்னார்: "இந்த ஊருக்குத் திரும்பி வரத்தான்!"

★★

★ இந்தியாவின் மத்தியப் பிரதேச சிந்தியா குடும்பம் பற்றி ஒரு வரி சொல்ல முடியுமா?

ரெ.அசோக்குமார், டிக்கோயா.

முன்னாள் குவாலியர் மகாராஜா பரம்பரை.

★★

★ நீங்கள் நன்றாகப் பாடுவீர்களாமே! எனக்காக ஒரு பாடலைப் பாடிக் காட்டுவீர்களா?

செபஸ்டியன் மர்மினா, அம்பிட்டிய.

சரி, எப்படி இருந்தது?

★★

★ தேனிசைத் தென்றல் தேவாவிற்கு எத்தனை சகோதரர்கள்? அவர்களும் பாடுகிறார்களா?

தேவன், இரட்டைப்பாதை.

பண்ணைபுரத்துப் பாண்டவர்கள் போல இவர்களும் ஐந்து சகோதரர்கள். தேவாவும் சபேஷும் அடிக்கடி கானாப் பாடல்களை பாடிக்கொண்டிருக்கிறார்கள். முரளி ஓரிரு பாடல்களில் குரல் கொடுத்திருக்கிறார். மற்றைய இருவரும் தேவாவின் குழுவிலேயே வாத்தியக் கருவிகள் வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

★★



★ 'சக்தி' என்பதை 'ஷக்தி' என்று மொழிகிறார்களே இது சரியா சிந்தியா?

பி.எம்.எம்.அனீஸ், பாணந்துறை.

எழில் வேந்தன் கவனிப்பாராக!

★★

★ காவியக் காதலர்களில் உங்கள் நெஞ்சைத் தொட்ட காதல் ஜோடி யார்? அவர்களைப் பற்றி சிறுகுறிப்பு ப்ளீஸ்?

மு.மாதவி, மன்னார்.

உடல் துண்டு துண்டாகக் கிழித்து வீசியெறியப் பட்டாலும் ஒவ்வொரு பகுதியும் 'லைலா' என்றே உச்சரித்துக் கொண்டிருக்கும் என்று மலையுச்சிமீது நின்று அவள் பெயரைக் கூவிப் பித்தனாகத் திரிந்த மஜ்னூன். ஒரு தவமாக தன் காதல் இரகசியங் களையெல்லாம் இதயத்துக்குள்ளேயே பூட்டி வைத்து வாழ்ந்த லைலா.

பாரசீகத்தைச் சேர்ந்த ஹகீம் நிஸாமி எழுதிய காதல் காவியம்தான் 'லைலா மஜ்னூன' மஜ்னூன் என்றால் 'பைத்தியக்காரன் என்று அர்த்தம். இது அவனது காதல் பயித்திய நிலை கண்டு ஊரார் அவனுக்குச் சூட்டிய பெயர். இயற் பெயர் 'க்வேஸ்'. லைலா என்றால் 'இரவின் அழகு' என்று பொருள். தந்தையால் வேறொருவருக்கு கட்டாயத் திருமணம் செய்து வைக்கப்பட்ட லைலா, கணவன் இறந்தபிறகும் மஜ்னூனை ஒரே ஒரு முறை பார்த்துவிட்டுச் சாகவேண்டும் என்று வீட்டு வாயிற்புறத்தையே பார்த்தபடி உயிர் விடுகிறாள்.

அவளுக்குத், திருமணமானால் என்ன, 'எனக்கு அவள்தான் நீங்கள்!' என்று கடவுளிடமே சொல்லிவிட்டு அவள் பெயரை காடு மேடேல்லாம் ஜபித்துத் திரிகிறான் மஜ்னூன்.

இதயத்தைப் பிழிகிற காதல் காவியம்.

★★

★ சிந்தியா! 'குச்சி குச்சி ஹோத்தா ஹே' என்றால் என்ன? தமிழக்கம் செய்ய முடியுமா?

குமார், கரடியனாறு.

அது 'குச் குச் ஹோத்தா ஹை'. நேரடித் தமிழாக்கம் 'சில சில நிகழ்வுகள்'. படத்திற்குப் பொருத்தமானது: 'என்னென்னவோ நடக்குது' சந்திரபாபு பாடல் ஞாபகமிருக்கிறதா? 'என்னமோ நடக்குது மர்மமா இருக்குது. ஒண்ணுமே புரியலே உலகத்திலே...' அதுதான் அந்தப் படம்.

★★

★ உம்மிடம் நான் கேள்விகள் எதுவுமே கேட்கவில்லை. ஆனால், நீர் பதில் கூற வேண்டும். (ஹி... ஹி... ஹி... வசமாக மாட்டிக் கொண்டீரா?)

எம்.சிறீகாந்தன், தெஹியோவிற்ற.

அப்படியா! (ஹா... ஹா... ஹா... கழட்டிக் கொண்டேனா?)

★★

---

**ஸ்போர்ட்ஸ்**

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்
ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## அன்வர் ஓய்வு பெற முடிவு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் சயிட் அன்வர், 2003ல் நடைபெறும் உலகக் கோப்பைப் போட்டிக்குப் பின் ஓய்வு பெற முடிவு செய்துள்ளார்.

பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றில் இது குறித்து செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

"2003ல் தென்னாபிரிக்காவில் நடைபெற உள்ள உலகக் கோப்பைப் போட்டிக்குப் பின் ஓய்வுபெற முடிவு செய்துள்ளேன். அதன் பின்னர் தொலைக்காட்சி வர்ணனையாளராக விரும்புகிறேன்!" என்று சயிட் அன்வர் கூறியுள்ளார்.

டாக்காவில் நடைபெற்ற ஆசியக் கோப்பை இறுதிப் போட்டி அன்வருக்கு 200வது ஒரு நாள் போட்டியாகும். 32 வயதான அன்வர் தனது முதல் போட்டியை 1988ல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடினார்.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக சிறிது காலம் அன்வர் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடாமல் இருந்தார். இடது கை மட்டை வீச்சாளரான இவர் ஒரு நாள் போட்டியில் 7,158 ஓட்டங்களைச் சேர்ந்துள்ளார்.

## இந்திய வீரர்களுக்கு ஆஸியில் பயிற்சி

அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் உள்ள கிரிக்கெட் அகடமியில் பயிற்சி பெறுவதற்காக 3 இந்திய வீரர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். உத்தரப் பிரதேச முகமட் கைஃப், தமிழ்நாட்டின் ஸ்ரீராம், ஒரிஸ்ஸாவின் சிவசுந்தர் தாஸ் ஆகிய மூவருமே பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

கிரிக்கெட் குறித்து முழுவதையும் அறிந்து கொள்வதற்காக இவர்கள் அவுஸ்திரேலியா அனுப்பப்பட்டுள்ளனர். சுனில் கவாஸ்கர், அலன் போர்டர் ஸ்கொலர்ஷிப் திட்டத்தின் கீழ் முதன் முறையாக இந்திய வீரர்கள் அவுஸ்திரேலியா அனுப்பப்படுகின்றனர்.

அவுஸ்திரேலிய அகடமி பயிற்சியாளர்களால் இவர்களுக்கு 6 வாரகாலப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது

## சமன் செய்தார் மொயின் கான்



முதன் முறையாகப் பாகிஸ்தானுக்கு ஆசியக் கோப்பைப் பெற்றுக் கொடுத்த பாகிஸ்தானின் கப்டன் மொயின் கான், விக்கெட் கீப்பராகப் புதிய சாதனை படைத்துள்ளார்.

ஒரு நாள் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய விக்கெட் கீப்பர் என்ற சாதனையைப் புரிந்திருக்கும் அவுஸ்திரேலியாவின் முன்னாள் கீப்பர் இயன் ஹீலியின் சாதனையை மொயின்கான் சமப்படுத்தியுள்ளார்.

அண்மைய ஆசிய கோப்பைப் போட்டியின்போது இறுதியாட்டத்தில் இலங்கை வீரர் மார்வன் அத்தப்பத்துவை அவுட்டாக்கியதன் மூலம் மொயின் கான் 234 விக்கெட்டுக்களை வீழ்த்தி ஹீலியின் சாதனையைச் சமன் செய்தார். இது இவருக்கு 176வது ஒருதினப் போட்டியாகும். இவற்றில் 195 கட்ச்சுகளும், 39 ஸ்டம்புகளும் அடங்கும்.

இயன் ஹீலி 168 போட்டிகளில் 234 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் கீப்பர் ஜெஃப்ரிஜோன் 169 போட்டிகளில் கலந்து கொண்டு 204 விக்கெட்டுக்களை வீழ்த்தி 3வது இடத்தில் இருக்கிறார். அதற்கடுத்த இடத்தில் 165 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் கீப்பர் டேவ் றிச்சர்ட்சன்.

# மன்னாதி மன்னன்

10

இராஜகுமாரன்

## பத்மாவதியின் கதை

வச்சிரமகுடனால் பத்மாவதியிடம் தூதாக அனுப்பப்பட்ட கிழவி சுரங்கப் பாதையினூடாக தன் வீட்டை வந்தடைந்தாள். இளவரசி பத்மாவதி குங்குமத்தினால் அவளுடைய கன்னத்தில் போட்டு விட்டிருந்த அடையாளத்தைப் பார்த்த மந்திரி குமாரன், "இன்னும் மூன்று நாட்களுக்குப் பிறகு சுரங்கப் பாதையின் ஊடாக தன்னுடைய அந்தப்புரத்துக்கு வருமாறு இந்த அடையாளத்தின் மூலம் கோரியிருக்கிறாள்!" என்று வச்சிர மகுடனிடம் கூறினான்.

நான்காவது நாளன்று இரவு வேளையில் அதே சுரங்கப் பாதையினூடாக வச்சிர மகுடன் பத்மாவதியின் அந்தப்புரத்தைப் போயடைந்தான்.

இளவரசரின் வருகையை எதிர்பார்த்து பத்மாவதி தயாராகக் காத்திருந்தாள். வச்சிர மகுடனை வரவேற்று உபசரித்து, அங்கேயே தங்கியிருக்கும்படி கேட்டுக் கொண்டாள். இவ்வாறு பன்னிரெண்டு நாட்கள் இருவரும் மகிழ்ச்சியாகக் காலம் போனதே தெரியாமல் இன்பம் துய்த்திருந்தனர்.

அன்று வச்சிரமகுடனுக்கு நண்பன் மந்திரி குமாரனுடைய நினைவு வந்தது. இதனால் வாட்டமுற்றிருந்தான்.

இதைக் கண்ணுற்ற பத்மாவதி, "அன்பரே! ஏன் வாட்டமுற்றிருக்கிறீர்கள்? தங்களுக்கு நான் செய்யும் உபசாரணைகள் பிடிக்கவில் லையா?" என்று விசாரித்தாள். வச்சிர மகுடனோ, "அவ்வாறு எதுவுமில்லை. எனது இளமைப் பருவத்திலிருந்து என்னுடைய இணைபிரியாத நண்பனாக விளங்கிய மந்திரி குமாரனை நினைத்துக் கொண்டேன். அவன் என்ன ஆனானோ தெரியவில்லை. அவனை நினைத்துத் தான் வேத னைப் படுகிறேன்!" என்றான்.

பத்மாவதி, "இதற்காகவா கவலைப் படுகிறீர்கள்? நீங்கள் வேண்டுமானால் உங்கள் நண்பரைப் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்! உங்கள் நண்பருக்காக நான் சுவையான பட்சணங்களும் தருகிறேன். அவற்றையும் அவரிடம் கொடுங்கள்!" என்று பவ்வியமாகக் கூறினாள்.

அன்று நள்ளிரவின் பின்னர் வச்சிரமகுடன் சுரங்கப் பாதையினூடாகச் சென்று, கிழவியின் வீட்டில் மந்திரி குமாரனைக் கண்டான். நடந்த சம்பவங்கள் அனைத்தையும் கூறினான். பத்மாவதி கொடுத்தனுப்பிய தின்பண்டங்களையும் நண்பனிடம் கொடுத்து உண்ணும்படி கூறினான்.

மந்திரிகுமாரன் அவற்றைப் பார்த்ததும் முகத்தைச் சுளித்துக் கொண்டான். "இவற்றை நான் உண்ண மாட்டேன்!" என்று சற்றுக் கடுமையாகக் கூறிவிட்டு,

"என்னைக் கொல்வதற்காகவா இவற்றை எடுத்து வந்தாய்?" என்று கேட்டான்.

திகைப்படைந்த வச்சிரமகுடன் "என்ன கூறுகிறாய்? என் காதலி உனக்காக விசேடமாக தயாரித்துத் தந்த பட்சணங்களை, உன்னைக் கொல்வதற்காகக் கொண்டு வரப்பட்டவை என்று கூறுகிறாயே! நீயும் ஒரு நண்பனா?" என்று கோபத்துடன் கேட்டான்.

"நண்பா! நான் உன்னுடைய உண்மையான நண்பன்தான். ஆனால் உன்னுடைய காதலி ஒரு மோசக்காரி. துர்நடத்தையுள்ளவள். நீ என் மீது நட்புக் கொண்டிருப்பதை அவள் விரும்பவில்லை. ஆகவேதான் உன்னால் விரும்பப்படும் உன் நண்பனான என்னைக் கொலை செய்ய அவள் எண்ணியுள்ளாள்!" என்று கூறிவிட்டு, அவ்வழியாகச் சென்ற ஒரு நாயை அழைத்து, "இதோ பார்! உனது காதலியின் உண்மையான நோக்கம் புலப்படப் போகிறது" என்று கூறிவிட்டு, பட்சணத்தில் ஒரு பிடியை எடுத்து அந்த நாய்க்குப் போட்டான். அதனை உட்கொண்ட நாய் சில நொடிகளில் அவர்கள் முன்னே சுழன்று விழுந்து உடன் இறந்தும் போய் விட்டது.

அரச குமாரன் அதிர்ந்து போனான், மந்திரி குமாரன், வச்சிர மகுடனைத் தேற்றி ஆறுதல் வார்த்தைகள் கூறி, இன் றிரவு மீண்டும் அந்தப்புரம் போ! பட் சணங்களை என்னிடம் கொடுத்து விட்ட தாகக் கூறு. அன்றிரவு பத்மாவதி உறங்கிய பின் அவளுடைய கழுத்தில் காணப்படும் முத்துமாலை ஒன்றை கழற்றி எடுத்துக் கொள். குங்குமக் குழம்பில் உனது மூன்று விரலையும் புதைத்தெடுத்து அவளுடைய, மார்பில் மூன்று கீறுகளை வைத்து விட்டு சுரங்கப் பாதை வழியாக வந்துவிடு!"

மந்திரிகுமாரன் கூறியபடி வச்சிர மகுடன், அந்தப்புரம் சென்றான். பத்மாவதி மகழ்ச்சியாக வரவேற்றாள். "நண்பரிடம் தின்பண்டங்களைக் கொடுத்தீர்களா?" என்று கேட்டதற்கு, "ஆம்!" என்று வச்சிரமகுடன் கூறிவிட்டு, எதுவுமே நடக்காதது போல் நடந்து கொண்டான்.

நள்ளிரவின் பின் பத்மாவதி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த வச்சிரமகுடன் கழற்றி எடுத்துக் கொண்டான்.

குங்குமக் குழம்பில் தனது மூன்று விரலை யும் தொய்த்தெடுத்து அவளுடைய மார்பில் கீறிவிட்டு, அரவம் இல்லாமல் சுரங்கப் பாதையினூடாக வெளியேறி நண்பனிடம் வந்து சேர்ந்தான்.

வச்சிர மகுடனின் வரவை எதிர் பார்த்திருந்த மந்திரிகுமாரன், நடந்த சம்பவங்களை வச்சிரமகுடனிடம் கேட்டு அறிந்தான். வச்சிரமகுடன் நண்பனிடம் தான் கொண்டு வந்திருந்த முத்து மாலையை காண்பித்தான்.



அம்மாலையை அரசகுமாரனே வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

அன்றிரவு முழுவதும் விழித்திருந்து இருவரும் பல திட்டங்களைத் தயாரித்தனர். அதன்படி அடுத்தநாள் அதிகாலையில் இருவரும் எழுந்து மந்திரிகுமாரன் ஒரு சன்னியாசியைப் போலவும் அரசகுமாரன் அவருடைய சிஷ்யனைப் போலவும் உருமாறிக் கொண்ட னர்.

அரச குமாரனிடம் மந்திரி குமாரன் திட்டத்தை விளக்கினான். "முத்துமாலையை எடுத்துக் கொண்டு அரசகுமாரன் அதனை விற்கப் போவதாக கூறிக் கொண்டு எப்படியும் அரண்மனைக்குள் போய்விட வேண்டும்!" என்று கூறினான்.

இதன்படி அரசகுமாரன் முத்து மாலையுடன் புறப்பட்டான். அம்முத்துமாலையைப் பார்த்த அவ்வூர் மக்கள், அத்தகைய மாலையை அரசன் மட்டுமே வாங்கிக் கொள்ளத் தகுதியுடையவர் என்று கருதியமையினால் வச்சிர மகுடன் சுலபமாக அரண்மனைக்குள் போக முடிந்தது.

அரசவையிலிருந்த மன்னனிடம் முத்து மாலையைக் காண்பித்தான். அதனைப் பார்த்த அரசன், அம்மாலைக்குரிய விலையைக் கேட்டார்.

ஒரு துறவியின் சீடனைப் போல் வேடம் புனைந்திருந்த அரசகுமாரன், தனக்கு இந்த முத்து மாலையின் விலை தெரியாது என்று கூறியதுடன், "சுடலையில் தவம் செய்து கொண்டிருக்கும் தனது குருவுக்கே விலை தெரியும்!" என்று, ஏற்கனவே திட்டமிட்டபடி கூறினான்.

அரசர் வச்சிரமகுடன் சேர்ந்து, இருவருமாக சுடலைக்குச் சென்று துறவி வேடத்திலிருந்த மந்திரிகுமாரனைக் கண்டனர்.

யோக நிலையிலிருந்த மந்திரி குமாரனை இருவரும் வணங்கினர். அவன் கண்ணைத் திறந்து அரசனிடம் வந்த காரணத்தைக் கேட்டான். "சுவாமி தங்கள் சீடர் ஒரு முத்து மாலையை விற்பதற்காக என்னிடம் வந்தார். இதன் விலையை அறிவதற் காக நான் தங்களை நாடி வந்தேன்!" என்றார் அரசர்.

துறவி வேடத்திலிருந்த மந்திரி குமாரன் "அரசே! நாங்கள் துறவிகள். இங்கு இரவில் தியானத்தில் ஆழ்ந்திருக்கும் போது, அழகான பெண்ணொருத்தி இங்கு வருவாள். புதைக்கப்பட்ட பிணங்களைத் தோண்டி எடுப்பாள். அவற்றின் வயிற்றைப் பிளந்து, குடலை எடுத்து உண்ணுவாள். கடந்த இரவு கூட அவள் இங்கு வந்தாள். அவள் இவ்வாறு நடந்து கொள் வதற்கான காரணமென்னவென்று விசாரிப்பதற்காக திரிசூலத்தை எடுத்து அவளுடைய மார்பிலே அழுத்தினேன். அவள் தன்னை ஒன்றும் செய்ய வேண்டாம் என்ற கேட்டுக் கொண்டு உண்மையைக் கூறினாள்.

தன்னுடைய பெயர் பத்மாவதி என்றும் எதையுண்டாலும் தனது பசி அடங்குவதில்லையென்றும், பிணத்தின் குடலை உண்டால் மட்டுமே தன் பசி அடங்கும் என்றும் கூறிவிட்டு தனது கழுத்திலிருந்த முத்து மாலையைக் கழற்றி எம்முன் வீசிவிட்டு ஓடி விட்டாள்.

"இந்த மாலை துறவிகளாகிய எங்களுக்குத் தேவைப்படாது. அரண்மனையில் உள்ளவர்களுக்கு மட்டுமே இந்த மாலை பயன்படலாம் என்பதனால் தான் எனது சீடனிடம் மாலையைக் கொடுத்து தங்களிடம் அனுப்பி வைத்து விட்டேன்" என்று தெரிவித்தான்.

மந்திரி குமாரன் கூறிய கதையை நம்பிய அரசன், "இந்த மாலைக்கு எத்தனை பொன் தர வேண்டும்!" என்று அரசன் கேட்க, "எப்பொருளும் எமக்கு வேண்டாம். இதனை மன்னரே வைத்துக் கொள்ளலாம்!" என்று மந்திரி குமாரன் கூறி முடித்தான்.

துறவிக்கு நன்றி கூறிவிட்டு குழப்பத்துடன் அரசன் அரண்மனை சென்றான்.

தனது பிரதான அமைச்சரையும் வரவழைத்து தன் மகள் பத்மாவதியையும் தன்னிடம் அழைத்துக் கொண்டார். முத்து மாலையை மகளிடம் காட்டி, "இது உன்னுடையது தானா?" என்று கேட்டார். அவளும், தலைகுனிந்தபடி "ஆமாம்!" என்றாள்.

அவளுடைய தோழிகளை அழைத்து பத்மாவதியின் மார்பில் அடையாளங்கள் ஏதாவது இருக்கின்றனவா, என்று பார்த்து அறிந்து கொண்டார். மூன்று சிவப்புக் கீறல்கள் இருப்பதாகவும் தோழிகள் கூறினர்.

அருகிலிருந்த அமைச்சரைப் பார்த்து "இந்தப் பெண்ணை என்ன செய்யலாம்?" என்று அரசர் கேட்டார்.

அமைச்சர் "இத்தகையதொரு பெண் அரண்மனையில் மட்டுமல்ல, இந்த நாட்டிலேயே இருக்கக் கூடாது. இவளை உடனடியாக நாட்டை விட்டு அகற்றி விடவேண்டும்!" என்றார்.

இதன்படி அரசர் பத்மாவதியை நாட்டை விட்டே வெளியேற்றினார்.

*(மன்னன் வருவான்...)*

## சரியான மூக்குடைப்பு



ஹோல்பேர்க் என்பவர் நோர்வே நாட்டின் மிகப் புகழ் பெற்ற எழுத்தாளர். ஒரு முறை நாட்டின் மிக முக்கியமான பணக்காரர்கள் கலந்து கொள்ளும் ஒரு விருந்துக்கு அழைக்கப்பட்டார்.

விருந்துக்கு வந்திருந்த அனைவரும் அவர்கள் பாரம்பரிய உடையணிந்து வித விதமான தொப்பிகளுடன் இருந்தனர். புகழ் பெற்ற எழுத்தாளராய் இருந்தும் மிகவும் ஏழ்மையான சூழ்நிலையிலேயே இருந்தார் ஹோல்பேர்க். தன்னிடம் இருந்த ஒரு பழைய கோர்ட் சூட்டை அணிந்து, தலைக்குச் சரியாகப் பொருந்தாத ஒரு தொப்பியுடன் விருந்துக்குப் புறப்பட்டார்.

விருந்து நடக்கும் ஹோட்டலுக்குள் நுழையும் போது, எதிரே ஒரு பணக்காரன் இவரது தோற்றத்தையும் உடை அணிந்திருந்த விதத்தையும் தலைக்குப் பொருந்தாத தொப்பியையும் பார்த்துக் கிண்டலாக,

"உன் தலைக்கு மேலே உள்ளது என்ன?" என்றான்.

அதற்கு ஹோர்பேர்க் சற்றும் யோசிக்காமல்,

"உன் தொப்பிக்குக் கீழே உள்ளது தலை என்றால், என் தலைக்கு மேலே உள்ளது தொப்பிதான்!" என்றார்.

## விருதின் விதி



புகழ்பெற்ற ஃபிரெஞ்சு எழுத்தாளர் விக்டர் ஹ்யூகோவுக்குப் புகழும் பணமும் குவிந்தாலும், ஒரு விருது கூடக் கிடைக்கவில்லை.

பொறுத்துப் பொறுத்து பார்த்த விக்டர் ஹ்யூகோ, விருது வழங்கும் ஃபிரெஞ்சு அகடமிக்குச் சென்றார்.

அங்கு விருது வழங்கும் குழு உறுப்பினரான ரோயர் காலார்ட் என்பவரைச் சந்தித்து,

"என் பெயர் விக்டர் ஹ்யூகோ, நிறைய நாவல்கள் எழுதியிருக்கிறேன். நீங்கள் விருதுக்காக என் பெயரைச் சிபார்சு செய்ய வேண்டும்!" என்று சொன்னார்.

அதற்கு ரோயர் காலார்ட்,

"விக்டர் ஹ்யூகோவா? நான் கேள்விப்பட்டதேயில்லையே," என்று கூற விக்டர் ஹ்யூகோ அதிர்ந்து போனார்.

இருந்தாலும் சமாளித்துக் கொண்டு,

"நான் எழுதிய நாவல்களைத் தருகிறேன். படித்துப் பாருங்கள்!" என்று சொல்ல.

"மன்னிக்கவும் எனக்குப் புத்தகம் படிக்கும் பழக்கமே இடையாது" என்றார் காலார்ட்.

'விருது வழங்கும் குழுவின் உறுப்பினர் புத்தகம் படிக்கும் பழக்கம் இல்லாதவரா?' என விருதின் விதியை நொந்தபடி சென்றார் விக்டர் ஹ்யூகோ.

## குறும்பான பதில்



ஒரு விருந்தின் போது எழுத்தாளர் மார்க் ட்வைனை விட சற்று வயதான ஒரு பெண் ஏகப்பட்ட மேக்-அப்புடன் அவரிடம் வந்து,

"என்னுடைய வயது என்னவென்று சொல்லுங்கள் பார்க்கலாம்?" என்றார்.

அதற்கு மார்க் ட்வைன்,

"உங்கள் தோற்றத்தைப் பார்த்து என்னால் வயதைக் கண்டுபிடிக்க முடியவீல்லை. ஆனால் நீங்கள் தெருவில் என் எதிரே வந்தால், கண்டிப்பாக நான் உங்களைப் பார்த்து விசிலடிப்பேன்.

பிறகுதான் உங்கள் வயதைப் பற்றி யோசிக்கத் தொடங்குவேன்!" என்றார் குறும்புச் சிரிப்புடன்.



Regd. as a News Paper at the G.P.O.(QD/63/NEWS/2000)

இரத்தினங்கள்

Accredited by National Gem & Jewellery Authority

அருள் ஜுவலர்ஸ் ARUL JEWELLERS

↓ இது ஒரு பழைய சங்கதி. 1930ம் ஆண்டு நடைபெற்ற ஒரு தொடர்நடன நிகழ்ச்சியின்போது தொடர்ந்து பல மணிநேரம் நடனமாடியமையினால் களைப்புற்ற பெண் மயங்கிவிழும் போது, அவளுடன் சேர்ந்து ஆடிய ஆண் ஆட்டக்காரர் கீழேவிழுந்து விடாமல் தாங்கிப் பிடிக்கிறார்.

இவர்கள் 1930ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் 1931ம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதிவரை மொத்தம் 5148 மணி 28ம் நிமிஷம் 30 நொடிகள் தொடர்ந்து ஆடியிருக்கிறார்கள். சாதனைகள் புரிவதிலும் சங்கடங்களை ஏற்றாக வேண்டி இருக்கும் என்பதற்கு இது ஒரு சான்று.

# ப(ா)லே நடனம்



# தொழிலாளர் தினத்தில்...




↑ கடந்த மே மாதம் 1ம் திகதி இங்கிலாந்தின் இலண்டன் நகரில் தொழிற்சங்கங்கள் மற்றும் கட்சிகள் பெரும் ஊர்வலங்களையும், கொண்டாட்டங்களையும் நடத்தின.

சமதர்ம கொள்கையில் கவரப்பட்ட இங்கிலாந்தின் 'கம்யூனிஸ்ட்' கட்சியின் ரீ.ஐ.கே.பீ. தொண்டர்கள் தொழிலாளர் தினத்தன்று முதலாளித்துவக் கருத்தால் கவரப்பட்டு இங்கிலாந்தை முதலாளித்துவத்தின்பால் இட்டுச் சென்ற இங்கிலாந்தின் முன்னாள் பிரதமரும், உலகப் புகழ் பெற்ற தலைவர்களில் ஒருவருமான வின்ஸ்டன் சேர்ச்சிலின் சிலை மீது தமது கோபத்தைக் காட்டியுள்ளனர்.

இலண்டன் பாராளுமன்றப் பூங்காவில் உள்ள அவரது சிலையில் இதயத்தைக் கிழிப்பது போன்றும், இதயத்தில் இருந்தும் அவரது வாயில் இருந்தும் இரத்தம் ஓடுவது போலவும் சித்தரித்து சிவப்பு மையைப் பூசி ஆர்ப்பரிக்கும் காட்சிதான் இது.



ஸ்ரீ கல்யாணி
ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேழைகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

↓ மனிதர்கள் தங்கள் இனவிருத்திக்கு
கால நேரம் பார்ப்பதில்லை.
ஒரு வருடத்தின் எந்த வேளையிலும்
குழந்தைகளை பெற்றெடுப்பார்கள். ஆனால்
பறவைகளும் மிருகங்களும்
ஏனைய உயிரினங்களும் குறிப்பிட்ட
காலத்தில் மட்டும் தங்கள் குஞ்சுகளையும்
குட்டிகளையும் பெற்றெடுக்கின்றன.
நவீன யுகத்தில் மனிதர்களை
மிருகங்கள் பின்பற்றி விடுகின்றனவோ
என்று எண்ணத் தோன்றுகின்றது.
படத்தில் காணப்படும் இரு முயல்
குட்டிகளும் குறிப்பிட்ட காலத்துக்கு
முன்னரே தாயின் வயிற்றிலிருந்து
வெளியேறியுள்ளன.
பொதுவாக குளிர் காலத்துக்கு
முன்னரே முயல்கள் குட்டிகளை ஈனும்.
இந்த இரு குட்டிகளின் தாய் முயல்
உறைபனி காலத்தில் குட்டிகளை
பெற்றெடுத்தமையினால் தானோ
என்னவோ இவற்றை அணைத்து
வளர்க்காமல் அம்போ என்று ஓடிவிட்டது.
இவை ஒவ்வொன்றும் 4 அவுன்ஸ்
எடையில் இருந்தன.
கண்கள் கூடத் திறக்கவில்லை.
இவை இப்போது
'ஹார்ட் பியூரி' வன விலங்குகள் பாதுகாப்பு
மையத்தில் வைத்து பாதுகாத்து
வரப்படுகின்றன.

# மிக அபூர்வம்





← இப்போதெல்லாம் ஒரு நாள் போட்டிகளில் சகலதுறை ஆட்டக்காரர்கள் அதிகம் உள்ள அணிகள் தான் வெற்றியைத் தம் பக்கம் கனிகரித்துக் கொள்கின்றன. இந்த வகையில் அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்களைக் கொண்டுள்ளன.

இந்த இரு அணிகளைத் தவிர்த்து பாகிஸ்தான் அணியைச் சொல்லலாம். அவர்களில் அப்துல் ரசாக் மற்றும் அஸார் மெஹ்மூத் ஆகியோர் முதன்மையானவர்கள்.

சமீப காலமாக பாகிஸ்தான் அணியின் சிறந்த வீரர்களில் ஒருவராகப் பிரகாசித்து வருகிறார் அப்துல் ரசாக். நடுத்தரத் துடுப்பாட்ட வரிசையில் பலம் மிக்க வீரராக விளங்கும் இவர், பந்து வீச்சிலும் பிரகாசிக்கத் தவறுவதில்லை.

சமீபத்தில் நடந்து முடிந்த 7வது ஆசியக் கோப்பைப் போட்டியில் பாகிஸ்தான் முதன் முறையாக ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

இந்தப் போட்டியில் அப்துல் ரசாக் மட்டை வீச்சுக்கு அவ்வளவாக வேலை இருக்கவில்லை. பந்துவீச்சுக்கு மட்டும் வேலை இருந்தது. இந்தியாவுக்கு எதிரான போட்டியில் ரசாக் சிறப்பாகப் பந்து வீசி, இந்தியாவின் பலம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசையைச் சிதறடித்தார். இப்போட்டியில் 28 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதில் சச்சின், ட்ராவிட், அஸார் ஆகியோர் அடங்குவர்.

பங்களாதேஷிற்கு எதிரான போட்டியில் அதிக ஓட்ட வித்தியாசத்தால் (232) வென்று சாதனை படைத்தது பாகிஸ்தான். இதற்கு ரசாக்கின் பந்து வீச்சும் ஒரு காரணம் என்றால் மறுப்பதற்கில்லை.

இப்போட்டியில் ரசாக் 4 ஓவர்கள் பந்து வீசி, 5 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# பிரகாசிப்பு

# 1வது பிறந்த நாள் வாழ்த்து



கற்ஜா மகாலிங்கம்

16.04.2000

[illegible]



[illegible]